# வேம்பு



இதழ் 01

யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

## தமிழ் மன்றம் – 2011

J/Vemb... High School
Acc
Class
Date:

## யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

Vembadi Girls' High School
Library
ACC. No: M.130
CLASS No: 050
DATE: 02-08-2011

## தமிழ் மன்றம்

# வேம்பூ

## மலர் வெளியீடு

### பிரதம அதிதி:

**பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா**
தமிழ்த்துறை, பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

**திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா**
ஆசிரியர்,
உடுவில் மகளிர் கல்லூரி

**காலம்: 02.08.2011**
**நேரம் : நண்பகல் 12.00 மணி**
**இடம் : மேபிள் தம்பையா மண்டபம்**

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு'

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : வேம்பூ |
| இதழாசிரியர் | : யோ. நிருஷா |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 70 gsm (Bank) |
| நூலின் அளவு | : B5 |
| அச்சு எழுத்து | : 12 புள்ளி |
| பக்கங்கள் | : 90 + XI + விளம்பரங்கள் |
| பதிப்பு | : 02-07-2011 |
| வெளியிடுவோர் | : தமிழ் மன்றம் |
| அச்சிட்டோர் | : குரு பிறிண்டேர்ஸ் |
| | 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. |

# தமிழ்த் தாய் வாழ்த்து

நீராரும் கடல் உடுத்த நிலமடந்தைக்கு எழில் ஒழுகும்
சீராரும் வதனம் எனத் திகழ் பரத கண்டம் இதில்
தக்க சிறு பிறைநுதலும் தரித்த நறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திரவிட நல்திருநாடும்
அத்திலக வாசனை போல் அனைத்துலகும் இன்பம் உற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே

பல் உயிரும் பல உலகும் படைத்து அளித்துத்துடைக்கினும் ஓர்
எல்லை அறு பரம் பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன் உதரத்து உதித்து எழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறன் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

**மனோன்மணீயம் பே. சுந்தரம்பிள்ளை**

Vembadi Girls' High School
Library
ACC. No: M130
CLASS No: 005.0
DATE: 02-08-2011

# வாழ்த்துரை



யாழ்ப்பாணத்து பெண்கல்விப் பாரம்பரியத்திலே வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு நிலையானதோர் இடம் உண்டு. எமது பெண்பிள்ளைகள் ஆங்கிலக்கல்வியைப் பெற்று உயர்ந்த உத்தியோகங்களை வகிக்கவும் பொதுப்பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடவும் பயிற்சியளித்த பெருமை இந்தக் கல்லூரிக்கு உண்டு.

ஆங்கிலக் கல்வியைப்புகட்டி அறிவார்ந்த பெண்கள் சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்று விரும்பிய மிசனரிமாரின் கனவுகள் இக்கல்லூரியினூடும் நனவாயின.

ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வணிகம், கலை எனப் பரந்து பட்ட துறைகளில் அழியாத முத்திரை பதித்துள்ள இக் கல்லூரியை அறியாதார் அறியாதாரே.

கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தன்னைக் இக் கல்லூரியுடன் இணைத்துக் கொண்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றும் அதிபர் திருமதி.கமலேஸ்வரி பொன்னம்பலம் அவர்களின் சேவை மகத்தானது.இன்று பல்வேறு வகையிலும் புகழ் பெற்று விளங்கும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அயராது பாடுபட்ட அதிபர் திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் அவர்கள் பணிஓய்வு பெறப்போகிறார் என்பதை அறியும் போது மனம் கவல்கிறது. யாழ்ப்பாணத்து புகழ் பூத்த பெண் அதிபர்கள் வரிசையிலே திருமதி.கமலேஸ்வரி பொன்னம்பலம் அவர்களுக்கும் அழியாத இடமுண்டு.

அவரது பணிஓய்வைக் கௌரவிக்கும் முகமாகவோ என்னவோ, "வேம்பூ" என்ற சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் .வேம்படி மகளிர் மாணவிகளுக்குத் தமிழில் உள்ள ஈடுபாட்டையும் திறனையும் ஆர்வத்தையும் பல தடவை தரிசித்திருக்கிறேன். இங்கு தமிழ் கற்கும் ஆசிரியர்களும் ஆர்வத்து ஈடுபாட்டுடனும் பணியுடன் ஒன்றி இருப்பதை நான் நன்கு அறிவேன்.

இந்த "வேம்பூ" என்ற சஞ்சிகையை உருவாக்க உழைத்த அனைத்து உள்ளங்களையும் பாராட்டுகிறேன்.வாழ்த்துகிறேன்.குறிப்பாகத் திருமதி சாந்தநாயகி வீரசிங்கம் அவர்கள் கருமமே கண்ணாக இம் மலர் முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுழைத்தமையை நான் நன்கு அறிவேன்.அவருக்கு எனது பாராட்டுக்கள். கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு எனப் பல துறைகளிலும் தனித்துவ முத்திரை பதித்த வேம்படி மகளிர் கல்லூரி "வேம்பூ" என்ற மலரிலும் முத்திரை பதிக்கும் என்று நம்புகிறேன். தமிழ் மக்களின் பண்பாட்டோடு ஒன்றிப் போனது "வேம்பு" பலவகைப் பயன்பாடுடைய வேம்பூவின் பெறுமதியும் பெரியது.

எல்லா வகையிலும் "வேம்பூ" சிறக்க எமது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் .எஸ்.சிலிங்கராஜா**

தமிழ்த்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# அதிபரின் வாழ்த்துக்கள்



எமது பாடசாலையின் தமிழ் மன்றம் தமிழ் மணம் வீசும் வகையில் வெளியீடு செய்யும் "வேம்பூ" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழையும் மாணவர் மத்தியில் வளப்படுத்தும் தமிழ் மன்றத்தின் பங்கும் பணியும் அளப்பரியது.அந்த வகையில்,கல்லூரிச் சோலையில் முதலாவது "வேம்பூ" மலர்கிறது. காலதேச வர்த்த மானங்களிற்கு இணங்க மாணவி களின் ஆக்கச் செயற்பாடுகளை மேலும் ஊக்குவிக்கும் வகையில் வெளியிடுவதனை இட்டு மகிழ்வடைகிறேன். அத்துடன் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள் என்போரின் ஆக்கங்களும் தாங்கி வருவது இம் மலருக்கு பெருமை சேர்க்கிறது.

இம் மலர் வெளிவருவதில் ஆர்வத்துடன் செயற்பட்ட மாணவியரையும் அவர்களை நல்வழிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டும் அதேவேளை, தமிழ்மன்றத்தின் பணிகள் இனிவரும் காலங்களில் சிறப்பாக மிளிர இறையருளுடன் கூடிய எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம்**

அதிபர்

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியில் பல்வேறு மன்றங்கள் பல்வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. இவற்றுள் மொழி, கலை, கலாசாரப் பண்புகளைப் பேணிப் பறைசாற்றும் வகையில் செயற்பட்டுவருகின்ற தமிழ்மன்றத்தின் பணிகள் மகத்தானவை.

எமது மாணவிகள் பாட அறிவோடு மட்டும் நின்று விடாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தமது திறமையை இனங்காண உறுதுணையாக இருக்கின்ற வகையிலும் அதன் பணி முன்னோடியானது என்பது வெள்ளிடை மலையாகும்.

இவ் வருடம் முதன் முதலாக வெளிவரும் "வேம்பூ" மலரின் வெளியீடு-காலத்தின் சுவடுகளில் தனக்கென தனித்துவமான பண்பாட்டோடு எமது மாணவிகளின் ஆக்கங்களைத் தாங்கி தொடர்ந்து வெளிவர இறைவனுடைய ஆசிகளை வேண்டி வாழ்த்துவதில் பேருவகை அடைகிறேன்.

"தமிழ் மன்றத்தின் பணிகள் மேலும் சிறந்தோங்க நல்வாழ்த்தக்கள்"

**இ. முத்துக்குமாரன்**
பிரதி அதிபர்.

# பொறுப்பாசிரியர்களின் உள்ளங்களிருந்து...





தமிழ்மொழி தனித்துவமானது; மனதிற்கு இன்பம் தரவல்லது. அதன் பண்பாட்டுக் கோலங்கள் சிறப்புமிக்கவை. அவற்றை மாணவர்கள் அறிய, சிந்தனை களை நல்வழிப்படுத்த, கற்பனை ஊற்றுக்களை நிலைப்படுத்த, சாதனை களை வெளிப்படுத்த "வேம்பூ" களம் அமைக்கின்றது என்பதில் ஐயமில்லை.

"வேம்பூ" தமிழ் மணம் வீசி எங்கும் விளங்க, மாணவர்களின் முயற்சிகளிற்கு பக்கபலமாக பொறுப்பாசிரியராக இருக்கின்றமையை நினைத்து அகமகிழ்கின்றோம். முதல் இதழாக இவ் "வேம்பூ" நிலைபெற மாணவர்கள், ஆசிரியர்கள், உபஅதிபர்கள், பிரதிஅதிபர், அதிபர் மற்றும் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டுமுயற்சியே ஆகும்.

"வேம்பூ" மலர்ந்து அதன் குணம் வெளிவர உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் இறையருள் நிறைவாகக் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை என்றென்றும் இறைஞ்சி நிற்கின்றோம்.

தமிழ் மன்றத்தின் அருமருந்தான "வேம்பூ" வருடம் தோறும் வெளிவந்து தமிழுக்கு வளம் கொழிக்க நாம் மனதார வாழ்த்துகின்றோம்..

**திருமதி சாந்தநாயகி வீரசிங்கம்** **செல்வி இரம்மியா நடேந்திரா**

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து....



வைகறை விடியலை வரவேற்று
வையகம் தனில் தமிழன்னையினதும்
கல்லூரி அன்னையினதும் புகழ்போற்றி
துளிர்விடத் தொடங்குகிறது நம் வேம்பூ

ஊரும் உலகும் போற்றிடவே,
உயர் கல்லூரிப் புதல்விகளின் முத்தமிழும்
பொங்கும் புகழ் பரப்பி நிற்கும்
பெருமை வேம்படியாளிற்கன்றோ!

சீர்மிகு தமிழ்த் தலைமைப்பெரியார்கள்
உள்ளங்களின் உழைப்பும் ஊக்கமும்
தமிழ் அன்னைக்கு அணி சேர்த்திட,
மெல்ல விரிகின்றது வேம்பூ.

வேம்படியாளின் செல்வப் புதல்விகளது
நெஞ்சையள்ளும் செந்தமிழ் ஆக்கங்களை
மற்றவர் கரங்களிலும் மனங்களிலும்
வேரூன்ற வைத்திட அவதரிக்கின்றது வேம்பூ.

நன்றி மறவா நற்பண்புக்கமைய
நாடியபோதெல்லாம் உதவி நல்கிய
நல்லுயர் உள்ளங்களுக்கெல்லாம்
நன்றி பாராட்டி, நாளைய நாட்களிலும்

வேம்பூவின் வருகையானது நீடு புகழுடன்
நிலைத்து நிற்க வேண்டுகின்றேன்.

**யோ. நிருஜா**

# தலைவரின் சிந்தனையில் ......



யாழ் வேம்படியாளின் தமிழ் மன்றத்தால் விளைவித்த விழுதொன்றாய் "வேம்பூ" இதழொன்று மலர்கிறது. இன்று, புகழ் ஓங்கிய துளிர்விடும் வேம்பூ மாணவர்களின் பெறுமதி மிக்க ஆக்கங்களினூடாக வைரம் பாய்ந்த மலராக வளரும் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் புதிதான மலரொன்றாய் மலர்ந்திருக்கும் "வேம்பூ" வருகின்ற நாட்களிலும் தொடர்கின்ற மலராய் மலர்ந்து மணம் பரப்பும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்களின் அறிவுத்தேடல்களுக்கும் பல்துறைசார் திறன்களை வெளிக்கொணருவதற்கும் ஏற்றவகையில் மாணவர்களின் கட்டுரைகளையும் உள்ளடக்கியதாக மலர்ந்த இந்த "வேம்பூ" ஆண்டுக்கொருமுறை மலர்ந்து தமிழ் அறிவு மணம் பரப்ப எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

மேலும் மன்றவளர்ச்சியிலும் நூல்வெளியீட்டிலும் முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மற்றும் இந்நூலிற்கு ஆக்கங்களைத் தந்துதவியும் ஏனைய வழிகளிலும் துணை புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி. திருமகள்**
மன்றத் தலைவி

"வேம்பூ" சிறப்புற நல்வாழ்த்துக்கள்!

1. த. சிவரூபி
2. இ. வினோஜா
3. ப. வினோதா
4. ப. லாவண்ஜா
5. லோ. டென்சிஜா
6. ம. மயூரி
7. ந. சசிரேகா
8. டெ. ஆர்த்தி
9. கு. காயத்திரி
10. A. கார்த்திகா

2006 உயர்தரம்

கலைப்பிரிவு

# தமிழ் மன்றம் - 2011



**இடமிருந்து வலம் நிற்பவர்கள்:** செல்வி ஜெ. குபேரகா (உபதலைவர்), செல்வி ஸ்ரீ. சமித்ரா (செயலாளர்), செல்வி இ. லக்சியா (பொருளாளர்), செல்வி யோ. நிரோஜா (இதழாசிரியர்), **செயற்குழு உறுப்பினர்கள்** செல்வி சி. ஸவிதா, செல்வி மோ. திவ்யபாரதி, செல்வி பொ. வினோதா, செல்வி நா. புராதனி, செல்வி இ. லமேரிகா, செல்வி செ. பிரவீனா
**இடமிருந்து வலம் இருப்பவர்கள்:** திருமதி சா. வீரசிங்கம், (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி ரா. முத்துக்குமாரன் (பிரதி அதிபர்) செல்வி சி. திருமகள் (தலைவர்) திருமதி க. பொன்னம்பலம் (அதிபர்), திருமதி சி. ஜெயபாலன் (உபஅதிபர்), செல்வி இரம்மியா நடேந்திரா (மன்றப் பொறுப்பாசிரியர்)

# பொருளடக்கம்......


1. தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கட்டங்கள் 01
2. சாபமும் விமோசனமும் 05
4. தொடக்ககால ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய தேடல்கள் 09
5. கைகேயி சூழ்வினைப் படலத்தின் ஊடாக வெளிப்படும் கம்பனின் கவித்துவம் 20
6. பெற்றோரைப் பேணுவோம் 25
7. முழு நிலவாய் ஒளிரும் தமிழ் 26
8. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் 27
9. இளவரசியும் வெள்ளைப்புறாக்களும் - சிறுவர் நாடகம் 29
10. அன்பினால் உலகாள்வோம் 32
11. காலைக் காட்சி 34
13. விருந்தோம்பல் 35
14. உண்மையே உயர்வு தரும் 36
15. தமிழ் அன்னைக்காய் 37
16. அறிந்து கொள்ளுவோம் 38
17. கண்டு கொண்டேன் 38
18. மனித உரிமைகள் இன்றேல் மனித மாண்பும் இல்லை 39
19. பன்மைப் பண்பாட்டுக் கல்வி 40
20. தமிழ் பெற்ற ஔவையார் 43
21. அதிஷ்டம் 44
22. கம்பன் வழியில் இத்தாலியக் கம்பன் 45
23. என் இன்பத் தாய் 48
24. யாழ்ப்பாணத்து சுவரோவியப் போக்கும் மீள்பார்வையும் 49
25. படித்தவற்றில் பிடித்தது 53
26. தமிழ் இனி என்னாகும்? 54
27. பொன் மாலைப் பொழுது 55
28. வேம்பு 56
29. தமிழ் பண்பாடு - மயக்கமும் தெளிவும் 57
30. தமிழ் மொழியும் விஞ்ஞானமும் 61
31. மலர்ந்திடும் மொட்டுக்கள்.... (சிறுகதை) 63
32. உள்ளத்தனையது உயர்வு 67
33. தமிழ் தந்த கம்பன் 69
34. உலகம் போற்றும் தமிழ் மொழி 71
35. ஆடற்கலையும் தமிழ்மொழியும் 72
36. காலத்தால் அழியாத திருக்குறள் 76
37. வாழவழி இருக்கும் போது 80
38. நாடகக் கலையின் முக்கியத்துவம் 81
39. மாணாக்கர் 82
40. எண்ணும் எழுத்தும் 83
41. தாய் (க்கு) கிடைத்த பரிசு 84
42. நாட்டார் இலக்கியங்களின் செல்வாக்கு 85

# தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கட்டங்கள்

**கலாநிதி துரை மனோகரன்**
தமிழ்த்துறைத் தலைவர்
பேராதனைப் பல்கலைக்கழகம்.



தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ் இலக்கியம் தன்னை வேண்டியவாறு விசாலித்து வளர்ந்து வந்துள்ளது. அதற்கேற்ப, காலந்தோறும் பல திருப்பு முனைகளையும் வளர்ச்சிக் கட்டங்களையும் பெற்று, அது வளர்ச்சியுற்று வந்துள்ளமையைக் காணலாம். தமிழ் இலக்கிய வரலாறு அதனைத் தெளிவுற இனங்காட்டி வந்துள்ளது.

தமிழ் இலக்கிய வரலாற்றினை அறிந்தோர் சங்ககால இலக்கிய வளர்ச்சி பற்றித் தெரிந்திருப்பர். இன்று எமக்குக் கிடைக்கும் சங்க இலக்கியங்களை நோக்கும் போது, சிறந்த செப்பமுற்ற இலக்கியங்களாக அவை தோன்றுவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே தமிழ் இலக்கியத்தின் தோற்றம் அமைந்திருக்கும் என்பதைஉணரமுடிகின்றது. எந்நாட்டு, எம்மொழி இலக்கியத்தின் தோற்றத்திலும் முன்னிடம் பெறுபவை, ஏட்டில் எழுதா இலக்கியங்களான நாட்டார் இலக்கியங்கள் ஆகும் அவ்வகையில், நாட்டார் இலக்கியங்களே தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கான முன்னோடி இலக்கியங்களாக விளங்கின.

சங்க இலக்கியங்களாக இன்று கிடைப்பவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற இருபெரும் தொகை நூல்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் எட்டுத்தொகை நூல் ஒவ்வொன்றும் தனித்தனிச் செய்யுள்களின் தொகுப்பாக விளங்குகிறது. பத்துப்பாட்டு நூல் ஒவ்வொன்றும் நூறு அடிகளுக்கு மேற்பட்ட தொடர் நிலைச் செய்யுளாக விளங்குகிறது. இவ்வகையில், சங்க இலக்கியத்தின் தனிச்செய்யுள்கள் ஒரு வகையினவாகவும், தொடர்நிலைச் செய்யுள்கள் இன்னொரு வகையினவாகவும் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

களப்பிரர் காலம் அல்லது சங்கமருவிய காலம் என்று குறிப்பிடப்படும் கி.பி 3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 6 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி, தமிழ்நாட்டில் அரசு என்னும் நிறுவனம் திட்டமிட்ட வளர்ச்சி பெறும் காலகட்டமாக அமைந்தது. கர்நாடகப் பிரதேசத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்தவர்களாகக் கருதப்படும் களப்பிரர், சமண, பௌத்தச் சார்பு கொண்டவர்களாகவும் ஆரியர் புகுத்திய வேதவேள்விகளை மறுப்பவர்களாகவும் விளங்கினர். அவர்கள் காலத்தில் இருந்து தமிழ்நாட்டில் சிறுசிறு ஆட்சிப்பிரிவுகள் கலைந்து ஒருமுகப்பட்ட ஆட்சிமுறை வேரூன்றத் தொடங்கியது.

சங்கமருவிய காலத்தில் தோன்றிய திருக்குறள் தமிழ் இலக்கியவுலகில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது பொருளிலும், வடிவிலும் புதிய ஒரு செல்நெறியை அது ஏற்படுத்தியது அறம், பொருள், இன்பம் ஆகிய முத்துறை சார்ந்த விடயங்களை முதன்முதலாகச் செப்பும் நூலாக அது அமைந்தது தமிழ் இலக்கியத்துறையில் ஒரு புதிய வளர்ச்சிக்கட்டத்தை ஏற்படுத்தியது அதன் எளிமையும், சுருக்கமும், ஆழமும், மனிதநேயமும் இலக்கியச் சிறப்பும்

திருக்குறளுக்குத் தனித்துவத்தை அளித்துள்ளன. தமிழில் அறநூல்களுக்கு வித்திட்ட பெருமையும் திருக்குறளுக்கு உண்டு.

இதே காலகட்டத்தில், இதற்கு அடுத்த ஒரு வளர்ச்சிக்கட்டமாக அமைவது, தமிழில் காவியத்தின் தோற்றமாகும். சங்க இலக்கியத்தில் இடம் பெறும் தொடர்நிலைச் செய்யுள் வடிவத்தைக் கதை பொதித்த காவிய வடிவமாக்கியவர் இளங்கோ ஆவர். தமிழ்நாட்டின் மண்வாசனை கலந்தவொரு கதையைத் தேர்ந்து, ஏற்கனவே சங்ககாலத்திலிருந்து வழங்கிவந்த தொடர்நிலைச் செய்யுள் வடிவத்துடன் அவர் இணைத்தார். அத்தோடு தமது ஆற்றலையும் ஆளுமையையும் மூலதனமாகக் கொண்டு, தமிழின் முதற்காவியமாகவும் சிறந்த தமிழ்க் காவியங்களுள் ஒன்றாகவும் விளங்கும் சிலப்பதிகாரத்தை இயற்றினார். அவரது இம்முயற்சி, தமிழ் இலக்கியத்தின் இன்னொரு வளர்ச்சிக்கட்டமாக அமைந்தது அவரைப் பின்பற்றி, அவரது சமகாலத்தவர் எனக்கருதப்படும் மதுரைக் கூலவாணிகள் சாத்தனார், சிலப்பதிகாரத்தோடு கதைத்தொடர்புடையதான மணிமேகலையைப் படைத்தார். அகவல் பாவில் அமைந்த இக்காவிய முயற்சிகள் பல்லவர் - பாண்டியர் காலத்திலும் தொடர்ந்தன.

சங்கமருவிய காலத்தில் தோன்றிய தொல்காப்பியம், பழந்தமிழ் இலக்கியங்கள் தொடர்பான பல்வேறு விடயங்களையும் ஆய்ந்து இயற்றப்பட்ட நூலாக விளங்குகிறது. தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு பற்றிய ஆய்வுக்கான திறவுகோலாகத் தொல்காப்பியம் திகழ்கிறது. தொல்காப்பியத்தின் தோற்றம், தமிழ் இலக்கிய ஆய்வின் முக்கிய வளர்ச்சிக்கட்டமாக விளங்குகிறது.

சங்கமருவிய காலத்தில் புதியதொரு வளர்ச்சிக்கட்டத்தை அறிமுகப்படுத்தியவர், காரைக்காலம்மையார். பக்தி இலக்கியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டோரில் ஒருவரான அவர், தமிழ் இலக்கியத்தின் புதிய செல்நெறிக்கும் கால்கோள் இட்டவர் ஆவர். சங்கமருவியகாலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த அறக்கருத்துகளைக் கூறுவதற்கேற்ற பா வடிவமாக விளங்கிய வெண்பாவின் வாயிலாகப் பக்தி அனுபவத்தை முழுமையாக வெளிப்படுத்த இயலாது என உணர்ந்த அவர், விருத்தம் என்ற புதிய செய்யுள் வடிவம் மூலம் தமது உணர்வுகளைப் புலப்படுத்த விழைந்தார். அவரின் இத்தகைய முயற்சி, பின்னர் பல்லவர் பாண்டியர் காலப் பக்தி இலக்கிய வளர்ச்சிக்குச் சிறந்தவொரு பங்களிப்பாக அமைந்தது. பல் பாண்டியர் காலப் பக்தி இலக்கிய வளர்ச்சியில் பயன்மிகு பணிபுரிந்தவர்களான நாயன் களும், ஆழ்வார்களும் தமது பக்திப்பெருக்கையும், இலக்கிய ஆற்றலையும் சிறப்பாகப் புலப்படுத்துவதற்குக் காரைக்காலம்மையார் அறிமுகம் செய்த விருத்தப்பா பெருமளவில் அனுசரணையாக விளங்கியது.

தமிழின் பேரிலக்கியமாக விளங்கும் காவியத்தின் தோற்றம் சங்கமருவிய காலத்திலேயே தொடக்கம் பெற்றுவிட்டபோதிலும், சோழப்பெருமன்னர் காலமே அவ் விலக்கியம் செழித்து வளர உந்துசக்தியாக விளங்கியது சோழப் பேரரசுக் காலத்தில் எழுச்சி பெற்ற பேரிலக்கியமாகிய காவியம், தனக்குரிய சிறந்த இடத்தினைப் பெறுவதற்குரிய முக்கிய காரணங்களுள் ஒன்றாக விளங்கியது, அதன் வடிவமாற்றமாகும். அவ்வடிவ மாற்றத்திற்குக் காரணகர்த்தாவாக விளங்கியவர் திருத்தக்கதேவர். அகவல்பாவில் அமைந்த காவிய வடிவத்தைவிட, விருத்தப்பாவே காவியத்திற்குரிய முழுப்பொலிவினையும் நல்கத்தக்கது என்ற நம்பிக்கையோடு அவர் தமது சீவகசிந்தாமணிக்கு அப்பாவடிவத்தைப் பயன்படுத்தினார்.

விருத்தப்பாவைக் காவியத்துக்குப் பயன்படுத்தியமைதொடர்பாக அவர் ஈட்டிய வெற்றி, பல காவியகர்த்தாக்களையும் அவர் வழியை நாட வைத்தது. அவர்களுள் முக்கியமானவர், கவிச்சக்கரவர்த்தி கம்பர், திருத்தக்கதேவர் அறிமுகப்படுத்திய விருத்தப்பாவைத் தமதுஇராமகாதைக்குப் பயன்படுத்தி, காவியம் பாடுவதில் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்தியவராகக் கம்பர் விளங்கினார். தமிழ்க் காவிய வரலாற்றில் ஒரு வளர்ச்சிக்கட்டமாகத் திருத்தக்கதேவர் விளங்க, இன்னொரு வளர்ச்சிக்கட்டத்தை ஏற்படுத்தியவராகக் கம்பர் திகழ்கிறார்.

தமிழ் இலக்கிய வளர்ச்சிப்போக்கில் காணப்படும் சித்தர் மரபும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆன்மீக நெறிநின்று, கோயில் போன்ற நிறுவனங்களின் எதிர்ப்பாளராகவும், ஏழைபங்காளராகவும் சமயச்சடங்குகள் தொடர்பான அதிருப்தியாளர்களாகவும், உள்ளத்தையே இறைவன் வாழும் இடமாகக் கொண்டவர்களாகவும் விளங்கிய சித்தர்கள், தமிழ்க் கவிதைத்துறையில் புதிய மரபினை ஏற்படுத்தியவர்கள் எளிமையும், ஆழமான உட்கருத்தும், நாட்டார் இலக்கியச்சாயலும் கொண்டவையாகச் சித்தர் பாடல்கள் விளங்குகின்றன. தமிழ் இலக்கியச் செல்நெறியில் ஒரு புதிய பாதையைத் திறந்தவர்களாகச் சித்தர்கள் திகழ்ந்தனர்.

பதினேழாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாற்றில் பிறிதொரு வளர்ச்சிக்கட்டத்தை ஏற்படுத்திய காலகட்டமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சனைகளும், பொருளாதாரச்சீரழிவுகளும் பண்பாட்டுநிலைகளில் ஏற்படத் தொடங்கிய மாற்றங்களும், அதுவரையில் மன்னரையும், தெய்வங்களையும் பெருமைப்படுத்திவந்த தமிழ் இலக்கியம் பொதுமக்கள் பாலும் தனது கவனத்தைச் செலுத்தச் செய்தன. அவ்வகையில் பள்ளு, குறவஞ்சி, நொண்டிநாடகம் முதலான பொதுமக்கள் சார்பு இலக்கியங்களின் தோற்றம் அமைந்தது.

தமிழ் இலக்கியத்துறையில் இன்னொரு வளர்ச்சிக் கட்டத்தை ஏற்படுத்திச் சாதனை புரிந்தவர், ஐரோப்பியரான வீரமாமுனிவர் ஆவர். தமிழ் எழுத்துக்கள் சிலவற்றில் திருத்தங்கள் செய்ததோடு, தமிழ் உரைநடையில் பரமார்த்தகுருகதை என்னும் ஆக்கஇலக்கியத்தை முதன்முதல் ஆக்கியளித்தவராகவும் அவர் விளங்குகிறார். தமிழில் கிறிஸ்தவ காப்பிய வளர்ச்சிக்கு வித்திட்டவராகவும் அவர் திகழ்ந்தார். இவற்றோடு, தமிழில் அகராதித்துறை வளர்ச்சிக்கு முன்னோடியாகவும் அவர் விளங்கினார் பதினெட்டாம் நூற்றாண்டு வீரமாமுனிவரின் சாதனைகளின் களமாக அமைந்தது.

ஆறுமுகநாவலர் சகாப்தம் எனக்கூறத்தக்க பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடை வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கட்டமாக அமைந்தது எளிமையும், தெளிவும் குறியீடுகளும் அமையப்பெற்ற ஆறுமுகநாவலரின் உரைநடை தமிழ் உரைநடை எதிர்காலத்தில் பெறவிருந்த பெரும் செல்வாக்குக் கட்டியம் கூறுவதுபோல் அமைந்தது.

பத்தொன்பதாம்நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழில் தோற்றம் பெறத்தொடங்கிய நாவல் இலக்கியம் தமிழ் இலக்கியத்தில் பிறிதொரு வளர்ச்சிக்கட்டத்தைக் குறித்துநிற்கிறது. இவ்வளர்ச்சிக்கட்டத்துக்கான காரணகர்த்தராக விளங்கியவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை. அவரால் தமிழின் முதல் நாவல் என்ற பெருமையைப் பிரதிபமுதலியார் சரித்திரம் பெற்றுக்கொண்டது.

நவீன இலக்கியத்தின் இன்னோர் இலக்கிய வகையான சிறுகதை, தமிழில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோற்றம் பெறத் தொடங்கியது. இவ்வகையில், புதியதொரு வளர்ச்சிக்கட்டத்தை ஏற்படுத்தியவராக விளங்கி, தமிழ்ச்சிறுகதையின் பிதாமகராகவும் அமைந்தவர் வ.வே.சு.ஐயர். அவருக்கு அடுத்தகட்டமாகச் சிறுகதையின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் புகுத்தி அதற்குப் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியவர் புதுமைப்பித்தன்.

இருபதாம் நூற்றாண்டு பொதுவாகவே நவீன இலக்கியங்களின் வளர்ப்புப் பண்ணையாக விளங்குகிறது. இவ்வகையில் மகாகவிபாரதி தமது முழு ஆளுமையையும் நவீன இலக்கியத்தின் பால் செலுத்திய ஒருவராக விளங்குகின்றார். கவிதையே அவரது ஆற்றலையும் ஆளுமையையும் முழுமையாகப் புலப்படுத்தியது. தமிழ் இலக்கியத்தைப் புதியதொரு சகாப்தத்திற்குத் திருப்பியவர் அவர். பாரதி தமிழ் இலக்கியத்தின் முக்கிய வளர்ச்சிக்கட்டத்தைக் குறிப்பவராக விளங்குகிறார்.

பாரதிக்குப் பின் நவீன தமிழ்க்கவிதையின் இருவேறு வளர்ச்சிக்கட்டங்களை இனங்காட்டுபவராக இருவரைக் குறிப்பிடலாம். ஒருவர் பாரதி வளர்த்த தமிழ்க் கவிதையை இன்னொரு தளத்துக்கு இட்டுச்சென்ற ஈழத்துக் கவிஞர் மஹாகவி (து.உருத்திரமூர்த்தி) மற்றவர், பாரதி அறிமுகப்படுத்திய வசன கவிதையைப் புதுக்கவிதை என்ற பரிமாணத்துக்குக் கொண்டு சென்ற ந. பிச்சமூர்த்தி

நவீன நாடகத்தின் முன்னோடியாக பம்மல் சம்பந்தமுதலியார் விளங்கியபோதிலும் அதனைச் சமுதாயச்சார்பு கொண்ட சிறந்த ஊடகமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதில் பிரக்ஞைபூர்வமாகச் செயல்பட்டவர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணப் பேச்சு வழக்கைக் கையாண்டு, தாம் நன்கு அறிந்த பிரதேசப் பகைப்புலத்தையும், அதன் வாழ்வியலையும் பாத்திரங்களையும் தம் நாடகங்களில் கொண்டுவர முயன்ற முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ் நாடகத்துறையில் புதியதொரு வளர்ச்சிக்கட்டத்தை ஏற்படுத்தியவராக அவர் திகழ்ந்தார்.

இவ்வாறு, தமிழ் இலக்கியம் பல்வேறு கட்டங்களிலும் பல்வித வளர்ச்சி நிலைகளைக் கொண்டதாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இத்தகைய வளர்ச்சிக்கட்டங்கள் தமிழ் இலக்கியப் பாதையைச் செப்பம் செய்யவும், உயிரோட்டம் உள்ளதாக்கவும் காலத்திற்கேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்யவும் பயன்பட்டன. காலப்போக்கில் மேன்மேலும் வளர்ச்சிக்கட்டங்கள் ஏற்பட்டு தமிழ் இலக்கியம் மேலும் வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

☆☆☆

# சாபமும் விமோசனமும்

"புதுமைப்பித்தனது வாபவிமோசனம் – சிறுகதை பற்றிய குறிப்பு"

**முனைவர். வ.மகேஸ்வரன்**
தமிழ்த்துறை
பேராதனைப்பல்கலைக்கழகம்.



இந்திய இலக்கியப் பண்பாட்டுச் சூழலில் அகலிகை என்ற தொன்மம் பலவகையில் நெடுங்காலமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. அதற்கு இராமாயணத்தின் இந்திய உபகண்டப் பரவலாக்கம்தான் வழி சமைத்தது. அந்த வகையில் அகலிகை என்ற தொன்மம் கம்பராமாயணம் வழியாகத் தமிழ்ச்சூழலுக்குள் நுழைந்துகொண்டது.

அகலிகை - என்ற தொன்மம் பற்றிய கதையாடல் தமிழ்ச்சூழலில் பல்வேறு வகையில் வாசிப்புக்குள்ளானதற்கு அது பற்றி வெளிவந்த பல ஆக்கங்களே சான்றாகும். வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியாரது அகலிகை வெண்பா முதல் நி.பி அருளானந்தத்தின் சிறுகதை வரை பல்வேறு கோணங்களில் பலரால் அத்தொன்மம் மறுவாசிப்புக்கும் மறுபடைப்புக்கும் உள்ளானது. அகலிகையும் கற்பு நெறியும் என்ற தலைப்பில் பேராசிரியர் க.கைலாசபதி இதுபற்றி விரிவான கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். "அகலிகை" என்று மகுடமிட்டு அகில இலங்கைக் கம்பன்கழகத்தினருக்காக க.ரகுபரன் தொகுத்த நூலில் அகலிகை பற்றிய படைப்பாக்கங்களின் மூலப் பனுவல்கள் இடம்பெற்றுள்ளன.

அகலிகை என்ற படைப்பை மீள் படைப்பாக்கம் செய்த பலரும் தத்தமது தத்துவத்தளங்களில் நின்று கொண்டு படைப்பாக்கம் செய்தனர். அகலிகை மனமறிந்து தவறிழைத்தாளா அல்லது இந்திரன் மாயம் செய்தானா? அகலிகையின் அறியாமையா மனவிருப்பமா? கௌதமமுனிவர் இதனை எவ்வாறு அங்கீகரித்தார் என்றவாறெல்லாம் அப்படைப்புக்கள் வழி விவாதிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் புதுமைப்பித்தனது சாபவிமோசனம் என்ற சிறுகதையையும் நோக்கவேண்டியுள்ளது. சாபவிமோசனத்துக்கு முன்னர் "அகலிகை" என்ற சிறுகதையொன்றையும் அவர் எழுதியிருந்தார். அகலிகை என்ற சிறுகதையில் கௌதமமுனிவரின் கூற்றுவழி இந்திரனும் அகலிகையும் மன்னிக்கப்படுகிறார்கள். எனினும் அவரிடமிருந்து எழும் வினாவும் அவர் காணும் அமைதியும் அவரைத்துறவி என்ற ஸ்தானத்தின் உயர்ச்சியைத்தொட வைத்தது.

"அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக்கூடாதா?

"கண்ணே அகல்யா அந்தச் சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்றுக் கல்லாய்ச் சமைந்துவிட்டது?

இந்த வினாக்கள் பலவிதமான அதிர்வுகளை ஏற்படுத்தவல்லன. இறுதியாக "உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கி விடுகிறது. மனத்தூய்மையில்தான் கற்பு. சந்தர்ப்பத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும்".

என்று சமாதானங்கூறி இந்திரனையும் அகலிகையையும் மன்னிக்கும் பாங்கில் அவரது ஆக்கம் அமைந்திருந்தது. ஏனைய ஆக்கங்கள் யாவும் ஒருநிலைப்பட்டு கற்பை நிலைநிறுத்தி அதற்கான தாரதம்மியங்களைத் தேட புதுமைப்பித்தன் கற்புக்கான புதிய வியாக்கியானத்தை

முன்வைக்கிறார். இது அவரது கொள்கை வழியான விளக்கம் எனலாம். மணிக்கொடி கால எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளில் தொன்மங்களைக் கட்டுடைத்துப் பார்த்ததன் விளைவே இது எனலாம். கற்பு நெறிக்கு பொன்னகரத்தில் புது விளக்கம் ஒன்றை முன்வைத்தவர் புதுமைப்பித்தனே என்பதை இவ்விடத்தில் மனங்கொள்ளல் அவசியமானதாகும்.

இரண்டாவது முறையாகவும் அகலிகை தொன்மம் புதுமைப்பித்தனின் படைப்பாளுமைக்கு உள்ளாகின்றது. இப்போதும் கதையின் களம் அகலிகை சாபத்தையே சுற்றி மையங்கொள்கிறது. ஆனால் வேறு கோணத்தில். “அகலிகை” யில் பாவப்பட்ட சபிக்கப்பட்ட பெண்ணான அகலிகை, இங்கே வேறோர் வகையில் விஸ்வரூபம் கொள்கிறாள். அவளுக்கு பாவவிமோசனம் வழங்கிய இராமன் இங்கு கேள்விகுள்ளாக்கப்படுகிறான். இலங்கையில் இராமன் சீதையைத் தீக்குளிக்கச் செய்த செய்தி இங்கு பிரகடனப்படத்தப்பட்டு அதன் வழி இராமன் என்கிற தன்னேரில்லாத் தலைவனின் செயற்பாடுகள் விவாதத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன.

**அகலிகை சாபவிமோசனத்தின்போது-**

“உலகத்தின் தன்மை என்ன இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது. மனசுக்கும் கரண சுத்தியின் நிததானத்துக்கும் கட்டுப்படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்காக பாத்திரத்தின் மீது தண்டனை? அம்மா!” என்று நியாயம் சொன்ன இராமன் இலங்கையில் தனது தர்மபத்தினி கற்புடையவள் என்பதை பலர் முன் நிரூபிக்க அவளைத் தீக்குளிக்கச்செய்தது முறையா? என்பதுதான் இந்தச்சிறுகதையின் மையப்புள்ளியாக நின்று இயங்குகின்றது. அவரது “அகலிகை” சிறுகதையின் தொடர்ச்சியாகவே சாபவிமோசனம் அமைகின்றது.

சாபவிமோசனத்தில் முதலாவது களம், அகலிகை சாபவிமோசனம் பெறுவதாக அமைகின்றது. அகலிகையும் கௌதமனும் மகிழ்வெய்தி இருப்பினும் அவர்களது உள்மனம் வெறுமையான விசாரத்திலே நின்றலைகின்றது. இரண்டாவது களம் கௌதமரும் அகலிகையும் சரயு நதிக்கரையில் குடிசை அமைத்து வாழ்வதும் அவர்களுக்கும் இராமன் - சீதைக்குமிடையிலான ஊடாட்டம் சித்தரிக்கப்படுகிறது. அத்துடன் அவர்கள் முடிசூடாமல் காட்டுக்குப்போன சம்பவம் விபரிக்கப்படுகின்றது. மீண்டும் மனவிசாரமும் மனப்பாரமும் தாங்கிக்கொண்டு இத்தம்பதியினர் வாழ்கின்றனர். மூன்றாவது களம், அவர்களது பயணம் மிதிலை நோக்கியதாக அமைகின்றது. அங்கு கௌதமர் ஜனகனுடன் உரையாடும் போது அயோத்தியில் நடந்த சம்பவங்கள் ஜனகனின் மனவேதனையாக வெளிப்படுகின்றது. கௌதமர் உளத்திலே விகாரம் கொண்டார். அதேவேளை அகலிகையும் கங்கைக்கரையில் தன்னைப்பிற பெண்கள் பார்க்கும் பார்வையில் குறுகி-தெய்வமே சாபவிமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா என்று தேம்பவைக்கின்றது. தீர்த்த யாத்திரைக்கு அவர்களை தயாராக்கினார்கள்.

கதையின் நான்காவது களம் மீண்டும் சரயு நதி வாழ்வாக அமைகிறது. கைகேகியின் மனவிசாரமும் அகலிகை கைகேகி உரையாடலில் பதிவாகிறது. இராமன் பதிநான்கு வருடம் கழித்துஅயோத்தி மீளும் செய்தியும் இடைப்பிறவரலாகிறது. இராமன் தம்பதியினரும் கௌதமன் தம்பதியினரும் மகிழ்வுடன் சந்திக்கின்றனர். தனித்தனியே ஆண்களும் பெண்களும் தமது அனுபவங்களைப் பரிமாறுகின்றனர். சீதையின் கதை நீள்கிறது அது அக்கினிப் பிரவேசத்தில் நிலை கொள்கிறது. சம்பாஷணை உஷ்ணம் பெறுகிறது. சீதை அக்கினிப் பிரவேசத்தைச் செய்தால் அகலிகை துடித்துவிட்டாள்.

“அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?” என்று கேட்டாள்.

“அவர் கேட்டார் நான் செய்துவிட்டேன்” என்றாள். அவன் கேட்டானா? என்று கத்தினாள் அகலிகை அவள் மனசில கண்ணகி வெறி தாண்டவமாடியது. அகலிகைக்கு ஒரு நீதி, அவளுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா...?”

இது அகலிகையின் வாதம் கதையின் இறுதியில்-அகலிகை மீண்டும் கல்லானாள். கௌதமன் மீண்டும் துறவியானான் என்பதுடன் கதை முடிவடைகிறது. இந்தக் கதையின் அகலிகையினை மையங் கொண்டே சுழல்கிறது. புனைவு என்றாலும் அது நம்மிடையே பல வினாக்களைப் பரவ விட்டுள்ளார். தமிழ் இந்துப்பண்பாட்டில் பெண் என்ற பிம்பத்தின் நிலைப்பாடு என்ன? அவள் பண்பாடு, சம்பிரதாயம், மரபு என்ற பெயர்களால் முடக்கப்பட்டே கிடக்கவேண்டுமா? என்ற வினாவின் வெளிப்பாட்டு வடிவமே. அகலிகை என்ற பாத்திரம் அகலிகை சாபவிமோசனம் பெற்றாலும் அவளது மனம் ஆண் உலகம் தனக்களித்த தண்டனையையும் உலகம் தன்னை நோக்கும் நோக்கையும் நினைத்துச் சதா விசாரம்கொண்டதாகவே காணப்படுகின்றது. அவள் நடமாடும் வெற்றுடம்பாகவே சித்திரிக்கப்பட்டுள்ளாள். சபாவிமோசனம் என்பது அவளுக்கு அளித்த தண்டனையாகவே அவள் கருதினாள். சரி, சபாவிமோசனம் கிடைத்தாலும் பொது நிலையில் பாவவிமோசனம் கிடைக்கவில்லையே என்பதுதான் அவளது உட்கிடையான மன அவசம். அதை வெளிப்படுத்துவதற்கான சூழல் அவளுக்குக் கிடைக்கவில்லை. மனதுள் மறுகியபடியே வாழ்ந்தாள். சீதை தன் கதையைக் கூறியபோதுதான் தர்க்கரீதியாக அவள் உள்மனம் தன்னை வெளிப்படுத்துகிறது. ஒரு பெண் தன் கற்பை வெளிப்படுத்துவதற்கான இவ்வாறான அவலமான சூழல் ஒன்றை உருவாக்கிய தன்னேரில்லாத் தலைவன் இராமன் அவளது பார்வையில் இருந்து தாழ்ந்து விடுகிறான். அவர் என்ற மரியாதைப் பன்மைப்படர்க்கை அவன் என்ற இழிந்த படர்க்கை ஒருமையாகி விடுகின்றது.

அகலிகை என்ற கதாபாத்திரம் புதுமைப்பித்தனது மனவெளிப்பாடுதான் அவர் இதில் முன்வைக்கும் கருத்துக்கள் இரண்டு பண்டைய தொன்மங்களை அப்படியே கிளிப்பிள்ளைத் தனமாக ஒப்புக்கொண்டு அதையே உருப்போட்டு உருப்போட்டு சமூகத்தின் உயர்ச்சிக்குத் தடையாக உள்ள மூட நம்பிக்கைகளைத் தகர்த்தல் என்பது ஒன்று மற்றையது பெண்நிலை நோக்குச் சார்ந்தது பெண் என்பவள் தொடர்ந்தும் சபிக்கப்பட்டவளா? அவள் மீது சாபங்களையும் விமோசனங்களையும் வழங்கிக் கொண்டிருக்கின்ற ஆணாதிக்கச் சமூக நிலைப்பாட்டைத் தொடர்ந்தும் அனுமதிப்பது என்பது அதனைத் தகர்க்க வேண்டுமென்பதே அவரது விருப்பு அந்த விருப்பு அகலிகையின் தருக்க ரீதியான விவாதம் வழி நிறைவுபெறுகிறது. பெண்ணைத்தனது கட்டுக்குள் வைத்திருக்கும் ஆணாதிக்கத் தன்மைக்கு அகலிகையின் தருக்கம் அதிர்வுகளை ஏற்படுத்தவல்லது. பெண்ணுக்காக சமூகவிடுதலையைக் கோடிட்டுக் காட்டுவது. ஓர் இலக்கியச்சூழலை தமது கருத்துப்புலப்பாட்டிற்கு எவ்வகையில் கையாண்டு வெற்றி பெறமுடியும் என்பதற்கு புதுமைப்பித்தனின் சாப விமோசனம் ஒரு பதச்சோறு.

புதுமைப்பித்தனது கருத்துநிலை இவ்வாறாக அமைய அவரது ஆக்கத்திறன் எவ்வாறு அமைந்துள்ளது என்பதும் நோக்கப்படவேண்டிய ஒன்றாகும். சிறுகதை என்ற வடிவம் சிவத்தம்பி குறிப்பிடுவதுபோலச் சம்பவங்களின் அடியாக எழுகின்ற மனோநிலைச் சித்தரிப்புத்தான். எனினும், அவற்றுள் சமூக அக்கறை என்ற பிரக்ஞையும் ஆக்கத்திறன் அழகியலும் இணையும் போதான் படைப்பு அர்த்தங்கொள்ளும் அல்லாவிடில், அவை வெறும்சொற்கோர்வைகளே. புதுமைப்பித்தன் என்ற பிரம்மராஷஸ்இற்கு இரண்டும் கைவரப்பெற்றன ஆதனால் தான் அவர் வாழ்கிறார்.

அடிப்படையில் அகலிகை ஒரு தொன்மக்கதை. அவருக்கு முதல் அதைப் பலரும் பல்வேறு தளங்களில் படைத்துள்ளனர் எனினும் புதுமைப்பித்தன் முதலில் அத்தொன்மம் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக கருத்தியல் ரீதியான தாக்குறவை முதலில் ஏற்படுத்துகிறார். அதுவே அவர் படைத்த அகலிகை. மற்றையது, அத்தொன்மத்தை அவர் கையாண்ட விதம் அபாரமானது. இராமாயணக்கதைச் சம்பவங்கள் தான் அவருக்கு அடிப்படையாதாரங்கள். ஆயின் அவற்றைப்பல காட்சிகளாகப் பாகம் பிரித்துச் சித்தரிக்கின்றார். இராமாயணக்

கதையோட்டத்தின் பல கூறுகள் அவற்றுள் அடங்கிவிடுகின்றன. ஒரு சிறுவடிவத்தின் கதைப்பின்னலில் பெருங்காவியத்தின் கதையோட்டத்தையே புகுத்திவிடுகின்றார்.

அகலிகை என்ற கதாபாத்திரம் தான், செயற்படு கதாபாத்திரம். துணைக்கு கௌதமர் அவ்வப்போது முகம் காட்டுகிறார். ஏனைய பாத்திரங்கள், அகலிகை கதையில் அவ்வப்போது தலை காட்டுவன. எனினும், அகலிகை என்ற கதாபாத்திரத்தைச் சுற்றியே கதை நிகழ்கின்றது. அகலிகைதான் கதையோட்டத்தின் அடிச்சுவடு.

பாத்திரங்களின் மனோநிலைச் சித்தரிப்பு என்ற விடயத்திலும் அதிக கவனங் கொண்டுள்ளார். அவர் அறிமுகப்படுத்துகின்ற சகல பாத்திரங்களும் ஏதோ வகையில் மனச்சிதைவு கொண்ட பாத்திரங்களாக உருவாக்கப்பட்டு அவற்றின் உரையாடலில் மனோநிலைச் சித்தரிப்பு விபரிக்கப்படகின்றது.

கௌதமன் ஜனகன் சந்திப்பு, சீதை கையேயி சந்திப்பு, சீதை அகலிகை சந்திப்பு இவையெல்லாம் அவ்வப்பாத்திரங்களின் மனோநிலை சுழிப்பை வெளிப்படுத்தும் களங்களாக அமைத்துள்ளார்.

சிறுகதை ஒன்றின் சிறப்பம்சம் சுருங்கச்சொல்லி விளங்கவைப்பதாகும். ஒரு சொல், தொடர்வாக்கியம் அந்தப்பணியைச் செய்யக்கூடியன.

"அகலிகை பசிதீர்ந்தாள்"
"அகலிகை மீண்டும் கல்லானாள்"
"அவன் துறவியானான்"

முதலான தொடர்கள் பல்லாயிரம் அனுபவங்களை தரவல்லன. "கருத்து ஒன்றையே பிரதானமாகக் கொண்டு தாவிச்செல்லும் நடையொன்றைத் தமிழில் புகுத்தினேன். அது தமிழிற்குப் புதியது" என்கிறார் புதுமைப்பித்தன்.

வஷிட்டர்தான் என்ன சர்வ ஜாக்கிரதையோடு மனுஷதர்மத்தின் வெற்றியாக ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்கக் கண்ணில் எண்ணெய்யூற்றி வளர்த்தார். அவருடைய கணக்குகள் எல்லாம் தவிடுபொடியாகி நந்திக்கிராமத்தில் நின்றெரியும் மினுக்கு வெளிச்சமாயிற்று.

சரயு நதிக் குடிசை மறுபடியும் தம்பமற்று விழுந்தது என்று சொல்லவேண்டும் கோதமன் தர்ம விசாரமெல்லாம் இந்தப் பேய்க்காற்றில் சூறை போயிற்று. மனதில் நம்பிக்கை வரண்டு சூனியமாயிற்று.

இவ்வாறான அவரது எழுத்து நடையையும் அதனுள் சூட்சுமமாக அடங்கியுள்ள கதைப்போக்கையும் அறிந்து கொள்ள வேண்டுமானால் வாசகருக்குத் தமிழ் இலக்கியப் பரிச்சயம் வாய்த்தே இருக்க வேண்டும். அல்லது இயலாது. புதுமைப்பித்தனது உரைநடைக் கலை அவ்வளவு ஆழமும் அகலமும் கொண்டது. நிறைவாக, புதுமைப்பித்தன் என்ற படைப்பாளி தன்னுடைய கருத்தியலின் வழி நின்று அதனை வெளிப்படுத்தத் தொன்மத்தின் வழியும் காவியத்தின் வழியும், கதைக் களங்களைப் படைத்து, பாத்திரங்களை அதற்கேற்வாறு திசைமாறி சிந்திக்கச் செய்து தனது புதிய தர்க்கம் சார்ந்த அழகியல் நடையில் வெளிப்படுத்தினார் என்றே கூறலாம்.

☆☆☆

# தமிழியல் சார்ந்த ஆசிரியர்கள் - 2011



இடமிருந்து வலம் நிற்பவர்கள்: திருமதி கனீஸ்வரி, சிவநேசன், செல்வி இராஜினி நாகலிங்கம், செல்வி தயானி சபாநாயகம், செல்வி லூசியன் எமரின் சுதர்சினி, திருமதி எழினி ஜேம்ஸ் மில்பேட், திருமதி ரவிசந்திரிக்கா கிருஸ்ணானந்தசர்மா, திருமதி சந்திரிக்கா நதீஸ்வரன், திருமதி தமயந்தி ஜெயமுகுந்தன், திருமதி சர்லோகேஸ்வரி சிவானந்தம்

இடமிருந்து வலம் இருப்பவர்கள்: திரு. நாகலிங்கம் ஜெயதீபன், திருமதி வரதலக்சுமி தயாபரன், திருமதி ராஜினி முத்துக்குமாரன் (பிரதி அதிபர்), திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் (அதிபர்), திருமதி சாந்தநாயகி வீரசிங்கம், செல்வி இறம்மியா நடேந்திரா, திருமதி விஸ்வதேவி புஸ்பநாதன். திருமதி வசந்தி குஞ்சிதபாதம், செல்வி தேவலோஜினி குமாரவேல்,

# தொடக்ககால ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய தேடல்கள்

(சரசோதிமாலை காலம் வரையான இலக்கியங்களை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

**ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**முன்னுரை:**

ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்வு இன்று குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி பெற்றுள்ளது. எனினும், நீண்டகாலமாக ஈழத்துத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்வும், பயில் நெறியும் புறக்கணிக்கப்பட்டிருந்தமை பல்வேறு ஆய்வுச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளன. ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் வாழ்ந்த காலங்கள் பற்றிய நிர்ணயம், அவர்கள் இயற்றிய நூல்கள் பற்றிய விபரங்கள், அவை எழுதப்பட்டதற்கான வரலாற்றுச் சூழல், தேவை முதலான பல முக்கிய விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதில் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் இன்றும் பல இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. எனினும் இவற்றுக்கூடாக ஆய்வு பூர்வமானதும் தெளிவானதும் நம்பத் தகுந்ததுமான ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறொன்றினைக் கட்டியமைக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தொல்பொருளியல், சாசனவியல், வரலாற்றியல் அடிப்படையான ஆய்வுகள் மூலம் புதிதாகத் திரட்டப்பட்டு வரும் தகவல்கள் இந்த ஆய்வுகளை மேலுங் கூர்மையாக்குவதுடன் புதிய பரிணாமத்துக்கும் இட்டுச் செல்வதைக் காணமுடிகிறது.

## 1. ஈழத்துப் பூதந்தேவனார்:

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலற்றினை 'ஈழத்துப் பூதந்தேவனார்' என்னும் புலவருடன் தொடங்குவது வழமையாகும். முதன்முதலாக இப் புலவரை ஈழத்தவராகச் சுட்டிக்காட்டியவர் வித்துவசிரோமணி சி.கணேசையர்[1]. பிற்காலங்களில் ஈழத்து இலக்கிய வரலாற்று எழுது முயற்சிகளில் ஈடுபட்டோரும் இவரை ஈழத்தின் மூத்த புலவராக வாதப்பிரதிவாதங்களுடன் ஏற்று வந்துள்ளனர். இப் புலவர் 'ஈழத்துப் பூதன்தேவனார்' என்றும் 'மதுரை ஈழத்துப் பூதந்தேவனார்' என்றும் சங்க இலக்கிய ஏடுகளில் சுட்டப்படுகின்றார். இவர் பாடியனவாக அகநானூற்றில் மூன்றும் (88,231,307), குறுந்தொகையில் மூன்றும் (189,343,360) நற்றிணையில் ஒன்றும் (366) ஆக ஏழு

பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இப்பாடல்கள் யாவும் ஆசிரியப்பாவில் எழுதப்பட்டவை. பூதந்தேவனார் ஈழத்தைச் சேர்ந்தவர் தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இப்பாடல்களில் எந்தவிதமான அகச்சான்றுகளும் இல்லை. அன்றியும், இப்புலவரின் பெயரில் உள்ள 'ஈழம்' என்னும் அடையைத் தவிர அவர் ஈழத்தைச் சேர்ந்தவர் தான் எனச் சுட்டுதற்குரிய சான்றுகள் எதனையும் இப்பாடல்களைத் தொகுத்தவர்களும் தொகுப்பித்தவர்களும் விட்டுச் செல்லவில்லை.

**பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் வாதம்**

இக் குழப்பங்களுக்குத் தீர்வு காணும் வகையில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை[2] பூதந்தேவனார் குறித்து விரிவான ஆய்வொன்றினைச் செய்துள்ளார். பூதந்தேவனாரின் பாடல்களில் உள்ள அகச்சான்றுகள், கல்வெட்டாதாரங்கள், பிற இலக்கியக் குறிப்புகள் என்பவற்றைக் கொண்டு பூதந்தேவனாரை ஈழத்தவராகக் காட்ட அவர் முயன்றுள்ளார். குறிப்பாக, ஈழத்துப் பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் இருவரும் பாடிய பாடல்களை 'ஒப்பியல் இலக்கிய ஆய்வு முறையியலுக்கூடாக' ஆராய்ந்த அவர், அப்புலவர்கள் பாடும் திணைகளில் காணப்படும் ஒற்றுமை, பாடல் காட்சிகள், கருப்பொருள் என்பவற்றிற்கிடையே காணப்படும் தொடர்பு, நிறப்பெயரடைகளை எடுத்தாள்வதில் காணப்படும் ஈடுபாடு என்பவற்றின் அடிப்படையில் இப்பாடல்கள் யாவும் ஒரு புலவராலேயே செய்யப்பட்டன எனும் முடிவுக்கு வருகின்றார். அதுபோலவே 'ஈழம்' என்பது இலங்கையை ஆரம்பத்தில் குறித்த பெயர் என்பதை பட்டினப்பாலை, பெருங்கதை, கண்ணகி வழக்குரை என்னும் இலக்கியங்களில் வருங் குறிப்புக்களைக் கொண்டும் பிராமி சாசனங்கள், சோழர்களது மெய்க்கீர்த்திகள், தஞ்சைநாயக்கர் செப்பேடுகள் என்பவற்றில் வரும் ஆதாரங்களைக் கொண்டும் நிறுவ முற்படுவதைக் காணலாம். ஈழத்துக்கும் தமிழகத்துக்குமிடைய ள்ள புவியியல் நெருக்கமும், தொன்றுதொட்டு நிலவி வந்த வர்த்தக, கலாசார, அரசியல் தொடர்புகள் என்பனவும் பூதந்தேவனார் போன்ற புலவர்கள் தமிழ்நாடு சென்று தமது தமிழியற் பணிகளை ஆற்றக் காரணமாகியிருக்கலாம் என்பது அவரின் உறுதியான வாதம் ஆகும். பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் வாதங்களைத் தக்க சான்றுகளைக் காட்டி மறுக்காதவரையில் ஈழத்துப் பூதந்தேவனாரை ஈழத்தவராக அடையாளங் காண்பதில் தவறில்லை.

**சாசனங்கள்:**

ஈழத்துச் சாசனவியல் பற்றிய ஆய்வின் மூலமாகப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் கருத்தை உறுதிப்படுத்துக்கூடிய சான்றாதாரங்கள் பல தற்போது

முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் பெறப்பட்ட தமிழ் பிராமி சாசனங்கள் இலங்கையிலே புராதன காலத்தில் ஏற்பட்ட தமிழரின் குடியிருப்புகள் பற்றியும் அங்கு காணப்பட்ட தமிழ்மொழிச் செல்வாக்குப் பற்றியும் பல தகவல்களைத் தருகின்றன. பிராமி சாசனங்கள் கற்பலகைகளில் மட்டுமன்றி மட்பாண்டங்கள், நாணயங்கள், மோதிரங்கள், முத்திரைகள் என்பனவற்றில் அமைந்த நிலையிலும் பெறப்பட்டுள்ளன. இவற்றிலே அமைந்துள்ள சொற்களுள் பெரும்பாலானவை தமிழ்மொழிச் சொற்களாகவும், சில திராவிட மொழிகள் சிலவற்றிற்குப் பொதுவான சொற்களாகவும் அமைந்துள்ளமை நோக்கற்பாலதாகும்[3]. தமிழ் மொழிக்கே சிறப்பாக உரிய 'ற', 'ன', 'ள', 'ழ' ஆகிய எழுத்துக்கள் இச் சாசனங்களிலேயுள்ளன. அத்துடன் திராவிட இனக்குழுமங்களின் பெயர்கள் பலவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை நோக்குகின்றபோது, இச்சாசனங்கள் எழுதப்பட்ட காலத்தில் இலங்கையிலே தமிழ்மொழி சமூக, பண்பாட்டுத்துறைகளிலே செல்வாக்கு செலுத்தக் கூடியவகையில் மேம்பாடுற்றிருந்தமை புலனாகின்றது. இது பற்றிப் பேராசிரியர் சி. பத்மநாதன்[4] பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> 'கி.மு முதல் மூன்று நூற்றாண்டுகளில் இலங்கையிலே தமிழ் ஒரு பேச்சு மொழியாக வழங்கியமைக்கு ஆதாரமாய் அமைகின்ற பிராமிச் சாசனங்கள் தமிழர் பற்றியும் தமிழர் சமுதாயப் பிரிவுகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. அவற்றிலே பல இனங்களைச் சேர்ந்த சமூகங்களின் பெயர்களும் சமுதாயப் பிரிவுகளின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

ஈழத்திலே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலே காணப்பட்ட தமிழ் சூழலின் பின்புலத்தில் பூதந்தேவனார் போன்ற புலவர்கள் வாழ்ந்திருக்க நியாயமுண்டு. தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் இடையில் பலநிலைகளிலும் காணப்பட்ட உறவுகளின் பின்னணியில் பூதந்தேவனார் மதுரை சென்று அங்கு தங்கிப் பாடல்களைப் பாடியிருக்கக்கூடும். இதனால் 'மதுரை ஈழத்துப் பூதந்தேவனார்' என அவர் அழைக்கப்பட்டிருக்கலாம்.

> 'இலங்கையிலிருந்த இத்தகைய புலவர்கள் (பூதந்தேவனார் போன்ற) ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் வரைக்கும் தம்மை வரவேற்கும், ஆதரிக்கும் அரசு போன்ற நிறுவன ரீதியிலான புரவலர்கள் இந்நாட்டில் இல்லாதிருந்தமையால் இயல்பாகவே தமிழ்நாட்டின் பால் கவர்ச்சி கொண்டிருந்திருப்பர்'

எனக் கலாநிதி துரை. மனோகரன்[5] கருதுவதும் சிந்திக்க வேண்டியதொன்றாகும்.

ஈழத்துப் பூதந்தேவனார், மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் என்போரை விட

அடைகள் எதுவுமின்றிப் 'பூதந்தேவனார்' என்று மற்றொரு புலவர் பாடியதாகக் குறுந்தொகை (285), நற்றிணை (80) ஆகியவற்றில் இரண்டு பாடல்கள் உள்ளன. இவரை ஈழத்துடன் தொடர்புபட்ட பூதந்தேவனாருடன் இயைபுபடுத்த முடியாதென நற்றிணை ஆரம்பப் பதிப்பாசிரியரும் உரையாசிரியருமான பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்[6] குறிப்பிடுகின்றார்.

> 'ஈழத்துப் பூதந்தேவனாரென்பவர் ஒருவர் காணப்படுகிறார். அவர் தாமோ இவர் (பூதந்தேவனார்) என்றையமெய்துமாயினும் இவர் மருதத் திணையை சிறப்பித்துப் பாடி அத்திணையிலே களவு நிகழ்ந்ததாகக் கூறியிருப்ப ஈழத்து பூதந்தேவனார் பாடியதெல்லாம் குறிஞ்சித்திணையே ஆதலின் இருவரும் வெவ்வேறானவர் என்று கருதலாமாயிற்று'.

என்பது அவரது வாதம். பூதந்தேவனாரேயன்றி முரஞ்சியூர் முடிநாகராயர், அம்மூவனார், தொல்காப்பியர் போன்றோரையும் ஈழத்தவர்களாக அடையாளங் காணும் முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. எனினும் அவர்களை ஈழத்தவர்களாகக் காட்ட முயன்றோர் தம் கருத்தை வலியுறுத்துதற்குப் போதுமான சான்றாதாரங்கள் எதனையும் முன்வைக்கவில்லை.

**2. பூதந்தேவனாருக்குப்பின் சரசோதிமாலை காலம் வரை:**

பூதந்தேவனார் வாழ்ந்த காலம் கி.பி 3ஆம் நூற்றாண்டு என்பது பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் முடிபாகும்[7]. ஆனால், பூதந்தேவனாருக்குப் பின்னர் கி.பி 14ஆம் நூற்றாண்டுவரை ஈழத்திலக்கியத் தடத்தினை அறிந்து கொள்வதற்கு ஒரு நூல் தானும் கிடைக்கவில்லை. கி.பி 1310 இல் எழுதப்பட்டதாகக் கருதப்படும் சரசோதிமாலை என்னும் சோதிடநூலே பூதந்தேவனார் இயற்றிய பாடல்களுக்குப் பின் ஈழத்துத்தமிழ் இலக்கியம் என்ற வகையில் எமக்குக் கிடைக்கும் முதனூலாகும். ஆக, பூதந்தேவனாருக்கும் சரசோதிமாலைக்கும் இடைப்பட்ட பதினொரு நூற்றாண்டு காலம் ஈழத்திலக்கிய வரலாற்றுப் போக்கினை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாத இருள் சூழ்ந்த காலப்பகுதியாகவே உள்ளது.

கி.பி 14 ஆம் நூற்றாண்டு வரை ஈழத்தில் தமிழ் நூல்கள் எதுவும் கிடைக்காமை ஒருபுறமிருக்க யாதாயினும் ஒரு நூல் தோன்றியதாகத் தகவல் தானும் கிடைக்காமை பெரும் வியப்பைத் தருகின்றது[8]. ஏனெனில் தமிழர்கள் மிக நீண்டகாலமாக ஈழத்தில் வாழ்ந்து வருவதை உறுதிப்படுத்தும் வலுவான வரலாற்றாதாரங்கள், தொல்பொருட் சான்றுகள் என்பன கிடைத்துள்ளன. அவற்றுக்கூடாக இடையறாத தொடர்ச்சியான பண்பாட்டுப் பாரம்பரியத்தினை அவர்கள் ஈழத்திலே பேணி வந்திருப்பதும் தெரிகின்றது.

மேலும், குறுகலான கடற்பரப்பால் பிரிக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டிலே ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான இலக்கியப் பாரம்பரியம் ஒன்று நிலவ ஈழத்திலே இலக்கிய முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை எனக் கூறுவது பொருத்தமில்லை[9]. அதேபோல, கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியதாக கிடைக்கப்பெற்ற தமிழ்ப் பிராமி சாசனங்களும் கி.பி 9ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெறும் தமிழ் சாசனங்களும் ஈழத்தில் பண்டு தொட்டுத் தமிழ்மொழி பெற்றிருந்த முதன்மையைப் பறை சாற்றுகின்றன. அவற்றிலுள்ள மொழிநடை, செய்யுள் அமைப்பு என்பவற்றை உற்றுநோக்குகின்றபோது தமிழ் ஓர் உன்னதநிலையில் அங்கிருந்தமை தெரிகின்றது. இங்ஙனம் தமிழ் மொழியும், தமிழ்க் கல்விப்பாரம்பரியமும் செல்வாக்குப் பெற்ற காலப்பகுதியில் வளமான இலக்கியங்களும் நிச்சயமாகத் தோன்றியிருக்க வேண்டும்.

**இலக்கியங்கள் கிடைக்காமைக்கான காரணங்கள்:**

ஆக, இக்காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களுக்கு என்ன கதி நேர்ந்திருக்கும் என்பது நுனித்து ஆரயப்பட வேண்டியதொன்றாகும். இக்காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் கிடைக்காமற் போனமைக்குப் பின்வரும் காரணங்கள் பொதுவாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

(i) தமிழ்நாட்டில் தோன்றியது போல வலிமை மிக்க தமிழரசு தோன்றி தமிழ் நூல்களைத் தேடவும் தொகுக்கவும் பாதுகாக்கவும் முற்படாமையால் அவை அழிவுற்றிருக்கக் கூடும்.

(ii) தமிழ் நாட்டிலே பக்தி இயக்கம் தோன்றித் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ் இலக்கியங்களையும் பாதுகாத்தது. முஸ்லீம்களின் படையெடுப்புக் கால கட்டங்களில் ஆதீனங்களும், மடங்களும் தமிழ் இலக்கியங்களைப் பேணலாயின. சிங்களவரைப் பொறுத்தமட்டில் அவர்களது வரலாறும், இலக்கிய ஆக்கங்களும் மகாவிகாரை முதலான சமய நிறுவனங்களில் வாழ்ந்த பௌத்த பிக்குகளால் பேணப்பட்டன. இத்தகைய மதநிறுவன அடிப்படையிலான ஆதரவும் ஈழத்து தமிழ் நூல்களுக்குக் கிடைக்காமை அவை கைவிடப்பட்டு அழிவடைவதற்கு ஒரு காரணமாகியிருக்கலாம்.

(iii) கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி 14ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் காணப்பட்ட தொடர்ச்சியான அரசியற் குழப்பங்களும் வெளிநாட்டார்

படையெடுப்புக்களும் யுத்தங்களும் யுத்த அழிவுகளுங்கூட இலக்கியங்கள் பேணிப் பாதுகாக்கப்படாமைக்குக் காரணங்களாகவுள்ளன. இதுபற்றி பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை[8] பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத், தொடர்ச்சியான சாசனவளம் பெற்று விளங்கும் ஆதிச் சிங்கள/சிங்களப் பாரம்பரியத்திலே கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியங்கள் இன்று கிடையாமலிருக்கும் மர்மத்தை விளக்குதற்காக, தமிழர் முதலிய அந்நியர் படையெடுப்புக்களின்போது அவை அழிந்திருக்கவேண்டும் என்ற கருதுகோள் காலஞ்சென்ற பேராசிரியர் மலலசேகராவால் முன்வைக்கப்பட்டது. இது பொருத்தமாகக் கொள்ளப்பட்டால் இலங்கைத் தமிழர் ஆதிக்கம் அடக்கியொடுக்கப்பட்ட காலங்களிலே இலங்கைத் தமிழிலக்கிய ஆக்கங்களும் அழித்தொழிந்தனவென்று கொள்ளலாம்.'

(iv) புலமை சார் விடயங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் கையளிப்பதிலும் இயல்பாகத் தமிழரிடையே காணப்பட்ட தவறுதலான சில அணுகுமுறைகளும் தமிழ் இலக்கியங்கள் பல அழிந்து போவதற்குக் காரணமாகியுள்ளன.

- இலக்கிய அல்லது அறிவியற் புலமை பரம்பரை பரம்பரையாக மட்டுமே கையளிக்கப்படவேண்டும் எனத் தமிழ்ப்புலமையாளர்களுள் ஒருசாரார் கருதி வந்தனர். இது குறிப்பிட்ட இலக்கியம் அல்லது அறிவியல் பற்றிய அறிவு ஒரு குறுகிய வட்டத்திற்குள் மட்டும் சுருங்கி விடுவதற்குக் காரணமாக அமைந்தது.
- குறிப்பிட்ட இலக்கியம் அல்லது அறிவியல் பற்றிய அறிவு தன்னுடனேயே அழிந்துவிடவேண்டும் என எண்ணியவர்களும் இருந்துள்ளனர்.
- 'உயிருக்கு உறுதி பயப்பவைதான் இலக்கியங்கள்' என்ற நோக்கில் சமயம் சார்பான இலக்கியங்கள் மட்டுமே பேணிப் பாதுகாக்கப்பட்டமையும் ஏனைய இலக்கியங்கள் புறக்கணிப்பிற்குள்ளாகி அழிவடையக் கா னியிருக்கலாம்[9].
- குறிப்பிட்ட சில வகுப்பினரின் அல்லது சமயக் கொள்கையினரின் நூல்களைக் கற்காமல் ஒதுக்கிவிடும் பண்பும் பல நூல்களின் அழிவுக்குக் காரணமாகியிருப்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றை நுணுகி நோக்குவோர் கண்டு கொள்வர். குறிப்பாக, சமண, பௌத்த இலக்கியங்களில் பல வைதீக சமயத்தவரின் ஒதுக்குதலுக்குக் காரணமாகி அழிவடைந்தமைக்குச் சான்றுகள் பல உள. இவ்வாறான நிலை ஈழத்தில் ஏற்பட்டிருக்கவும் சாத்தியமுண்டு. ஈழத்தில் தமிழர் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ்ப் பௌத்தம் பற்றிய கருத்துநிலைகள் இத்தொடர்பில் சுட்டிக்காட்டத்தக்கனவாகும்.
- தமிழ் இலக்கியங்கள் பொதுவாகப் பனையோலை ஏடுகளில் எழுதப்பட்டே கையளிக்கப்பட்டு வந்தன. இந்த ஏடுகளின் வாழ்நாட்காலம் மிகவும்

குறுகியதாகும் அல்லாமலும், இயற்கைக் காரணிகளால் இவை விரைவில் அழிந்து போகக் கூடியனவாக இருந்தன. தமிழர் நெருக்கமாக வாழ்ந்த உலர்வலயப் பகுதிகளில் ஏடுகளை அழிக்கக் கூடிய 'இராமபாணம்' (Silver fish) முதலான பூச்சிகள் அதிகளவில் இருந்ததாக அமெரிக்க மிஷனரிமார் தமது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ளனர்.

(v) போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசின் மீது படையெடுத்தபோது அங்கு காணப்பட்ட 'சரஸ்வதிபண்டாரம்' என்னும் நூல் நிலையத்தை அழித்ததாக அறியப்படுகின்றது. ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தின் சொத்தாகக் கருதப்பட்ட இந்த நூல்நிலையத்தில் தமிழகத்திலிருந்து பிரதி செய்யப்பட்ட இலக்கியங்களேயன்றி ஈழத்துக்கேயுரிய இலக்கியங்களும் பேணிப்பாது காக்கப்பட்டிருக்க வேண்டும். நூல் நிலையம் எரிக்கப்பட்டபோது அவையும் சாம்பராகியிருக்கலாம்.

**தமிழ்ச் சாசனங்கள்:**

இவற்றால் கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 14ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட கால ஈழத்து இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியினையும் போக்கினையும் அறிந்து கொள்வதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனினும் இந்த இடர்பாட்டுகளை ஓரளவுக்குத்தானும் நீக்குவன அக்காலப்பகுதியில் எழுதப்பட்ட சாசனங்களே.

> இலங்கையில் வளர்ச்சி பெற்ற தமிழ் மொழியின் வரலாற்றையும் அதன் சிறப்பியல்புகளையும் ஆராய்ந்து அறிதற்குச் சாசனங்கள் அடிப்படை யானவை. மொழி ஒன்றின் சொல்வளம், சொல்லாக்கம், வசனங்களின் அமைப்பு, பிறமொழிச் செல்வாக்கு முதலான பல விடயங்களைச் சாசனங்கள் வாயிலாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

எனப் பேராசிரியர் சி.பத்மநாதன்[10] குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

பொதுவாக, ஈழத்திலக்கிய வரலாற்று எழுதுமுயற்சிகளில் ஈடுபட்டோர் இத்தொடர்பில் நான்கு முக்கியமான சாசனங்களை இதுவரை எடுத்துக்காட்டி வந்துள்ளனர்.

(i) அனுராதபுரத்தின் வடபாகத்திலே பெறப்பட்ட கி.பி 9ஆம் அல்லது 10ஆம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படும் 'நாலுநாட்டார்' கல்வெட்டு.

(ii) கி.பி 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படும் பதவியாக் கல்வெட்டு

(iii) பண்டுவஸ்நுவர என்னும் இடத்திலிருந்து பெறப்பட்ட கி.பி 13ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு.

(iv) கி.பி 14ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டதாகக் கேகாலை மாவட்டத்திலுள்ள 'கோட்டகம' என்னும் இடத்திலிருந்து பெறப்பட்ட கல்வெட்டு.

என்பனவே அவையாகும். இவற்றுள் முதலும் கடைசியுமாகக் குறிப்பிடப்பட்ட கல்வெட்டுக்கள் இரண்டும் வெண்பா யாப்பிலும், பதவியாக் கல்வெட்டு இணைக் குறளாசிரியப் பாவிலும், பண்டுவஸ்நுவர கல்வெட்டு விருத்தப்பாவிலும் அமைந்துள்ளதைக் காணலாம். இக் கல்வெட்டுகள் எழுதப்பட்டுள்ள பாவடிவங் கள், யாப்பிலக்கண நேர்த்தி, மொழிநடைச் சிறப்பு, சொல்வளம் என்பவற்றை நோக்குகின்ற போது சிறந்த மொழியாற்றலும் இலக்கணத் தேர்ச்சியும் கவிபுனையும் வல்லமையும் கொண்ட கல்விப்பராம்பரியம் ஒன்று ஈழத்தில் இருந்தமை புலனாகின்றது.

மேற்போந்த கல்வெட்டில் உள்ள பாக்கள் யாப்பிலக்கண நெறி வழுவாத வகையில் எழுதப்பட்டுள்ளமை அவற்றை எழுதிய புலமையாளர்களை உயர்நிலையில் கணிக்கத் தோன்றுகின்றது. அவற்றுள்ளும் வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ள பாடல்கள் மிகவும் நுனித்துக் கவனிக்கபட வேண்டியவை. யாப்பு வடிவங்களில் வெண்பா யாப்பு மிகக் கடினமானது. வெண்பாவுக்கேயுரிய சீர்களும் தளைகளுமேயன்றிப் பிற சீர்களோ தளைகளோ கலவாத வகையில் வெண்பா பாடப்படுதல் வேண்டும். மாறாக வேறுவகைச் சீர்களும் தளைகளும் அதில் கலக்குமாயின் அதன் வடிவங் கெட்டுவிடும். இதனாலேதான் வெண்பாவை 'வெள்ளைப் பா' எனவும் வழங்குவர் இத்தகைய பாடுதற்குச் சிக்கலான வெண்பா யாப்பிலேயே கவிபுனையக் கூடியவர்கள் ஈழத்தில் வாழ்ந்திருப்பதை நோக்கும்போது ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தின் சிறப்பும் தனித்துவமும் புலனாகின்றன.

மேலே சுட்டப்பட்ட கல்வெட்டுகளேயன்றி அனுராதபுரம், பொலநறுவை, குருநாகல், புத்தளம், மன்னார், மாத்தளை, யாழ்ப்பாணம் என்னும் இடங்களிலிருந்தும் தமிழ்க் கல்வெட்டுக்கள் சில பெறப்பட்டுள்ளதாக பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை[11] குறிப்பிடுவார். பேராசிரியர் சி.பத்மநாதன்[12] 'இலங்கைத் தமிழ் சாசனங்கள்' எனும் தனது நூலில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமிச் சாசனங்களிலிருந்து பொலநறுவை இராச்சிய காலம் வரையில் ஈழத்தில் பொறிக்கப்பட்டதான பல தமிழ்ச் சாசனங்களை அடையாளங் காட்டியுள்ளார். குறிப்பாக, சோழர் காலத்திற்குரியதான பல தமிழ் சாசனங்கள் அந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சோழர்கால சாசனங்களுள் அதிகமானவை இலங்கையின் வடகீழ்திசையிலேயே கண்டெடுக்கப்பட்டுள்ளன. திருகோணமலை, பொலநறுவை, பதவியா முதலான இடங்கள் இந்தவகையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவையாகும்.

சோழர் கல்வெட்டுக்கள் யாவும் ஈழத்துப் புலமையாளர்களால்தான் எழுதப் பட்டன எனக்கூறமுடியாதுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்க அளவானவை தமிழகத் தில் எழுதப்பட்டு ஈழத்துக்குத் தருவிக்கப்பட்டிருக்கலாம். இல்லையேல் தமிழகத் திலிருந்து வந்த புலமையாளர்களால் பொறிப்பிக்கப்பட்டிருக்கவுங் கூடும். எவ்வாறெனி னும், இக் கல்வெட்டுக்கள் நல்ல தமிழ்நடையில் எழுதப்பட்டு ஈழத்தில் வெளியிடப் பட்டதை நோக்கும்போது அவற்றை வாசித்துப் புரிந்து கொள்ளத்தக்க ஆற்றலுள்ள புலமையாளர்கள் பலர் ஈழத்தில் வாழ்ந்திருக்கின்றனர் எனக் கருதலாம். கல்வெட்டு எழுத்துக்கள், அதிலுள்ள மொழி, செய்தி, கவிதை வடிவம் என்பவற்றைச் சரியான முறையில் விளங்கக் கூடியவர்களாக ஈழத்தவர்கள் இருந்ததினாலேதான் இத்தகைய கல்வெட்டாக்க முயற்சிகளில் சோழர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளனர். ஆக, பதினான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டதான ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை அறிவதற்கு இன்று கிடைக்கக் கூடிய முதன்மை ஆதாரங்கள் சாசனங்களே எனக் கூறுவதில் தவறில்லை. இது பற்றிப் பேராசிரியர் சி. பத்மநாதன்[13] பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> “ஈழத்துச் சாசனங்களிற் பொதுவழக்கான மொழிநடையின் அம்சங்களும் இலக்கிய நெறிக்குரிய அம்சங்களும் கலந்துள்ளமை ஒரு குறிப்பிடத் தக்க அம்சமாகும். சில சாசனங்களின் பகுதிகள் செய்யுள் வடிவானவை. வேறு சில சாசனங்கள் முழுமையும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன. சாசன வசனங்களை உருவாக்கியவர்களிற் பலர் இலக்கிய நெறி பயின்றவர்கள். செய்யுள் இலக்கணத்தை அறிந்தவர்கள். கவிதை புனையும் ஆற்றலுடையவர்கள்.

### 3. சரசோதி மாலை:

மேலே விபரிக்கப்பட்ட பதினொரு நூற்றாண்டுகால இடைவெளியின் பின்னர் 'ஈழத்துத் தமிழ் இலக்கியம்' என்ற தெளிவான வரையறைகளுடன் கிடைக்கும் முதன் நூல் சரசோதிமாலையாகும். இது ஒரு சோதிடநூல். கி.பி 1310இல் குருநாகலையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த நான்காம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இந்நூல் இயற்றப்பட்டதாகத் தெரியவருகின்றது. பிற்காலச் சிங்கள மன்னர்களுள் இலக்கியத் துறைக்கு அரும்பணியாற்றியவர்களில் நான்காம் பராக்கிரமபாகுவும் குறிப்பிடத்தக்க ஒருவர். 'போசராசர்' அல்லது 'தேனுவரைப் பெருமாள்' என்பவரே இந்நூலின் ஆசிரியர் என்பது அதன் பாயிரச் செய்யுளால் அறியப்படுகின்றது[14]. இவர் தெவிநுவரையில் உள்ள விஷ்ணு ஆலயத்தின் பூசகர் என்பர். சரசோதிமாலையின் கடவுள் வாழ்த்தில் விநாயகர் வணக்கத்தை அடுத்துத் திருமால் வணக்கம் வருவதிலிருந்து இதனை உறுதிசெய்யக் கூடியதாகவுள்ளது.

அசையும் ஒளிவடிவங்களாகிய கிரகங்களினால் மனிதன் எவ்வாறு பாதிக்கப் படுகின்றான் என்பதை இந்நூல் விளக்குகின்றது. ஆதலின் இதற்குச் 'சரசோதிமாலை' எனும் பெயர் சூட்டப்பட்டதாக இதனை பதிப்பித்த இ. வெங்கடேசையர் தனது பதிப்புரை யில் குறிப்பிடுகின்றார் (சர - நகர்தல், சோதி - ஒளி). தொளாயிரத்து முப்பத்து நான்கு விருத்தப்பாக்களால் அமைந்து விளங்கும் இந்நூல் 'சோடசகருமப்படலம்' முதல் 'நட்சத்திர தெசைப்படலம்' வரையான பன்னிரெண்டு படலங்களைக் கொண்டுள்ளது. சோதிடம் சார்ந்த செய்திகளை மட்டுமன்றி, ஈழத்தமிழரின் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலானவை குறித்த பல தகவல்களையும் இந்நூல் தருவதைக் காணலாம். கண்ணகி வழக்குரையில் வரும் சரசோதிமாலை பற்றிய குறிப்புக்கள் ஈழத்தில் இந்நூல் பெற்றிருந்த பெருமதிப்பினை உணர்த்துகின்றன.

**முடிவுரை:**

இவை யாவற்றையும் தொகுத்து நோக்குகின்ற போது ஈழத்துத் தமிழ் இலக்கியப் பாரம்பரியம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே வளர்ச்சி பெற்று வந்துள்ளமை புலனாகின்றது. எனினும், அரச ஆதரவின்மை, நிறுவன ரீதியான பாதுகாப்புக் கிடைக்காமை, உள்நாட்டுக் குழப்பங்கள், கையளிப்புப் பாரம்பரியத்தில் காணப்பட்ட குறைபாடுகள் முதலான காரணங்களால் ஆரம்பகால ஈழத்திலக்கியங்கள் பல அவற்றின் பெயர்தானும் அறியாத வகையில் அழிந்தும், தொலைந்தும் போய்விட்டன. அதிஸ்டவசமாக இன்று வரலாற்றியல், தொல்பொருளியல் ஆய்வுகளின் மூலமாக வெளிக்கொணரப்படும் தகவல்கள் ஈழத்து இலக்கியப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியினை அடையாளங்காண உதவுகின்றன. இத்தகைய ஆய்வுகள் எதிர்காலத்தில் மேலும் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு மேலும் ஆழமும் விரிவும் தேடி நகரும் என எதிர்பார்க்கலாம்.

**அடிக்குறிப்புக்கள்:**

1. கணேசையர். சி., ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006, பக். 3 - 6
2. வேலுப்பிள்ளை. ஆ., தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், தொடக்கப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1986
3. பத்மநாதன். சி., இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006, ப.XXX
4. பத்மநாதன். சி., 2006, மு.கு.நூ, ப.XXXVII

5. மனோகரன். துரை., இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி, கலைவாணி புத்தக நிலையம், கண்டி, 1997, ப.2
6. நற்றிணை, (பதிப்பு) நாராயணசாமி ஐயர். அ., சைவவித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, இராகஷச வருடம், பதிப்புரை, ப.58.
7. வேலுப்பிள்ளை. ஆ., 1986, மு.கு.நூ, ப.16
8. வேலுப்பிள்ளை. ஆ., அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும், சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1988, ப.1
9. சிவலிங்கராசா எஸ்., ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி, தனலக்குமி புத்தகசாலை, திருநெல்வேலி, 2001, ப. 3
10. பத்மநாதன். சி., 2008, மு.கு.நூ, ப.XLIII
11. வேலுப்பிள்ளை. ஆ., 1986, மு.கு.நூ, ப.8
12. பத்மநாதன். சி., 2008, மு.கு.நூ
13. பத்மநாதன். சி., 2008, மு.கு.நூ, ப.XLIII
14. சரசோதிமாலை, (பதிப்பு) வெங்கடேச ஐயர் இ., சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், குரோதன வருடம், பாயிரம்

☆☆☆

# கைகேயி சூழ்வினைப் படலத்தின் ஊடாக வெளிப்படும் கம்பனின் கவித்துவம்

ச.லலீசன்

M.A. (தமிழ்), M.Ed., S.L.T.E.S.-Class III,

விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை



"கம்பநாடன் கவிதைபோல் கற்றோர்க்கு இதயம் களியாதே", "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்" போன்ற தொடர்கள் கம்பனின் கவித்துவச் சிறப்பைப் பறை சாற்றுகின்றன. "கம்பனைப் போல் வள்ளுவர்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை. உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்று பாடினார் பாரதி. தமிழ்ப் பெருங்கவிஞர்களுள் கவித்துவத்தில் உயர்ந்த கம்பனுக்கே அவர் முதலிடம் வழங்குகிறார்.

கடவுளின் இயல்பை எப்படி வரையறுத்துக் கூற இயலாதோ அது போலக் கவிதைக்குரிய பண்புகளையும் வரையறுத்துக்கூற இயலாது. ஆயினும் கவித்துவம் மிக்க கவிதைக்குரிய பண்புகள் குறித்து மேலைப்புல அறிஞர்களும் கீழைத்தேய அறிஞர்களும் கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

மில் என்பார் "கருத்திலும் சொற்களிலும் உணர்ச்சி கோயில் கொள்வதே கவிதை" எனக் குறிப்பிடுகின்றார். ஜோர்ஜ் ஓ நெயில் என்பார் "அழகின் ஒழுங்கு முறைக்குக் கட்டுப்பட்டு விழுமிய முறையில் எழுந்து வரும் உணர்ச்சி, கற்பனை என்பவற்றின் மொழியே கவித்துவமுள்ள கவிதையாகிறது" என்கிறார்.

நன்னூலைச் செய்த பவணந்தி முனிவர்

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போறபல
சொல்லாற் பொருட்கு இடனாக உணர்வில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

எனக் குறிப்பிடுகின்றார். கவிதையில் உணர்ச்சி இருக்க வேண்டும் என்பதும் அது வல்லோரால் இயற்றப்பட வேண்டும் என்பதும் நன்னூலாரது கருத்தாகக் காணப்படுகின்றது.

கவித்துவத்தில் உணர்ச்சியே முக்கிய இடம்பெறுகிறது. இவ்வுணர்ச்சியை வழங்கக் கூடியதாகக் கவிதைகள் பல்வேறு கூறுகளைக் கொண்டுள்ளன. கைகேயி சூழ்வினைப் படலத்தில் கம்பரது கவித்துவம் எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை நோக்குவோம்.

## செஞ்சொற்றொடர்களைக் கையாளல்

வாசகனிடம் உணர்ச்சித் தொற்றுகையை ஏற்படுத்துவதற்காகச் செறிவான சொல்லாடல்களைக் கம்பர் மேற்கொள்கிறார். படலத்தில் இடம்பெறும் முக்கிய நிகழ்வுக ளான கைகேயியின் மனமாற்றத்தை வெளிப்படுத்தவும் தசரதனின் கையறு நிலையைப் புலப்படுத்தவும் இராமனின் தளர்வுறா நெஞ்சை வாசகனிடம் நிலைப்படுத்தவும் கம்பனின் சொல்லாடல்கள் பயன்படுகின்றன.

கைகேயியின் மனநிலையைப் பதிவு செய்வதற்காக கையாளப்படும் தொடர்களுக்குப் பின்வரும் எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடலாம்

"தீயவை யாவையினும் சிறந்த தீயாள்" (பாடல் எண் : 14)

"நாடக மயில்" (பாடல் எண் 04)

"நாகம் என்னும் கொடியாள்" (பாடல் எண் : 15)

"பெண்டிரில் கூற்றம் அன்னாள் பிள்ளையைக் கொணர்க என்றாள்" (பாடல் எண் : 83)

## தசரதனின் பெருமைகளை வெளிப்படுத்துமாறு

"ஆழி நெடுங்கை மடங்கல் ஆழி அன்னான்" (பாடல் எண் 05) என்கிறார். தசரதன் கைகேயி மீது வைத்திருந்த காதலை வெளிப்படுத்த "மன்னன் ஆவி அன்னாள்" (பாடல் எண் 08) என்கிறார். அவன் இராமன் மீது கொண்டிருந்த பேரன்பை வெளிப்படுத்த "மைந்தன் அலாது உயிர் வேறிலாத மன்னன்" (பாடல் எண் 24) என்கிறார். கைகேயி கேட்ட வரத்தை மீளப் பெறுமாறு இரந்து வேண்டும் தசரதனது கூற்றாக "மண்ணேகொள் மற்றையதொன்று மற" (பாடல் எண் 32) எனக் குறிப்பிடுகின்றார்.

நாட்டாட்சிப் பொறுப்புக் கிடைக்கவில்லை என்பதற்காகவோ காடேக வேண்டும் என்ற கட்டளைக்காகவோ மனங்கலங்காது, முகம் மலாந்திருந்திருந்த இராமனைப் படம்பிடித்துக் காட்டுவதற்காக "அவ்வாசகம் உணரக்கேட்ட அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா" (பாடல் எண் 112) என்ற தொடரைக் கையாள்கிறார்.

## விருத்தப் பாவைக் கையாளல்

விருத்தத்திற்குச் சிறப்புப் பெற்ற கம்பர் காப்பியம் முழுவதையும் விருத்தப்பாவில் அமைத்தார். இப்படலத்தில் உள்ள பாடல்கள் அறுசீர்க் கழிநெடிலடி கொண்டவையாகப் பாடப்பட்டுள்ளன. தான் கருதிய விடயத்தை இலகுவாக வாசகனுக்குப் புரிய வைப்பதற்கு இவ்வடிவம் கம்பருக்கு வசதியாக அமைந்திருக்கிறது. கூடவே எதுகை மோனைத் தொடைகளும் கவித்துவப் புலப்பாட்டிற்கு உறுதுணை புரிகின்றன.

### வருநிகழ்வு கூறல்

காவியத்தின் தொடர்ச்சியில் அடுத்து இடம்பெறப் போகும் நிகழ்வுகளை மறைமுகமாக வெளிப்படுத்துவது சிறந்த கவிஞர்களுக்குக் கைவந்த கலையாகும்

கைகேயி சூழ்வினைப் படலத்தின் ஆரம்பத்தில் மங்கலப் பொருள்கள் எல்லாவற்றையும் களைந்துவிட்டு கைகேயியின் அழுதவண்ணம் காணப்படுகின்றாள். இத்தோற்றம் பின்னே அவள் அடையப் போகும் கைம்மை நிலையைக் குறிப்பால் புலப்படுத்திக் காட்டுகின்றது. மதியினில் மறுத்துடைப்பாள் போல் அளகவாள் நுதல் அரும்பெறல் திலகமும் அழித்தாள்" (பாடல் எண் : 02) எனக் கம்பர் இதனைப் பதிவு செய்கிறார்.

### உவமை அணிப் பிரயோகம்

அறிந்ததைக் கொண்டு அறியாததைப் புலப்படுத்துவதற்காக உவமை அணி பிரயோகிக்கப்படுகின்றது. இந்த உவமைகள் கவிதைக்கு உயிரூட்டமாகவும் அமைகின்றன.

கூனியின் உரையால் உள்ளம் திரிந்த கைகேயி தன் ஒப்பனையைக் கலைத்தாள். கரிய கூந்தலில் வைத்திருந்த பூக்களை (மாலையை) கரிய முகிலுள் நுழையும் திங்களைப் பிய்ப்பது போல் வண்டுகள் வருந்தப் பிய்த்தெறிந்தாள்.

சோனை வார்குழல் கற்றையில் சொருகிய மாலை
வானமா மழை நுழைதரு மதி பிதிர்ப்பாள் போல்
தேன் அவாவுறு வண்டினம் அலமர சிதைத்தாள்"

என்கிறார் கவிஞர். மதியைப் பிதிர்ப்பது கிடையாது. எனவே இது இல்பொருள் உவமையாகும்.

அத்துடன் புகழ்க்கொடியை வேர் அறுத்தாற்போல் தன் மேகலையை அறுத் தெறிந்தாள். காலில் இருந்த கிண்கிணியையும் கையில் இருந்த வளையல்களையும் நீக்கிவிட்டாள். திங்களின் நடுவில் இருந்த மறுவைத் (களங்கத்தைத்) துடைப்பது போலத் தன் நெற்றியில் இருந்த மங்கலப் பொட்டை அழித்து விட்டாள். இந்நிலையில் மலர்கள் எல்லாம் உதிர்ந்து விட்ட கொம்புக்குக் கைகேயியை ஒப்பிட்டு "பூ உதிர்ந்தது ஓர் கொம்பு எனப் புவிமிசைப் புரண்டாள்" (பாடல் எண் 02) என்கிறார் கம்பர்.

கைகேயியை மானுக்கும் தசரதனை யானைக்கும் உவமிக்கிறார். தசரதன் கைகேயியைத் அணைத்துத் தூக்கிய காட்சியை "மானை எடுக்கும் ஆனையே போல் தடக்கைகள் கொண்டு தழீஇ எடுக்கலுற்றான்" (பாடல் எண் 07) எனக் குறிப்பிடுகின்றார்.

கைகேயி கேட்ட வரங்களால் தசரதன் நிலை குலைந்தான். அவளது சொற்களின் வலிமையை வெந்த புண்ணில் பாய்ச்சிய வேலுக்கு உவமையாக்குகிறார். " வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்பச் சிந்தை திரிந்து திகைத்து அயர்ந்து வீழ்ந்தான்" (பாடல் எண் 24) என்பார் கம்பர்.

கைகேயி வரத்தை வலிந்து கேட்கும் நிலையில் தசரதன் அதிர்ச்சியுற்று மண்ணில் சாய்ந்தான். இந்நிலையில் தசரதனை இடியேறுண்ட நாகத்திற்குக் கம்பர் உவமிக்கின்றார். "இடியேறுண்ட மால்வரை போல் மண்ணிடை வீழ்ந்தான்" (பாடல் எண் 39) எனக் கம்பர் குறிப்பிடுகின்றார்.

தசரதனது மன நிலைகளை வெளிப்படுத்துவதற்காக வேகம் அடங்கிய வேழம் (பாடல் எண் 16) ஊது உலையில் கனல் (பாடல் எண் 16) என்ற உவமைகளையும் "பொன் குன்று ஒன்று ஒன்றோடு ஒன்றியது என்ன" (பாடல் எண் 45) என்ற இல்பொருள் உவமையையும் கையாள்கிறார்.

இராம பிரானது மார்பில் முப்புரி நூல் இருக்கும் அழகை வெளிப்படுத்துவதற்காக "கார் மினொடு உலாயது என நூல் கஞலும் மார்பன்" (பாடல் எண் 100) என்ற உவமையைக் கையாள்கிறார். இங்கு கார் (மேகம்) இராமன் திருமார்பிற்கும் மின்னல் முப்புரி நூலுக்கும் உவமையாகவுள்ளன.

கைகேயியை வந்தடைந்த இராமனின் அடக்கத்தை வெளிப்படுத்துவதற்காக கைகேயியை பசுவிற்கும் இராமனைப் பசுக் கன்றுக்கும் உவமிக்கின்றார். இதனை " அந்தி வந்து அடைந்த தாயைக் கண்ட ஆன்கன்றின் அன்னான்" (பாடல் எண் 108) எனக் குறிப்பிடுகின்றார்.

தனக்கு நேர்ந்த இடரின் போதும் மனங்கலங்காத இராமனின் நிலையைப் புலப்படுத்த இராமனை அலந்த செந்தாமரைக்கு உவமிக்கின்றார். (பாடல் எண் 112)

அத்துடன் கைகேயியின் வார்த்தைகளைச் சோகவிடம் (பாடல் எண் 15) என உருவகித்தும் காட்டுகின்றார்.

## தற்குறிப்பேற்ற அணியைக் கையாளல்

இயற்கை நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் கருத்தை அல்லது எண்ணத்தை ஏற்றிக் கூறல் தற்குறிப்பேற்ற அணியாகும். தசரதன் மயக்கமுற்றிருக்கக் கைகேயி தன் காரியம் முடிவுற்றதனால் உறக்கம் கொண்டாள். இரவுப் பொழுது கழிந்து விடிந்தது. இதனைக் காட்ட வந்த கம்பர் கைகேயியின் செய்கை பெண் குலத்திற்கே இழுக்கு எனக் கருதிக் கங்குலாகிய நங்கை ஆடவர் முன் நிற்கவும் நாணி அகன்றாள் (பாடல் எண் 50) எனத் தற்குறிப்பேற்ற அணியைக் கையாள்கிறார்.

மேலும் வைகறையில் இயல்பாகக் கூவும் கோழிகள் கைகேயியினால் துன்புற்ற தசரதனைப் பார்த்து அடித்துக் கொண்டு அழுவன போன்றிருந்தது என்றும் (பாடல் எண் 51) பறவைகள் விடியற் காலத்தில் ஒலிப்பதைக் குறிப்பிட்டு அவை கைகேயி செயல் கண்டு அவளைத் தன் மனத்தினுள் வைவது போலும் (பாடல் எண் 52) எனவும் தற்குறிப்பேற்றம் செய்கிறார்.

யானைகள் எழுந்ததை இராம பிரான் நாட்டை விட்டுக் காட்டுக்குச் செல்லப் போவதனால் நாமும் இந்நாட்டைவிட்டுச் செல்வோம் என எழுந்ததாகத் தற்குறிப்பேற்றம் செய்கிறார். (பாடல் எண் 53)

ஆம்பல் மலர் காலையில் குவிந்திருத்தல் இயற்கை நிகழ்ச்சி. அது கைகேயியின் கொடுமை கண்டு குலப்பெண்கள் வாயடங்கியிருந்தாற்போன்று இருந்தது எனத் தற்குறிப்பேற்றிக் காட்டுகின்றார்.(பாடல் எண் 57) இவ்வாறு பல காட்சிகளைத் தற்குறிப்பேற்றிக் காட்டுவது கம்பரின் கவித்துவத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.

## இயற்கை வர்ணனை

கவிஞரின் கவித்துவத்தை வெளிக்காட்டுவதற்கு இயற்கை வர்ணனைகளும் சான்றுகளாக அமையும்.

“வெய்யவன் கோபம் முற்றி மிகச் சிவந்தனன் ஒத்தனன்” என சூரியோதயக் காட்சியையும் “பாவைமார் முகம் என்ன பங்கயராசி முன்னம் மலாந்த” எனத் தாமரை மலர்ந்த காட்சியையும் கம்பர் காட்டுகின்றார். இவ்வாறு இயற்கை வர்ணனைகளை அழகாக எடுத்தாளல் கம்பரின் கவித்துவத்தை வெளிக்காட்டுகின்றது.

## உரையாடற் பாங்கு

கைகேயி சூழ்வினைப் படலத்தில் உள்ள பல பாடல்கள் பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் உரையாடுவதைப் போன்று அமைக்கப்பட்டுள்ளன.

> “மன்னவன் பணி அன்றாகில் நும்பணி மறுப்பனோ என்
> பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ?
> என்இனி உறுதி அப்பால் இப்பணி தலைமேல் கொ
> மின்ஒளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும கொண்டேன்” (பாடல் எண் 114)

என கைகேயியைப் பார்த்து இராமன் கூறுவதாகப் பாடல் அமைத்தார்.

## நிறைவுரை

பெருங்காப்பியம் ஒன்றை கம்பனைப் போல் இத்துணைச் சிறப்பாகப் பாட இயலுமா? என்று கருதிய பாரதியார் ஐயுற்றார். “கம்பன் என்றொரு மானிடன்“ எனக் கம்பனைச் சிறப்பித்தார். செஞ்சொற் கவியின்பத்தை அள்ளித் தந்த கம்பனின் கவித்துவம் உள்ளும் தோறும் உள்ளும் தோறும் இனிப்பானதே.

☆☆☆

# பெற்றோரைப் பேணுவோம்

இறைவன் எமக்களித்த இனிய உறவுகளில் முதன்மையானவர்கள் எம் பெற்றோர்களே. எம்மை உலகிற்கு அளித்தவரும் எம்மால் முதலில் உணரப்படபவர்களும் அவர்களே. மண்ணிலே வாழ்கின்ற கண்கண்ட தெய்வங்களும் அவர்களே. இதனையே, ஔவையார் "அன்னையும் பிதாவும் முன்னாறி தெய்வம் "என்று அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

தம் கண்ணிலும் மேலாக எம்மை காத்துப்பராமரிக்கும் எம் பெற்றோரின் சிறப்பினை சொல்லில் வடித்தாலும் அரிது. சொல்லி முடித்தலும் அரிது எம்மைப் பெற்றுவளர்த்திட்ட எம் பெற்றோர் படும் துன்பங்கள் தான் எத்தனை? எத்தனை? ஈ எறும்பு தீண்டாமல் பேணிக்காக்கின்றனர் வேளையறிந்து உணவளித்து வளர்க்கின்றனர். நாம் நோயுற்ற வேளையில் தாமுற்ற துன்பம் போல் துவண்டு விடுகின்றனர். கண்ணும் கருத்துமாய் கண்விழித்துப் பாக்கின்றனர். பள்ளிப்பருவத்தில் பல கல்வி பயின்றிட பெரும்பாடுபடுகின்றனர். எம்மை மேதைகளாக்கிட மெய் வருத்தி உழைக்கின்றனர். எம்மை நல்லவராகவும் வல்லவராயும் வாழவைக்க வழி தேடி அலைகின்றனர். தம் பசி பிணி மறந்து நம் விருப்பங்களை ஈடேற்றி வைக்கின்றனர். எம் இனிய எதிர்காலத்திற்காய் அல்லும் பகலும் அரும்பாடு படுகின்றனர்.

தம் வாழ்நாளை வீழ்நாளாக்காது நம் நலனுக்காக அயராத உழைக்கும் எம் பெற்றோரை என்றும் நன்றியுடன் மதித்துப்போற்றுவது எமது கடமையல்லவா? "ஏவா மக்கள் மூவா மருந்து" என்ற பொன்மொழிக்கேற்ப பெற்றோர் குறிப்பறிந்து நாம் செயற்பட வேண்டும். நமது அன்பையும் பணிவையும் கண்டு அவர்கள் மனம் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடையும்படி நடக்க வேண்டும். குறிப்பாக முதுமையடைந்த வேளையில் முகம் சுழிக்காது பராமரிக்க வேண்டும். ஆனால், இன்று அனேகர் இயலாத பெற்றோரைத் தனியே தவிக்க விட்டும், முதியோர் இல்லங்களில் சேர்த்து விட்டும் தம் குடும்பத்துடன் மட்டும் குதூகலிக்கின்றனர். நாமும் நாளைய பெற்றோர்கள் என்பதை உணர்ந்து வாழையடி வாழையாக எம் சமூகத்தினர் பேணி வந்த ஒழுக்க நெறி, பண்பாட்டுப்பெருமை, மனித நேயம் என்பவற்றிற்கு இயைபாக வாழ்ந்து பெற்றோரை மதித்த எம் இளம் சந்ததியினருக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்ட வேண்டியது எமது கடமையாகும்.

எமக்காகத் தம்மை அர்ப்பணித்துச் செயற்படும் எம் பெற்றோர்களது அன்பையும் அருமையையும் நன்றியையும் மறந்து நாம் மட்டும் வாழ நினைப்பது மாபெருந்தவறல்லவா? எம் இரு கண்ணளான அன்னை தந்தையரை நிந்திப்பது எம்மை நாமே குருடர்களாக்கும் செயலாகும். "தாயிற் சிறந்த கோவிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்ற சான்றோர் அறிவுரை தாய் தந்தையர்க்குரிய மதிப்பை நமக்குத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

தந்தை சொற்படி காடேகிய இராமரினதும், தந்தைக்காக தன் இன்ப வாழ்வையே துறந்த பீஷ்மரினதும், இறுதி வரை தாயின் சொல்லை மறவாது வாழ்ந்த காந்தியடிகளினதும் வரலாறுகள் மங்காப்புகழ் பெற்றவை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க எம் பெற்றோர் எமக்காக ஆற்றிய தியாகங்களை மறந்து உய்வு பெற முடியாமல் தவிப்பதை விட எம் பெற்றோரை மதித்துப் பேணி, அவரது மலரடி தொழுது, நாமும் மகத்தான வாழ்வு வாழ்வோமாக!.

பா. காருண்ஜா- 6E

Vembadi Girls' High School
Library
ACC. No: M130 ...........
CLASS No: ... 0050 .........
DATE: ........ 02-08-2011

# முழு நிலவாய் ஒளிரும் தமிழ்

அமுதனைய எங்கள் தமிழ்
இனிய தமிழ் இன்பத் தமிழ்
சங்கம் வளர்த்த தமிழ்
தரணியெல்லாம் போற்றும் தமிழ்

குறளாலே உலகாண்ட
வள்ளுவர் சொன்ன தமிழ்
அறவழியாய் அரசியலாய்
தத்துவமாய்த் தளிர்த்ததமிழ்

கல்வியிலே கலைத்துவமாய்
கனிவுடனே மிளிரும் தமிழ்
முத்தமிழாய் முதிர்ந்த தமிழ்
முழு நிலவாய் ஒளிரும் தமிழ்

தமிழாலே கலை வளர்ப்போம் - இன்பக்
கலையாலே தமிழ் வளர்ப்போம்
சங்கத்தமிழ் கவியாலே - எங்கள்
தமிழ்மக்களைத் துதிசெய்வோம்.

அ. ஆதித்தியா
6 B

"வேலையைச் செய், வலிமை உனக்குக் கிட்டும்"

– தத்துவஞானி எமர்சன்

Vembadi Girls' High School
Library
ACC. No. .....
CLASS No. .....
DATE .....

# முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்

வெள்ளை நிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ?
வள்ளல் அடியினைக்கு
வாய்த்த மலரெதுவோ?
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார்
வேண்டுவது"

இக்கவிதைவரிகள் எல்லோராலும் கவரப்பட்டவை இதன் மூலம் இறைவனுக்கு சாத்தக்கூடிய மலர்கள் பற்றி மட்டக்களப்பு மண்ணில் பிறந்து யாழுக்கு புத்துயிரளித்த ஈழத்தமிழ் மக்களின் புகழை உலகறியச் செய்த "முத்தமிழ் வித்தகர்" என்று போற்றப்படும் விபுலானந்த அடிகளார் விளக்கியுள்ளார்.

சுவாமி விபுலானந்தர் இலங்கைத் திருநாட்டின் கிழக்குப்பகுதியிலுள்ள மட்டக்களப்பில் காரைதீவு எனும் கிராமத்தில் ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்றிரண்டாம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தேழாம் திகதி பிறந்தார் இவர் கண்ணம்மை சாமித்தம்பி என்போருக்கு மகனாக பிறந்தார் இவருக்கு பெற்றோர் மயில்வாகனனார் எனும் பெயரைச் சூட்டினர்.

சிறுவயதில் கல்வி அறிவில் சிறந்து விளங்கிய மயில்வாகனனார் தமிழ் மொழி மட்டுமன்றி வடமொழி ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் முறையாகப் பயின்றார். பதினேழாம் வயதில் மட்டக்களப்பில் உள்ள புனித மைக்கேல்கல்லூரியில் ஆசிரியரானார். பின் கொழும்பில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினார். தமது ஓய்வு நேரங்களில் தமிழ் இலக்கியங்களைக்கற்று மதுரைத்தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்த முதலாவது இலங்கையர் என்ற பெயரையும் பெற்றார். விஞ்ஞானத்துறையில் இயற்கையாகவே ஏற்பட்டிருந்த நாட்டம் காரணமாக அக்காலத்தில் விஞ்ஞானப்பாடங்களை விருப்புடன் கற்று இலண்டன் பல்கலைக்கழகத்தினர் நடாத்திய விஞ்ஞானப்பட்டதாரிப்பரீட்சையில் தேறினார். இச்செயற்பாடு அவருக்கு கல்வியின் மீதிருந்த ஆர்வத்தையும் திறமையையும் காட்டி நிற்கின்றது.

அவர் இயற்றிய "யாழ்நூல்" என்னும் அரிய இசைத்தமிழ் நூல் பலராலும் அறியப்பட்டதாகும் அதுமட்டுமன்றி மதங்கசூளாமணி என்னும் நாடகத்தமிழ் நூலையும் மேலும் பல நூற்றுக்கணக்கான சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தமிழ் உலகிற்கு தந்தார் அவரின் கவித்துறை ஆற்றலும் தனித்தன்மை வாய்ந்தது அவர் தனது நண்பர் அறிஞர் கந்தசாமி மறைந்தபோது எழுதிய "கங்கையில் விடுதலை ஓலை" என்ற கவிதை தமிழில் உருக்கும் தன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

1924ஆம் ஆண்டு சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஸ்ண சங்கத்தில் சேர்ந்து "பிரபோத சைத்தன்யர்" எனும் நாமம் பெற்ற பிரமச்சாரி ஆனார். அதே ஆண்டு

சித்திரைபௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு “சுவாமி விபுலானந்தர்”எனும் நாமம் பெற்றார்.

1925இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்வித்துறைக்கு அளப்பரிய சேவை செய்தார். அவர் கல்லடி உப்போடையில் சிவானந்தா வித்தியாலயம் காரைதீவு சாரதா மகளிர் கல்லூரி என்பவற்றை நிறுவினார்.

மேலும் ஆதரவற்றோர் மாணவர் மாணவியர் இல்லங்களும் நிறுவினார். பின்பு யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தையும் திருகோணமலை இந்துக்கல்லூரியையும் இராமகிருஷ்ண சங்கத்தோடு இணைந்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் அளப்பரிய கல்வித்தொண்டு செய்தார்.

1931இல் சுவாமி விபுலானந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியராக நியமனம் பெற்றமை பெருமைக்குரியதாகும். அத்துடன், 1943இல் இலங்கையில் பல்கலைக்கழகம் ஆரம்பித்தபோது சுவாமிகளே முதற்பேராசிரியாரானார் இப்பெருமைகளைக் கொண்ட சுவாமி விபுலானந்தர் 1947இல் தனது 55வது வயதில் இவ்வுலகை நீத்தார்.

சுவாமிவிபுலானந்தர் இறந்த பின்பும் அவரின் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. 1948இல் வெளிவந்த ஈழமணிப்பத்திரிகையில் கவியோகி சுத்தானந்தபாரதியார் பின்வருமாறு அடிகளாரை நினைவு கூறினார். “சங்கத்தமிழ் கேட்கவேண்டுமென்றால் இருவரிடம் கேட்கவேண்டும் ஒருவர் பெரும் பேராசிரியர் சாமிநாதையர் மற்றொருவர் விபுலானந்தர்”

இவ்வாறாக சங்கத்தமிழ் அறிந்த முத்தமிழ் வித்தகரை நாம் என்றும் போற்றுவோம்.

க. தேவந்தி<br>7 "B"

“சந்தர்ப்ப சூழல் ஒழிந்து போகட்டும்,
நான் சந்தர்ப்பங்களை உருவாக்குகின்றேன்”

பெட்ரிகஷியா– ஜிரோசன்

# இளவரசியும் வெள்ளைப்புறாக்களும்

(சிறுவர் நாடகம்)

பாடல் :- சின்னஞ்சிறு பாலர் நாங்கள்
ஆடிப்பாடுவோம்
பறவை போல மிருகம் போல
வேசம் போடுவோம்
இளவரசியும் வெள்ளைப்புறாக்களும்
நாடகம் நடிப்போம் கவிதை செய்வோம்

ஆள் :- சின்னஞ்சிறு பாலர்களே ! நில்லுங்கள்.

சின்னஞ்சிறு பாலர்கள் :- எங்களையோ கூப்பிட்டீங்கள்.

ஆள் :- ஆம், உங்களைத்தான் கூப்பிட்டேன் இங்கே வாங்கோ!
(சிறுவர்கள் வருகின்றனர்)

சின்னஞ்சிறு பாலர்கள் :- என்ன விடயம்?

ஆள் :- நீங்கள் இன்று ஒரு நாடகம் நடிக்கவேண்டும்.

பாலர்கள் :- ஏ ன் இன்று என்ன தினம்?

ஆள் :- சிறுவர் தினம்.

பாலர்கள் :- சிறுவர் தினமா? ஐயா நல்லம்.

ஆள் :- சரி செய்கிறீர்களா? உங்களைப்பார்க்க இவ்வளவு பேர் வந்திருக்கினம்.

பாலர்கள் :- சரி செய்கிறோம், பிழை விட்டால் குறை சொல்லக்கூடாது சரியோ?

பார்வையாளர்கள் :- சரி நீங்கள் செய்யுங்கோ.

பாலர்கள் :- சரி நாங்கள் எங்கள் வேசங்களைப் போட்டு வருகிறோம் .
(சிறுவர்கள் வேசங்களைப் போடச் செல்கின்றனர்)

ஆள் :- எல்லோரும் இங்கே கவனியுங்கள்.
அடுத்ததாக மாணவர்கள் சிலரின் நாடகம் இடம் பெற இருக்கின்றது.

சிறுவர்கள் :- ஹைய்யா ஜாலி.
(நாடகத்திற்கு தயார் செய்து வருகிறார்கள். நாடகம் தொடங்கி விட்டது.)

பாலர்கள் :- எல்லாம் உங்களுக்கு தெரிந்த கதைதான்.
"இளவரசியும் வெள்ளைப்புறாக்களும்"
(பாலர்கள் வட்ட வளைவில் நின்று வணக்கம் செலுத்தினர் )

பாடல் :- "பச்சை நிறக்கம்பளம் போன்ற புல் வெளியில்
தங்கப்பதுமை போன்ற அழகி நடந்து வருகிறாள்
நடந்து வருகிறாள்......... அழகி நடந்து வருகிறாள்"

அழகி :- ஐயோ! என் தாய் தந்தையை பிரிந்து விட்டேனே.
இன்னும் சிறிது தூரம் செல்லலாம் ஆனால் பொழுது சாய்கிறதே.
(தட்டுத்தடுமாறிக் காட்டுக்குள் சென்றுவிட்டாள்)

அழகி :- கடவுளே இது என்ன இடம். ம்...... ஆ... அம்மா...

ஓர் குரல் :- அக்கா..... அக்கா யார் நீ? இவ்வளவு அழகாய் இருக்கிறயே! உன்னைப் பார்த்தால்......

அழகி :- ஆ....யார்... யாரது? யார் என்னைக் கூப்பிட்டது? பேய்.... பேய்.... யாராவது காப்பாற்றுங்கள்.

ஓர் குரல் :- அக்கா பயப்படாதே நான் தான்.

(வெள்ளைப்புறா ஒன்று அவள் முன் வந்து நின்றது)

அழகி :- ஓ.... நீயா... தங்கச்சி நான் ஒரு இளவரசி. என்ர அம்மா அப்பாவை பிரிஞ்சிட்டன் நீதான் எனக்கு உதவி செய்யனும். எனக்கு பசிக்குது - சாப்பாடு தருவியா?

புறா 1 :- அக்கா இஞ்ச என்ர நண்பர்கள் என்னோட இருக்கினம் அவர்களையும் கூப்பிடவா? ராதாக்கா, மல்லிகாக்கா, கமலாக்கா, றாணியக்கா, விமலாக்கா எல்லோரும் ஓடி வாங்கடி.

புறாக்கள்
எல்லோரும்:- ஆ... நாங்கள் வந்திட்டோம் இந்தப் பெண்மணி யார்? அவள் மிகவும் அழகாய் இருக்கிறாள்.

புறா 1 :- இவா அவங்கட அப்பா அம்மாவைப் பிரிஞ்சு காட்டுக்குள் தவறி வந்திட்டார்.

புறா 3 :- அதுவா இந்த அக்கா கவலையாக இருக்கிறார்.

புறா 1 :- ஆம் அவளுக்குப் பசிக்குதாம்.

புறாக்கள்
எல்லோரும்:- அப்படியா! நாம் காட்டில் சில தானியங்கள் பழங்களைப் பறித்து வருகிறோமே.

பாடல் :- சின்னஞ்சிறு வெள்ளைப்புறாக்கள் நாம்
சிறகு விரித்து பறந்திடுவோம்
காட்டில் சுற்றி சுழன்று - தானியம் தனை கொய்திடுவோம்.

புறாக்கள்
எல்லோரும்:- இந்தாங்க அக்கா, பழங்களைச் சாப்பிடுங்கோ.

இளவரசி :- நன்றி நல்ல ருசியாக இருக்கின்றது. (இளவரசி பழங்களை உண்ணுகிறாள்)
ஒரு நாள் கூட நான் இவ்வாறு ருசியாகச்சாப்பிட்டதில்லை நன்றி.
(இளவரசி மர நிழலிலி தூங்குகிறாள்)

புறா 2 :- இளவரசி அக்கா எழும்புங்கோ.

இளவரசி :- சரி எழும்பிறேன்.

புறாக்கள்
எல்லோரும்:- இன்று நாங்கள் எல்லோரும் சந்தோசமாக இருக்கிறோம் அல்லவா அதனால் நாம் ஆடிப்பாடுவோமா?

இளவரசி :- சரி நாங்கள் ஆடிப்பாடுவோம் . (இளவரசியும் புறாக்களும் சந்தோசமாக இருந்தனர் காட்டு வழியாக சூனியக்காரி ஒருத்தி பொன் மானுடன் வந்துகொண்டிருந்தாள்)

சூனியக்காரி:- பொன்மானின் விலை ரூபா 5 வாங்கப்போறீங்களா வாங்குங்கோ.

இளவரசி :- ஐயோ! பொன் மானா நான் அதை வாங்கப்போகிறேன்.

புறாக்கள்
எல்லோரும்:- வேண்டாம், வேண்டாம். அவள் மிகவும் கொடியவள். அவளை நம்பாதே அக்கா.

சூனியக்காரி:- வாங்கப்போறியா இப்பொன்மானை இந்தா பிடி.
(இளவரசி பணத்தைக்கொடுத்துவிட்டு அப் பொன்மானை வாங்க அப்பொன் மான் தன் கொம்பினால் இளவரசியை குத்துகிறது. இளவரசி மானை கீழே போடுகிறாள். மான் ஓடி புல்வெளியில் மறைந்தது. புறாக்கள் அதனைப்பார்த்து அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. அவ் வழியால் வேடன் ஒருவன் வருகிறான் )

புறாக்கள் :- வேடனே! வேடனே! நில்லுங்கள். இளவரசி ஒருத்தி சூனியக்காரியின் லீலையால் விபத்துக்குள்ளாகி இருக்கிறாள். (வேடன் உடனே ஓடிச்செல்கிறான்)

வேடன் :- புறாக்களே! பச்சிலைகளை பறித்து வாருங்கள்.

புறாக்கள் :- சரி நாங்கள் பறித்து வருகிறோம். (புறாக்கள் வேடனிடம் கொடுக்கின்றனர்)

வேடன் :- பச்சிலைகளால் குணப்படுத்துகிறான். (அவ் இளவரசி குணமாகி எழும்புகின்றாள்)

புறாக்களும்
இளவரசியும்:- வேடனுக்கு மிகவும் நன்றி
(வேடன் அப் பொன்மானை அம்பால் கொல்கிறான். அப் பொன் மானுக்குள் அச் சூனியக்காரியின் உயிர் இருந்தது ஆதலால் மானுடன் அவளும் இறக்கிறாள்)

புறாக்கள் இளவரசியை அவளது தாய் தந்தையிடம் ஒப்படைக்க எண்ணி வேடனிடம் கூறின. வேடனும் அவ் இளவரசி அப்புறாக்களை விட்டுப்பிரிவதெண்ணிக் கவலையுடன் வீடு திரும்புகிறான்.

(நாடகம் முடிவுற்றது சிறுவர்கள் அனைவரும் நன்றி கூறிச் செல்கின்றனர்.)

**புவனேஸ்வரன். விதுசா**
7A

"ஒரு நாள் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே"
வாய்ப்பனையாகவும் நாக்கடிப்பாகவும்
சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கொள்ளுமே"

- வெற்றி வேற்கை

"சேராத இடந்தனிலே சேரவேண்டாம்
செய்ந் நன்றி ஒரு நாளும் மறக்கவேண்டாம்"

- "உலக நீதி"

**தொகுத்தவர் :**

**வி. கௌதமி** 10E

# அன்பினால் உலகாள்வோம்

நாம் வாழும் உலகமானது ஒரு அச்சில் சுழன்று சூரியனையும் சுற்றி வருகின்றது. இதன் போது அதற்குள் காணப்படும் எப் பொருளும் சிதறிவிடாமல் அதன் ஈர்ப்பு சக்தியானது தொழிற்படுகின்றது. இதைப்போலவே இங்கு வாழும் உயிரினங்களும் ஏதோ ஒரு சக்தியால் பின்னிப் பிணைந்து வாழுகின்றன. இவற்றுள் முக்கியமாக மனிதன் ஒரு குடும்பமாக, ஒரு கிராமத்தவனாக ஒரு நாட்டவனாக தன் நிலை சிதறிப் போகாமல் ஒன்றினைந்து வாழ அன்புப் பினைப்பே காரணமாகின்றது.

உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளும் அன்புக்குக் கட்டுப்பட்டவைகளே. அகிலத்தையே ஆட்டிப்படைக்கும் அதி அற்புதமான சக்தி அன்புக்கு உண்டு. பிறந்த குழந்தையில் இருந்து இறக்கப் போகும் கடைசி உயிர் வரை அன்புக்கு உட்பட்டே வாழ்கின்றனர்.

அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது.ஆனால் ஒவ்வொருவராலும் மற்றவர் மேல் அன்பு செலுத்த முடியும்.அன்பு அள்ள அள்ளக் குறையாத இன்ப ஊற்று அன்புக்கு உருவம் இல்லை. உள்ளத்தில் ஊற்றெடுத்து உணர்வுகளால் வெளிப்படுகின்ற அற்புதமான பண்பே அன்பாகும்.

பிறந்த குழந்தை தாயின் அன்புக்காக ஏங்கும் வளரும் பிள்ளை பெற்றோரின் அன்பில் மூழ்கும். இளமைப் பருவமதில் அன்பு காதலாக மலரும். குடும்ப நிலையில் அன்பு கடமையாக உருப்பெறும். முதிய வயதில் அன்புள்ளோருக்காக மனம் முழுக்க முழுக்க ஏங்கும் பார்க்கும் பார்வையில் கனிவாக , பேசும் பேச்சில் இனிதாக தூக்கும் கைகளில் மென்மையாக, செய்யும் செயல்களில் அழகாக அன்பைப் பல வழிகளில் வெளிபபடுத்த முடியும்.

அதிகாரத்தினாலும் வீரத்தினாலும் வேறு எந்த சக்தியினாலும் சாதிக்க முடியாத செயல்களை அன்பு சாதித்து விடும்.இதற்கு மிருகங்கள் கூட விதிவிலக்கு அல்ல. அன்புக்கு பாசம், கருணை, இரக்கம், நேசம், காதல், எனப் பல பொயர்கள் உள்ளன.தாய் பிள்ளையில் காட்டும் அன்பு பாசமாகிறது.இறைவன் மனிதன் மீது காட்டும் அன்பு கருனையாகின்றது.உள்ளவன் இல்லாதவன் மீது காட்டம் அன்பு இரக்கம் எனப்படுகின்றது.நண்பன் நண்பன் மீது காட்டும் அன்பு நேசமாகிறது.காதலன் காதலி மீது காட்டும் அன்பு காதலாகின்றது.மனிதன் இறைவன் மீது காட்டும் அன்பு பக்தி எனப்படுகின்றது. சிறியவர் பெரியோர் மீது காட்டும் அன்பு மரியாதையாக மிளிர்கின்றது.

அன்பு நிறைந்த மனைவி, கணவனை ஆளமுடியும் அன்பான பிள்ளை தன் பெற்றோரை ஆளமுடியும். அன்பான தலைவன் தன் குடும்பத்தை ஆளமுடியும். அன்பான குடும்பங்கள் நல்ல கிராமத்தை, நாட்டை, உலகை ஆளமுடியும்.

அன்பால் உலகை ஆண்ட பெரியோர்களை நாம் நினைவு கூ[illegible]. அன்பு வழியாக அகிம்சை வழி நின்ற மகாத்மாகாந்தி அவர்கள் ஆங்கிலேயரை ஆளமுடிந்ததல்லவா? கருனை வழியில் நின்று அன்னை திரேசா இன்றும் உலகை ஆண்டுகொண்டுதான் இருக்கிறார். நட்பின் வழி நின்ற கிருக்ஷ்னன், தன்னைக் காட்டிக் கொடுத்தவர் மீதே அன்பு காட்டிய யேசு பிரான், அன்புக்கு பொருள் சொன்ன முகமது நபி , அன்பு வழி சென்ற கௌதம புத்தர் பலரும் இதற்குள் அடங்குகின்றனர்.

அன்னை பற்றி திருவள்ளுவர் அவர்கள் அன்புடமை என்ற அதிகாரத்தில் சிறப்பாகக் கூறியுள்ளார். அதில்

*"அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் ; அன்புடையர்*
*என்பும் உரியர் பிறர்க்கு"* என்று கூறுகிறார். அதாவது அன்பில்லாதவர் எல்லாப் பொருட்களையும் தாமே அனுபவிப்பர். அன்புடையவர் தமது அன்பைக் கூட பிறருக்காகக் கொடுப்பர் என்று அழகாக எடுத்துரைக்கின்றார்.

அன்புள்ளம் கொண்ட ஒருவரால் தான் உலகில் மற்றவர்களிடம் அன்பு நட்பு கொண்டவராக வாழ முடியும்.அன்போடு கூடி இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பு. இல்லாவிடில் அது தோல் போத்த என்பு என்கிறார் திருவள்ளுவப் பெருந்தகை.

அறத்துக்கு மட்டுமன்றி வீரச்செயல்களுக்குப் பின்னாலும் அன்பு காரணமாக அமைந்திருக்கும். அதிகாரம் செலுத்தம் அரசனை விட அன்பான அர்சனையே மக்கள் விரும்புவர் எனப்பல கருத்துக்களை திருக்குறள் எடுத்துரைக்கின்றது.

அன்பே சிவம் என்று கூறினார் திருமூலர் அன்பால் அரவனைக்கப்பட்ட சிறிய குழந்தை பிற்காலத்தில் பெரிய ஆசானாக ,வைத்தியனாக , விஞ்ஞானியாக வரமுடியும் என்பது விஞ்ஞான ரீதியான உண்மை.

ஒரு அன்பான பிள்ளையாக , அன்பான பெற்றோராக , அன்பு வழி நின்ற ஆசானாக , அன்பான குடிமகனாக , அன்பினால் வழிகாட்டும் பெரியோராக ஒவ்வொருவரும் வாழ நேரிட்டால் உலகம் அன்பு மயமாகி ஒரு குடையின் கீழ் அமைதியுடனும் சந்தோசத்துடனும் வாழும். இதன் போது அன்பு தான்உலகை ஆழ்கிறது அரவணைக்கிறது.

"அன்பே அனைத்தும்"

**(திருக்குறள் மாநாடு-2011, தேசிய மட்டம் - 2ம் இடம்)**

**சுபாங்கி சிவகுமாரன்**-7B

"நீ நீயாகவே இரு. என்னை நானாக வாழ விடு

**தாரங்கி நவக்குமாரன்**

(வாக்கிய உரிமைப் போட்டி 2010இல் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டது)

"மானிடம் சிறப்புற மனுநீதி தழைத்தோங்க

அனைவரும் ஒன்றினைவோம்"

**சாரங்கா சபாநாயகம்**

(வாக்கிய உரிமைப் போட்டி 2010இல் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டது)

# காலைக் காட்சி

அன்று அதிகாலை ஐந்து மணியளவில், நான் மெல்ல துயில் விட்டு எழுந்தேன். அப்போது எனக்கு சோம்பலாக இருந்தாலும் பறவைகளின் இனிய ஒலி என்னை ஈர்த்தது. வீட்டிற்கு வெளியே மெல்ல நடந்து சென்றேன். ஆகா! என்ன அற்புதம்! இயற்கை அன்னையின் படைப்புக்கள் என்னை மெய் சிலிர்க்க வைத்தன. அவற்றைக்கான எனக்கு இரண்டு கண்கள் போதாது போலிருந்தது. இயற்கைக்கு ஈடானது எதுவுமில்லை. இயற்கை அன்னைக்கு நிகரான கொடைவள்ளல் யாருமில்லை என்ற கருத்து எனக்கு அப்போது சரியாகவே தோன்றியது. அந்த இனிய காலைப்பொழுதை வர்ணிக்க எனக்கு வார்த்தைகள் கிடையாது போலவே தோன்றியது.

ஆம்! உயர்ந்த மரத்தின் கிளையில் அமர்ந்திருந்த பல வண்ணப் பறவைகள் அக் காலைப்பொழுதை வரவேற்கும் பொருட்டு இனிய ராகம் இசைத்தன. காகங்கள், கிளிகள் போன்ற இன்னோரன்ன பறவைகள் தமது இருப்பிடங்களை விட்டு இரை தேடச் சென்றன. அவற்றையே உற்று நோக்கி இரசித்துக்கொண்டிருந்த நான் காலில் ஏதோ தீண்டுவது போல உணர்ந்தேன். ஆம்!அங்கே கூட்டம் கூட்டமாக எறும்புகள் தத்தமது புற்றை விட்டு வெளியே வந்துகொண்டிருந்தன. அவற்றின் சுறுசுறுப்பும் உழைப்பும் என் மனதைக் கவர்ந்தன.

சற்று நேரம் கழித்து ஒரு தங்க உருளைப்பந்து போன்ற சூரியன் மெல்ல மெல்லத் தனது பொற்கதிர்களை விரித்தவாறே முகில்களினூடாகத் தோன்றினான். கதிரவன் தோன்றும் போது பூமாதேவி மெதுவாகத் தனது கரும்போர்வையை விலக்கி எழுகின்றாள். இருள் ஒழிய எங்கும் ஒளி வெள்ளம் பரவியது.

தனது நாயகனின் வருகையைக்கண்ட தாமரை அழகாக முகமலர்ந்து கதிரவனை வரவேற்கிறது. தாமரை மட்டுமல்லாது எண்ணற்ற மலர்கள் மலர்ந்து எங்கும் புதுமணம் பரப்பின. வெண்ணிலாவும் விண்மீன் கூட்டங்களும் வானுக்குள் புகுந்து மறைந்தன.

இலைகளின் நுனியில் படிந்திருந்த பனித்துளிகள் கதிரவனின் கதிர்கள் பட்டவுடன் வெண்மணிகள் போலமினுங்கின. ஆலயமணியோசையும் பக்தர்களை வழிபாட்டிற்கு வறுமாறு அழைப்பு விடுத்தன.

வீதிகளில் ஆங்காங்கே தோளில் மண்வெட்டிகளை சுமந்தவாறு, தத்தமது வயல் நிலங்களுக்கு வீறு நடை போட்டுச் சென்றுகொண்டிருநதனர். ஏனைய தொழிலாளர்களும் தங்கள் தொழில்நிலையங்களை நோக்கி விரைந்தனர். பால் போன்ற வெண்நிற சீருடைகளை அணிந்த பள்ளிச்சிறார்களும் வீதியில் ஆங்காங்கே தென்பட்டனர்.

சொல்லிலடங்காத அவ் இனிய காலைப்பொழுதினில் மூழ்கியிருந்த நான், எனது அம்மா என்னை அழைப்பதைக் கேட்டு திடீரென உணர்ச்சி வரப்பெற்றேன். கடிகாரத்தை அவதானித்த போது நான் பாடசாலைக்கு ஆயத்தமாகும் நேரம் நெருங்கி விட்டதை அறிந்தேன். எனது இரசனைகளை ஒரு புறம் விட்டு பாடசாலைக்கு ஆயத்தமானேன். ஆயினும், அன்று நான் இரசித்த பொன்னான காலைக்காட்சி எனது வாழ்வில் மறக்க முடியாத பொழுதாகும். சிறிது நேரம் இயற்கையுடன் இணைந்திருந்தது எனக்கு ஒரு யுகமாகவே தோன்றியது.

**(தமிழ்த்தினம் -2010, தேசியம் - 2ம் இடம்)**

**ப. கஸ்தூரி**
தரம் 7'B"

## தமிழ்த் தினம் - 2010 தேசியமட்டம்



**நிற்பவர்கள்:** செல்வி இறம்மியா நடேந்திரா (ஆசிரியர்), செல்வி கஸ்தூரி பரமானந்தம் (பிரிவு II) கட்டுரை, 2ஆம் இடம், செல்வி அபிநயா கண்ணதாஸ் (பிரிவு IV) தனிநடனம், 2ஆம் இடம், செல்வி பாவனா சிவயோகன் (பிரிவு II) தனிநடனம், 1ஆம் இடம், செல்வி யதுஷா ரகுநாதன் (பிரிவு II) பாவோதல், 3ஆம் இடம், செல்வி லுசியன் எமரின் சுதர்சினி (ஆசிரியர்),

**இருப்பவர்கள்:** திரு. நா. ஜெயதீபன் (ஆசிரியர்), திருமதி சிவநேசமலர் ஜெயபாலன் (உப அதிபர்),
திருமதி வசந்தி குஞ்சிதபாதம் (ஆசிரியர்), திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் (அதிபர்), திருமதி இராஜினி முத்துக்குமாரன் (பிரதி அதிபர்), திருமதி தேவலோஜினி குமாரவேல் (ஆசிரியர்), திருமதி சாந்தநாயகி வீரசிங்கம் (மன்றப் பொறுப்பாசிரியர்)

## வாக்கிய உரிமைப் போட்டி - 2010



**நிற்பவர்கள்:** தேசிய மட்ட வாக்கிய உரிமைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டோர் செல்வி தாரங்கி நவகுமாரன், செல்வி சாரங்கா சபாநாயகம், செல்வி சங்கவி திருச்செல்வம்.

**இருப்பவர்கள்:** திருமதி சிவநேசமலர் ஜெயபாலன் (உப அதிபர்), திருமதி சாந்தநாயகி வீரசிங்கம் (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் (அதிபர்), திருமதி இராஜினி முத்துக்குமாரன் (பிரதி அதிபர்), செல்வி இறம்மியா நடேந்திரா (ஆசிரியர்)

# விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது, தமிழ் கலாசாரத்தில் முதன்மையானது. தமிழர் பண்பாடும் அதுவே. வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று உள்ளன்புடன் அவர்களை உபசரிப்பதே விருந்தோம்பலாகும். வரும் விருந்தினரை உள்ளன்போடு உபசரித்தல் வாழ்க்கையில் மனதுக்கு பெரும் நிம்மதியைத் தரும். விருந்தினர் பார்த்திருக்க நாம் உண்பது நல்ல பண்பாகாது.

அனிச்சம் பூ மோந்து பார்த்தால் வாடும். விருந்தினர் முகம் வேறுபட்டுப் பார்த்தாலே வாடிவிடும். விருந்தினரை உபசரித்து அப் பயனை எய்தாதவர்கள் பொருளை வருத்திக் காப்பதில் பயனேதும் காணமாட்டார்கள். செல்வந்தர்களிலும் பார்க்க, ஏழைகளிடம் விருந்தோம்பும் பண்பு நிறையவே இருக்கும். செல்வம் உள்ளவர்கள் விருந்தோம்பலை இகழும் மடமை, அவர்கள் அறிவு இல்லாதவர்களுக்கு ஒப்பானவர்களாகும்.

தன்னிடம் வரும் விருந்தினரை உபசரித்தும் மேலும் விருந்தினரை வரவேற்க இருப்பவன் மறுபிறவியில், தேவராய் அவர்களால் உபசரிக்கப்படுவான். விருந்தோம்பல் என்பது உள்ளன்போடு செய்யப்படவேண்டும். பெயருக்காக செய்யப்படும் விருந்தோம்பல் நல்ல பலனைத் தரமாட்டாது. விருந்தோம்பலின் பயன், இன்ன அளவு உடையது என்று கூறப்படுவது அன்று. விருந்தினரின் தகுதி அளவே அளவு ஆகும்.

விருந்தினரை உபசரித்து தான் உண்ணுகிறவனுடைய விளை நிலத்தக்கு விதை விதைக்கவும் தேவையில்லை. வந்த விருந்தினரை நாள் தோறும் உபசரிப்பவனது இல் வாழ்க்கை ஏழ்மையில் வருந்திக் கெடுவது இல்லை. நல்ல விருந்தினரை இனிய முகத்தோடு உபசரிப்பவனது வீட்டில் திருமகள் மனம் மகிழ்ந்து தங்குவாள்.

**(திருக்குறள் மாநாடு -2011, தேசியம் 3ம் இடம்)**

**இ. அஞ்சனா**

7 B

# உண்மையே உயர்வு தரும்

**வசந்தகுமாரி தயாபரன்**
ஆசிரியர்.



அன்பானவர்களே! உண்மை பேசி உத்தமர்களாக வாழ்ந்த பலரது வரலாற்றினை நீங்கள் அறிவீர்கள் . எனினும் அந்த உண்மை பேசுவதை நாமும் கடைப்பிடிக்க தொடங்குவோமாயின் எம்மை எத்தகைய சிறுமையும் வந்தடையா.

உண்மைக்கு இலக்கணமாக அரிச்சந்திரனது வரலாற்றை அறிவோம். அவர் தான் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவதற்காக எத்தனையோ இடர்களை அடைகின்றார். எனினும் தான் கொண்ட கொள்கையில் நின்று இம்மி அளவும் மாறவில்லை. இதனாலே ஓர் உத்தமராக உதாணபுருஷராக திகழ்கின்றார். இவ்வாறு எமது வாழ்க்கையில் உண்மை பேசுதலாகிய ஓர் பண்பினை கடைப்பிடிப்போமானால் நாம் உய்வடைய இது ஏதுவாகும்.இதனை மறந்து சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தம்மை மாற்றி ச்சோந்திகளாக வாழும் பொய்யர்கள் அந்தத் தருணங்களிலேயே தப்பித்துக் கொள்ளலாம் அன்றி தொடர்ந்து சிறப்பாக வாழ முடியாது. அவர்கள் நிலை தாழ்ந்து கொண்டே போகும் இது கண்கூடு பஞ்சசீலங்களில் ஒன்றாக உண்மை பேசுதலை உங்கள் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவீர்களானால் நீங்கள் வாழ்வில் உயர்வடைவீர்கள். உங்கள் வாழ்வு வளம் பெறும்.

"உண்மை பேசி உயர்வடைவீர்"

☆☆☆

"கல்வி எனும் படகிலேறி
பண்பு எனும் பயிரை வளர்"

**இ.யனுக்ஷா**
*தரம் 12 வர்த்தகம்*

"இலட்சியம் இல்லாத வாழ்வு காற்றில்லாத பலூன்"

**இ.துளசி**
*தரம் 12 கலை*

# தமிழ் அன்னைக்காய்

இனிய நற் காவியம் பலவும் தந்த
காப்பிய மகளிர் தன்னில்

கோவலன் கொலையுண்ட சேதி கேட்டு
பாண்டிய மன்னன் முன்னே
வழக்குரைத்த கண்ணகிக்காய்

பாண்டி நாட்டு செங்கோலாட்சி என்முதற்
பிழைத்த தென்ற பாண்டியனோடு
உயிர் நீத்த கோப்பெருந்தேவிக்காய்

ஆடல் மகளிர் ஆகி கற்பு நெறி தவறா - மாதவிக்காய்
துறவு வாழ்வே மேல் எனக்கருதி - மணிமேகலைக்காய்
துரியோதனன் இரத்தம் கண்டு அல்லால்
மேவிக் குழல் முடியேன் என்ற - பாஞ்சாலிக்காய்

தெய்வத்தின் விருப்பம் போல
அருங்கொடை மகனைப் பெற்று
ஆற்றிலே விட்டதோடு பஞ்ச
பஞ்சபாண்டவர் அன்னையான - குந்திதேவிக்காய்

புனிதமே பெண்ணாய் உருவகித்திட்ட
இராமனுக்கேற்ற கற்புடைப் பெண் சீதைக்காய்
நாற்படையும் நல்லமைச்சாகக்கொண்டு
நளனுக்கு மாலையிட்ட நங்கை - தமயந்திக்காய்

யமனிடம் வரம் பெற்று சத்திய
வான் உயிரைக்காத்த - சாவித்திரிக்காய்

துஸ்யந்தன் நினைவு தன்னை கணையாழி
சாட்சி சொல்லக் கைபிடித்த - சகுந்தலைக்காய்

அரிச்சந்திரன் சபதம் பேண அந்தணர்
வீட்டில் பணி பல புரிந்த - சந்திரமதிக்காய்

இன்னும் எத்தனை எத்தனை காப்பிய மகளிரைக்காண வெண்ணி
தமிழ் அன்னைக்காய் தலை சாய்கிறேன்.
யான் தலை சாய்கிறேன்.

த. வானதி - 8B

# அறிந்து கொள்ளுவோம்

1) அகில இலங்கைத் தமிழ் மொழி தினம் எப்போதுகொண்டாடப்படுகின்றது?
2) “ஒரு நூல்நிலையம் திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப்படுகினடறன” என்ற நூல்கள் பற்றி கருத்துத்தெரிவித்தவர் யார்?
3) “தமிழர் நாகரிகத்தின் உச்சமுகட்டை” எடுத்தியம்பும் காவியங்கள்” என்று இந்திய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற பிரேஞ்சு அறிஞர்“அலெய்ன் டானியலு” எடுத்துரைத்த காவியங்கள் எவை?
4) இலங்கையின் முதல் முதலில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை எது?
5) ஆங்கிலமொழயைச் சிறப்பித்து வணிக மொழி என்று கூறுவது போல் தமிழ் மொழியை சிறப்பித்து எவ்வாறு கூறுவார்?
6) நால்வகை எழுத்துக்கள் எவை?
7) சிறந்த நூல்களுக்கு வழங்கப்பட்டு வரும் உயர்விருது எது?
8) வீரசோழியத்தை இயற்றியவர் யார்?
9) ஐந்து இலக்கணங்களும் எவை?
10) கீதாஞ்சலியை இயற்றியவர் யார்?

## விடைகள்

1) ஜீலை மாதம் 19ம் திகதி
2) விவேகானந்தர்
3) மணிமேகலை, சிலப்பதிகாரம்
4) உதயதாரகை
5) பக்திமொழி
6) உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம்
7) புக்கார்
8) புத்தமித்திரனார்
9) எழுத்து,சொல்,பொருள்,யாப்பு,அணி
10) ரவீந்திரநாத்தாகூர்

**சி. சிவானுஜா** 8-E

# கண்டு கொண்டேன்

கடவுளைத் தேடித் தேடி
தேய்ந்து போனது
கால்கள்!

காணமுடியாமல்
காய்ந்து போயின
கண்கள்!

இறுதியில் இமைகளை
மூடிக்கொண்டு...
தேடினேன்!

ஞானம் பிறந்தது...
பத்து மாதங்களாய்
கருவறையில் காத்து
பெற்று வளர்த்த
தாயே கடவுள்.....!

**கி. இவோன்சர்மி** 9-B

# மனித உரிமைகள் இன்றேல் மனித மாண்பும் இல்லை

உயிரினங்களில் மனித இனமே உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு உயர்ந்ததாகக் கருதப்படக்காரணம் அவனது சிந்திக்கும் ஆற்றலே. அதனால் தான், மனித உரிமைகள் வகுக்கப்பட்டு மனித மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும். மனிதன் தன்னைத்தான் அழித்து வருகிறான். "யுத்தங்கள் யாவும் மனித மனங்களிலேயே தோன்றுகின்றன" என்பது ஐக்கிய நாடுகள் சபையின் முடிவு. ஆசைகளே மனிதனை யுத்தம் என்ற அழிவுக்குள் இழுத்துச் செல்கின்றன. உலகினை ஆட்டிப்படைத்த இரண்டு மகா யுத்தங்கள் தான் மனித உரிமைகள் மீறப்படுதலின் உச்ச நிலைகள் எனலாம்.

"வல்லவை உயிர் வாழும்" என்ற தத்துவத்தில் இருந்தே உயிரினங்களின் இருப்பினை விளக்க முடியும். எனினும் இன்று எத்தனையோ அறிவு வாயில்கள் திறந்த போதிலும் மனிதன் மிருகம் என்ற அடிப்படைத்தத்துவத்தை அடிக்கடி ஞாபகமூட்டுவதால் மனித உரிமை மீறல்கள் இடம் பெறுகின்றன.

இங்கிலாந்தில் "மக்னா காட்டா" உடன்படிக்கையில் தொடங்கி ஐக்கிய நாடுகள் அமைப்பு வரை எத்தனை முயற்சிகள் மனித உரிமைகளுக்காய் "சாண் ஏறமுழம் சறுக்கும்" என்பது போல் படிப்படியாக முன்னேறும் மனித உரிமைகள் ஆதல பாதாளத்திற்கே செல்வதைப் பார்க்கும் போது மனித குலத்தின் முன்னேற்றம் என்பது கானல் நீரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

மனிதன் சிந்திப்பதற்கே உரிமையற்று இவ்வுலகில் மூலை முடுக்கில் எங்கு வாழ்ந்தாலும் அது மனித குலத்தின் சாவுமணியென்றே பொருள் கொள்ள வோண்டும் ஏனெனில் சிந்தனை சக்தியொன்றே மனிதனை ஏனைய உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது.

மனிதனுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காய் மனிதனால் உருவாக்கப்பட்ட அரசாங்கங்கள் பலவே இன்று குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளன நவீன ஜனநாயக்க முறையில் சட்டங்களை இயற்றி மனித கௌரவத்தைக்கேள்விக்குறியாக்கியுள்ளன.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் இவ் உலகை அழிப்போம்" என பாரதி கூறியதைப் போல் மனித உரிமை இன்றேல் மனிதகுலமே அழியட்டும் என ஒரு கவிஞன் மொழியும் காலம் கனிந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் குறிப்பிடப்பட்டஅத்தனை அடிப்படை உரிமைகளும் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதில் எந்த மனித உயிருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.ஆசையும் அதிகார பலமும் ஒருவரிடமோ அல்லது ஒரு குழுவிடமோ இருக்கும்யின் மனித மான்பு மறைந்து விடும்.

நவீன ஜனநாயகச் சிற்பிகள் பலர் தோன்ற வேண்டும் என்பதும் எம்மை நாமே கண்ணாடி முன் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதும் காலத்தின் கட்டாயக் கட்டளையாகும்.

**(வாக்கிய உரிமைப் போட்டி-2010இல் தேசியத்தில் தெரிவு செய்யப்பட்ட வாக்கியத் தலைப்பு)**

**திருச்செல்வம் சங்கவி-9 "B"**

# பன்மைப் பண்பாட்டுக் கல்வி

**திருமதி கௌரி சண்முகலிங்கம்**
B.Com.PGD in Edu; MPhil Edu.



ஒரு நாட்டில் அல்லது குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஒன்று கூடிவாழும் மக்கள் சமூகம் என்ற கணிப்பினைப் பெறுவர். அவ்விடம் ஒன்றாக வாழும் மக்களிடையே மொழி, இனம், மதம் போன்ற அம்சங் களின் அடிப்படையிலான பிணைப்புக்கள் நெருக்கமான உறவுகளுக்கு வித்திடுகின்றன. ஒரு குறிப்பிட்ட அம்சங்களின் தமக்குள் ஒருமித்த தன்மையுள்ள மக்கள் வாழும் சமூகம் ஒருமைச்சமூகமென அழைக்கப் படும். அதில் இருந்து மொழி, இன, மத அடிப்படைகளில் வேறுபடும் மக்கள் தொகுதி கொண்ட சமூகம் பன்மைச்சமூகமென அழைக்கப்படும்.

பன்மைச் சமூகங்களில் கல்வியானது அங்குள்ள மக்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கும் சமூகமாக வாழ்வதற்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டும். அவ்வாறே இங்கு மேற்கொள்ளப்படும் கல்வியியல் ஆய்வுகளும் செயற்பாடுகளும் மக்களின் அமைதியான புரிந்துணர்வான அறிவு அனுபவங்களைத் தருபவையாக அமைய வேண்டும். இதன் அடிப்படையிலேயே பன்மைப் பண்பாட்டுக் கல்வி பற்றிய ஆர்வம் இன்று அதிகரிக்க காணலாம்.இந்த வகையில் பண்பாட்டிடைக் கல்விக்கான சர்வதேச நிறுவனம் (inter-national intitution of inter-cultural education) போன்ற அமைப்புக்களின் ஆய்வு முயற்சிகள் முன்னோடியாக விளங்குகின்றன. அதேவேளை இத் துறையில் மொழி-பண்பாட்டியல் தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர் சோன்யா நைய்ரோ போன்றோரின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. பண்பாடு உயர்திறனை வளர்த்தலும் அதற்கேற்ப சமுக அரசியல் சூழலினைக் கட்டமைத்தலும் இவரது எழுத்துக்களில் முக்கியத்துவம் பெறக்காணலாம். பன்மைப் பண்பாட்டுக் கல்விக்கான கலைத்திட்டம் தொடர்பான இவரது சிந்தனைகள் பெறுமதியானவை.

பண்பாட்டுப் பன்மைக்கான கல்வி என்பது வெறுமனே பயிலு[illegible]ிள்ளைகள் சார்ந்த பிரச்சனை அல்ல என்பதைப் புறிந்துகொள்வதே எமக்கான முதல் பா[illegible]ளது. நியமமான கல்விச்சூழலின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொள்ளையில் பாடசாலைக் கல்வியின் கலைத்திட்டம், அதனைச் செயலாக்கும் ஆசிரியரின் பணி என்பன இந்த விடயத்தில் முதன்மை பெறுகின்றன.

அனைத்துப்பிள்ளைகளையும் சமமாக மதிக்கும், அனைத்துப் பண்பாடுகளையும் சமனாய் நோக்கும் பண்பாட்டினை வளர்த்தெடுக்கும் பெரும் பணியில் ஆசிரியர்கள் தெளிந்த சிந்தனையுடன் செயற்படுவது அவசியம்.தேசத்தில் நிலவும் மொழிகள், சமயங்கள், சமூக வகுப்புக்கள் பால் நிலை வேறுபாடுகள், இனத்துவக்குழுக்கள் பற்றிய ஆழமான அறிவு ஆசிரியர்களிடத்து நிறைந்து காணப்படுதல் வேண்டும்.

ஏனைய மொழிகளை அறிதல், பண்பாடுகளை மதித்தல் எனும் பன்மைப்பாட்டுக் கல்வியானது எந்த வகையிலும் சுய பண்பாட்டினைக் குறைத்து மதிப்பிடுதல் என அர்த்தம்

கொள்ளுதல் ஆகாது. எடுத்துக்காட்டாக மொழியியளாளர் எட்வேட் சப்பீர் குறித்தவாறு மொழி என்பது ஒருவரின் சிந்தனை, புலக்காட்சி, உணர்வுநிலை, சமுதாய விழுமியங்கள் என்பவற்றினை வெளிப்படுத்தும் வாகனமாக மட்டுமன்றி சமூக உறவுகளைத் தேடித்தருகின்ற வலைப்பின்னலாகவும் வளங்குவதைக் காணலாம். சுயமொழி, சுதேச மொழிகள் என்கின்ற எல்லைகள் விரிந்து இன்று உலகத் தொடர்பு மொழிக்கான அவசியம் பற்றி நாம் கவனம் கொள்வது இந்த அடிப்படையில் தான். உண்மையில் பன்மைப் பண்பாட்டுக் கல்வி என்பது இபபொழுது சூழுமைவின் பண்பாடுகள் பற்றிய புரிதல் இசைதல் என்பதற்கும் அப்பால் எதிர்காலத்தில் அமையப்போகும் புதிய பண்பாட்டுச் சூழலுக்கான கல்வியாகவும் கூட விரிவு பெறுவதினை இங்கு மனதில் கொள்ளலாம். இன்றய உலகமயமாக்கல் சூழலில் பல பண்பாடுகள் ஒன்றையொன்று சந்திக்கின்ற வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. உலகளாவிய கல்வி வாய்ப்புக்கள் தொழில் வாய்ப்புக்களிடையே சுமூகமான தொடர்பாடலுக்கும் மேம்பாட்டிற்கும் பன்மைப் பண்பாட்டுக் கல்லி பெருந்துணையாகின்றது.

பொருத்தமான முறையில் வகுப்பறைக் கற்பித்தலின் போதும் புறச்செயற்பாடுகளின் போதும் பன்மைப் பண்பாட்டு உணர்திறனை பிள்ளைகளிடத்து பதிய வைக்கும் செயல் முறைகளை வகுத்தல் அவசியமாகின்றது. பிறபண்பாடுகள் தொடர்பான முற்சாய்வு, அதன் வழியான பாரபட்சம் தொடர்பான விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெரும்பான்மை-சிறுபான்மை என்கின்ற மேலான்மைக் பிரிவுகள் இந்தப் பிரிவுகளினடியன ஒரே வார்ப்பிலான பண்பாட்டுப் பதிவுகள் இலக்கிய-ஜதீக பிரதிமைகள் என்பவற்றிலிருந்து உண்மை நிலைகளுக்கு மீளுதல் அவசியமாகின்றது. தங்கள் உளச்சார்பு நிலைகளை மதிப்பிட்டு தங்கள் மனங்களை முற்சாய்வான கற்பிதங்களில் இருந்து விடுவிக்க வேண்டும். இந்த வல்லமையுடன் பிள்ளைகளின் மனங்களுக்குள் புதைந்துள்ள முச்சாய்வுக் கூறுகளை இனங்கானுதல் - அகற்றுதல் எனும் பணியை ஆசிரியர்கள் கருத்துடன் மேற்கொள்ள வேண்டும். ஏற்கனவே குறித்தவாறு அனைத்துப் பிள்ளைகளையும், அனைத்துப் பண்பாடுகளையும் சமமாய் காணுதல் என்பது பாடசாலையினதும் ஆசிரியரினதும் அடிப்படை இலக்காக அமையும் பொழுதே பன்மைப் பண்பாட்டுக் கல்வியின் பயனை நாம் பெற முடியும்.

பன்மைப் பண்பாட்டுக் கல்வியின் இன்றியமையாமை பெரிதும் உணரப்படும் எங்கள் புலங்களில் நிலவும் கல்விச் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு - மதிப்பீடுகளை தனித்தும், கூட்டாகவும் மேற்கொள்ளுதல் அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக, எங்கள் கலைத்திட்ட-பாடநூல்கள் பன்மைக் பண்பாடு என்ற எண்ணக்கருவாக்கத்தினை எந்தளவிற்கு புரிந்து கொண்டு எழுதப்பட்டன? பிறபண்பாடுகள் பற்றிய புறிதலுக்கு வழிசமைக்கும் உள்ளடக்கங்கள் உள்ளனவா? இல்லாத போது இந்த இடைவெளியை அந்தப் பாடங்களின் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்கள் உரியவாறுநிவர்த்தி செய்கின்றார்களா? என்பது போன்று வினாக்களிற்கு விடை கானும் பொறுப்பு எமதாகின்றது.

எங்கள் பாட நூல்களின் பன்மைப் பண்பாட்டுத் தன்மை ஆசிரிய வகுப்பறைச் செயற்பாடுகள் தொடர்பான சுனில்ரூறெஜி சிறிவர்த்தனா, சசங்கப்பெரேராபோன்றோரின் ஆய்வ்கள் வெளிப்படுத்தும் திருப்தி யற்ற நிலமைகள் மாற்றம் பெற வேண்டும்.பன்மைப் பண்பாடு என்பதற்குப் பதிலாகக ஒரேபண்பாடு (mono culture) என்ற நிலைமையை பிரதிபலிப்பவாகவே பெரும்பாலான கலைத்திட்ட பாடநூல்கள் அமைந்துள்ளமையை இவை தொடர்பான உள்ளடக்கப்பகுப்பாய்வின் வழி வெளிப்படுகிறது. குறிப்பாக வரலாற்று நூல்கள்

நேரான உளச்சார்புகளை வளர்ப்பதற்குப் பதிலாக கற்பிதமான ஜதீகங்ளுக்குள் ஆழப்புதைந்து எதிரான இன முரண் உணர்வுகள் வளர்க்கப்படுகின்ற வகுப்பறை நிலமைகள் எம் கவனத்துக்குரியன கற்பிக்கின்ற மாணவர்கள் சார்ந்த இனக்குழு தவிர்ந்த ஏனைய குழுக்கள் பற்றிய எதிரான பிரதிமையை வளர்த்தல் கற்பிக்கும் குழுவிற்கு ஏனைய குழுக்களைப் பற்றிய தரவுகள் எதனையும் கற்பிக்காது தவிர்த்தல். அதன் வழி தாம் சார்ந்த குழுவின் மேலாதிக்கத்திை நிலை நாட்டுதல் என்றவாறு அமைகின்ற ஆபத்தான வகுப்பறை நிலமைகள் மாற்றம் பெற வேண்டும் இவ்வாறே பாடசாலைகளின் வளம்பரம்பல் பிள்ளைகளின் சமூக அடுக்கமைவு நிலை இதன் விளைவான பாடசாலை இடைவிலக்கல் - சமூகப்புறந்தள்ளுதல் போன்ற அனைத்து விடயங்கள் தொடர்பான கவனிப்பும் அவசியமாகிறது.

பன்மைக் பண்பாட்டுடன் எழுதப்படும் நூல்களும் கூட தனியே தேசிய வீரர்கள் அல்லது தேசிய பண்டிகைகள் அறிமுகம் செய்வதனால் மட்டும் அவை பன்மைப் பண்பாட்டுக் கல்வி ஆகிவிடுவதில்லை. வாழுகின்ற பண்பாடுகளின் முழுதளாவிய அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குகின்றனவாக கலைத்திட்ட பாடநூல்கள் அமைந்திடல் வேண்டும்.

பன்மைப் பண்பாட்டுக் கல்வி தொடர்பான மேற்குறித்த செயற்பாடுகளை ஒருங்கிணைக்கம் வகையிலான கல்விக் கொள்கை மேம்பாடும் அவற்றினை நடைமுறைப படுத்தலுக்கான இன்றைய எம் தேவைகளாகும். கல்வியாளர் டுயீ குறித்தவாறு “மேலான்மை யற்ற கல்வி சனநாயகம்” என்ற கருத்தியல் தெளிவுடன் பன்மைப்பாட்டுக் கல்வியெனும் உயரிய இலக்கின் பயன்களை எமதாக்குவோம்.

☆☆☆

“ஓட்டைப் படகு
ஒடிந்த துடுப்பு
கரை சேரலாம்
கடல் போல் நம்பிக்கை இருந்தால்”

**சு. பிரேமாலினி**
தரம் 12வர்த்தகம்

# தமிழ் பெற்ற ஔவையார்

தமிழ் இலக்கிய வரலாற்றில் "ஔவையார்" என்ற பெயரோடு பல புலவர்கள் உள்ளனர். யார் இந்த ஔவையார்? வரலாறுகளோடு ஒன்றிய வாழ்வியலின் தாயே தான் இந்த ஔவையார் சங்ககாலத்தில் ஒரு ஔவையார், சுந்தரமூர்த்தி நாயனார் காலத்தில் ஒரு ஔவையார், கம்பன் காலத்தில் ஒரு ஔவையார் என வரலாற்றாசிரியர்களே குழம்பும் புதிராக அவர் வரலாறு இருக்கின்றது. ஏனெனில், சங்ககாலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கிய ஔவையார் மீது உள்ள பெருமதிப்பால், பிற்காலத்தவர்கள் பலர் சிறப்புக்கருதி அந்த ஔவையாரின் பெயரைத் தமக்குப் பெயராக வைத்துக் கொண்டனர்; வேறு சிலர் இயற்றிய நூல் உலகில் நெடுநாள் விளங்கவேண்டும் என்று விரும்பி, ஔவையாரின் பெயரையே தங்கள் நூலின் ஆசிரியர் பெயராக எழுதிச் சென்று விட்டனர் போலும் அதனால் தானோ ஔவையாரின் வரலாற்றில், ஔவையார் பற்றிய குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பதிவிறக்கமான கருத்துக்களினை நுணறிவுமிக்கோர் ஏற்பதே பொருத்தம் உதாரணமாக "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்ற ஔவையாரின் பாடலில் காணப்படும் வான்கோழிப்பறவை சோழர்காலத்துப் பறவையாகும்.

ஔவையார் என்பவர் யாராகிலும் அவர் ஒரு மக்கள் கவிஞர் என்ற பொதுமைக்குள் வரலாம். ஔவையார் அக்காலத்திலே, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மன்னர்களைப் பற்றியும் அவர்களது நாட்டின் நிலைமைகளைப் பற்றியும் பாடியுள்ளார் சிலவேளைகளில், தமது பாட்டுக்களின் மூலம் அம் மன்னர்களின் குறைகளைக் கூறி திருத்தியுமிருக்கின்றார். ஈரக்குருதி காயாத போர்வாளிலும், ஔவையார் எழுத்தாணியின் இனியதமிழினால் எத்தனைஅரசர்கள் மனம் மாறியிருந்தார்கள். குமுறும் எரிமலைபோல் பகையுணர்வு கொழுந்து விட்டெரிந்த மூவேந்தர்களையும் பாரிமன்னரின் திருமணநிகழ்வில் பங்கு பெறச்செய்ய வைத்ததும் ஔவையாரின் தமிழ் ஆற்றல்தான்!!!

இவர்கள் ஊர் ஊராகத் திரிந்து மக்கள் இடர்களிலே பங்கு கொண்டார்கள். அதன் மூலம் தான் எமக்கு மூதுரை, வாக்குண்டாம், கொன்றைவேந்தன், ஆத்திசூடி, தனிப்பாடல்கள் போன்ற இறவாத தமிழ்ப்பாக்கள் கிடைத்தன. தீக்குள் விரலை வைத்தாலும் செந்தமிழைத் தீண்டுவதே இன்பம். தகுதியுடையவனையன்றிப், பிறிதொரு பொய்மையாளரைப் பாடாத வீரமரபுக் குரியவர்கள் இப்பெண் புலவர்கள். ஔவையாரும் வேல்பட்டு மடிந்த வீரனைப்பாடினார்கள், விழுப்புண் படைத்ததோர்களைப் பாடினார்கள், அவைகளின் தொகுப்புப்புறநானூறில் அடங்கியுள்ளது. "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்" என்று இல்லறத்தைப் புகழ்ந்தனர். கொடையாளியைப் பாடினார்கள். கொடூரமானவர்களையும் நிந்திக்கவும் தவறவில்லை. இல்லறமே நல்லறம், அறம் செய விரும்பு என்று சுருக்கமாக மனிதகுலத்தை நேர்வழிப்படுத்திய
தெல்லாம் அவர்களின் தமிழ்ப்பணி இல்லையா?

"அனைவர்க்கும் கல்வி" என்ற இன்றைய சித்தார்த்தம் அன்றே ஔவையாரால் சொல்லப்பட்டிருக்கின்றது. யாருக்கு அதுவும் ஒரு பேய்க்கு; பாருங்கள்; அந்தப் பாடலை,

“பெண்பாவை இருபாலிற் கல்லானை
வெற்றோலை கண்பார்க்கக் கையெழுத - மாட்டானை பெண்பாவி

பெற்றாளே பெற்றாள் பிறர் நகைக்கப் பெற்றாள்
எற்றோ மற்றெற்றோ மற்றெற்று” என்பதாகும்.

அப்படியாயின், ஔவை பாடிய அந்தப் பாடலின் பொருள் என்ன? நடுநிசியில் பாழ் மண்டபத்திலே என்னைக் கொல்லவிருக்கும் பைசாசமே! நீ முதலில் இப்படியானவர்களைக் கொல் எனப் பட்டியலிடுகின்றாள் ஔவையார்; ஒரு வெண்பாப்பாடலை இருமுறைவாசித்தும் பொருள் விளங்க முடியாதவர்களைப், பார்த்தும் சரியாக எழுத முடியாதவர்கள் கல்விதனைக் கற்காதவர்களை முதலில் கொல்லு என்று அப்பெண்பேய்க்கு கல்வியின் சிறப்புப் பற்றி எடுத்துரைக்கின்றார்.

இப்படிச் சமுதாய மறுமலர்ச்சிக்காக எத்தனையோ தமிழ்ப்பாக்களைப் பாடிய ஔவையார்களின் தமிழ்ப்பணி மகிமை மிக்கபொக்கிஷங்கள் ஔவையார்களின் அருந்தமிழ்ப் பணி பாடல்கள் விழுமிய கருத்துச் செறிவும், அற்புதக்கற்பனை வளமும், உணர்ச்சிப் பெருக்கும் உடையனவாக அமைந்திருக்கின்றது. அறத்தைப்பாடி, பனையைப்பாடி மன்னரைப்பாடி, மக்களைப்பாடி பாட்டினால் தமிழ்ப்பணியைப் புரிந்த ஔவையார் ஒரு மக்கள் கவிஞர்தானே!!! நாமும் மக்கள் கவிஞர் ஆகலாம்.

ம. பிருந்தினி
தரம் - 8B

# அதிஷ்டம்

*அதிஷ்டம் தேடியும் வராது!*
*எதிர் இருந்தும் தெரியாது*

*துணிந்தவன் ஓரத்தில்!*
*துணைநிற்கும்!*
*ஏங்கியிருப்பவனிடத்தே!*
*ஏமாற்றத்தை தான் கொடுக்கும்!*

*சீட்டுகள் மட்டுமல்ல*
*மனத்துள்ளும் முயற்சியாக*
*குடிகொண்டு - செல்வம்*
*கோடியாகக் குவிக்கும்*

*கண் விழித்துப் பின் எழுதும்*
*பேனா முனையிலும்!*
*உதட்டோரச் சிரிப்பிலும்*
*கள்ளமற்ற உள்ளத்திலும் ஊறி நிற்கும்*

*பரீட்சைப் பெறுபேறாக!*
*உன்னைத் தந்த அன்னையாக!*
*அறிவு தரும் தந்தையாக!*
*உயிர் கொடுக்கும் நட்பாக!*
*அருகிலே இருக்கும் - அது*
*எதிரிலே தெரியும்!!!*

**பொ. ஜெமிகா**
தரம் - 8

# கம்பன் வழியில் இத்தாலியக் கம்பன்

**திருமதி வி. புஸ்பநாதன் (B.A)**
சிறப்பு (தமிழ்)



ஐரோப்பியர் காலத்தில் ஐரோப்பிய பாதிரிமாரால் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்ட போது பிறநாட்டிலிருந்து வந்து தமிழைக் கற்று அதன் வாயிலாகத் தம் சமயக் கொள்கையைப் பரப்பியோருள் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறத்தகுந்தவர். கொன்ஸ்டன் ஜோசப்பெஸ்கி என்னும், வீரமாமுனிவராவர். இவரைத் தைரியநாதசுவாமி எனவும் அழைப்பர். இவர் இத்தாலி நாட்டவர்.

கம்பர் இந்தியாவில் மயிலாடுதுறைக்கருகேயுள்ள திருவழுந்தூரில் பிறந்தவர். கம்பன் கொல்லையைக் காத்ததால் கம்பர் எனப் பெயர் பெற்றார் என்பர். காளிகோயிலில் பூசை செய்யும் எளிய குடும்பத்தில் பிறந்தவர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பெற்றவர்.

கம்பரின் புகழையும் பெருமையையும் நிலைநாட்டுவது கம்பராமாயணம் வான்மீகி இராமாயணத்தைத் தழுவி தமிழ்ப்பண்பாட்டின் அடிப்படையில் எழுதியுள்ளார். ஆறு காண்டங் களையும் 118 படலங்களையும் கொண்டுள்ளது.

வீரமாமுனிவர் இயற்றிய நூல்களில் காவிய வரிசையில் வைத்து எண்ணத்தகுந்தது "தேம்பாவணி" என்னும் காப்பியம் தேம்பாவணி வாடாதமாலை என்னும் தேன்போன்ற பாக்களால் ஆன மாலை என்றும் பொருள்படும். ஆகிர்தமரியாள் என்னும் கன்னியாஸ்திரியின் The City of God என்பதன் தமிழாக்கமே இந்நூலாகும் இந்நூலின் பெருமையினை சுத்தானந்த பாரதியார்,

"தேம்பாவணியைத் தொடினும் தமிழ் மணம் கமழும் என்கரமே" என்றும் பேராசிரியர் சேதுப்பிள்ளை "சிறந்த காவியமாகத் தெவிட்டாத மதுரமாகத் தெளிந்த கருத்தாகச் செப்பரும் பொருளாகச் சகல அலங்காரத்தோடு வீரமாமுனிவர் தேம்பாவணியைப் பாடினார்" என்றும் எடுத்து இயம்புகின்றார்கள்.

கம்பனைப் புகழும் பாரதியோ "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்றும் "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்றும் கூறுகின்றான்.

இவ்வாறு இன்றும் நின்று நிலவும் இவ் இருபடைப்புக்களிலும் அணிகள் கையாளப்பட்டிருக்கும் முறையோ எம்மையெல்லாம் வியக்கவைக்கிறது அவற்றை நோக்கும் முன் தேம்பாவணிக்காவியத்துள் நுழைவோம்.

சூசை மரியாளை மணந்தபோது வானவர்கள் மூவாயிரத்து அறுநூற்றுப்பதினைந்து (3615) மலர்களைக் கொண்டு முப்பத்தாறு மாலைகள் தொடுத்துச் சூட்டினர் என்னும் பூர்வீகக்

கதைக்கு அடையாளமாக அதே அளவு 3615 செய்யுட்களையும் 36 படலங்களையும் கொண்டு இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. மூன்று காண்டங்களைக் கொண்டமைந்தது.

இறைவன் படைப்பில் உள்ள மாட்சிபற்றியும் கிறிஸ்துவின் பிறப்புப் பற்றியும் முதற் காண்டத்தில் விபரிக்கப்படுகின்றது. இரண்டாவது காண்டம் கிறிஸ்துவின் குழந்தைப்பருவம் பற்றியும் அவரது பெற்றோரது தூயவாழ்க்கை பற்றியும் விபரிக்கின்றது.

மூன்றாவது காண்டம் கிறிஸ்துவின் பாடுகள், அவரது உயிர்ப்பு, மரியாளின் விண் ணேற்பு, பற்றிக் கூறுவதாகும். விருத்தப்பாவிலே பாடப்பட்டது. கம்பன் காவியம் போன்று தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்திற்கு அமைவாக அறம், பொருள், இன்பம், வீடு பயக்கும் முறையில் தேம்பாவணி ஆக்கப்பட்டுள்ளது மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர் தோற்றம் இயற்கைப்புனைவுகள் வர்ணனையுடன் இக்காப்பியத்தைப் படைத்துள்ளார் இவருக்கு இத்தாலியக்கம்பன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.

குழந்தைவாணன் (சூசை) பூமியில் உதிக்கும் போது ஆகாயத்தில் "ஆடாநிலை அறத்து என் மார்பில் தேம்பாவணி ஆவான் வாடா அருள்மகன்" என வாழ்த்துப் பாடப்பட்டது என்பர். இத்தகு சிறப்புமிகு தேம்பாவணியின் பைதிரம் நீங்குபடலத்திலும் கம்பராமாயணத்தில் கைகேயி சூழ்வினைப்படலத்திலும் அணிகள் கையாளப்பட்டிருப்பதில் ஓர் ஒருமைத் தன்மையைக் காணமுடிகிறது.

தேம்பாவணி பைதிரம் நீங்கு படலத்தில் எசித்து நாட்டிற்குச் செல்க என்று வானவன் சூசையிடம் கூறிய சொல்லைக் கேட்ட சூசையின் உள்ளமானது,

"அழல் குளித்த பைந்தாதோ" எனும் பாடலில்" அகல்வாய்ப் புண் புழல் குளித்த செந்தீயோ" என்ற வரியில் அகன்றவாயை உடைய புண்ணின் துவாரத்துள் நுழைந்த செந்தீயாக இருந்தது என்கின்றார். இதே போல கம்பனும் கைகேயி சூழ்வினைப்படலத்தில் வரத்தைத்தர தசரதன் விரும்புகின்றானில்லை என்பதை உணர்ந்த கைகேயி வரங்களைக் கொடுத்தால் வாழ்வேன் இன்றேல் இறந்துவிடுவேன் என்கின்றாள். அது கேட்ட தசதரன்.

"இந்த நெடுஞ்சொல் அவ் ஏழை கூறமுன்னே வெந்த கொடும் புணில் வேல் நுழைந்தது ஒப்ப" என்கின்றார். தீயினால் எரியுண்டதாகிய கொடிய புண்ணிலே கூரிய வேல் பாய்ந்தது போல என்று கூறுகின்றார். புண்ணில் நுழையும் வேலும், தீயும் கொடுமையானது அது போல சொல்லின் கொடுமை இரு கவிஞர்களாலும் இரு செய்யுள்களிலும் புலப்படத்தப்பட்டுள்ளது.

கைகேயி கேட்ட வரத்தினால் துன்பமுற்ற தசரதன்நிலையைக் கம்பன் "கொல்லன் ஊது உலையில் கனல் என்ன வெய்து உயிர்த்தான்" அதாவது கொல்லனது உலைக்களத்தில் ஊதும்போது உண்டாகின்ற நெருப்பினைப்போல வெப்பமாகப் பெருமூச்சுவிட்டான் என்கின்றார். தேம்பாவணியில் வீரமாமுனிவரோ மரியாளில் மனம் உருகும் நிலையை "உலைமுகந்த அருந்தழற்கு உருகி ஏந்தினான்" என உலையினின்றும் வாரிக்கொண்ட அரிய நெருப்பு போன்றது என்கிறார். இருபாத்திர மனக் கொதிப்பு நிலையை இரு கவிகளும் கூறும் விதம் சாலச் சிறந்தது.

வைகறைப் பொழுதில் கூவுகின்ற கோழிகள் கைகேயியால் தசரதன் அடைந்த துன்பநிலை கண்டு மனம் கலங்கி அழகிய சிறகுகளாகிய அழகிய இரு கைகளினால் தம் வயிற்றில் பல முறை அடித்து அழும் தன்மை

"கண்டு நெஞ்சு கலங்கி அம்சிறை
ஆன காமர் துணைக் கரம்
கொண்டு தம் வயிறு எற்றி எற்றி
விளிப்ப போன்றன கோழியே"

என்கிறார் கம்பர். வீரமாமுனிவரோ ஆண்டவனுக்கு உற்ற துயரத்தின் காரணமாக சூசையும் மரியும் அடையும் துயரத்தைக் கண்டு அத்துன்பத்தை முற்றும் உணர்ந்ததை அறிவிக்கும் முமகமாக அங்குள்ள எல்லாக் கோழிகளும் தம் மார்புகளைச் சிறகுகளால் புடைத்துக் கொண்டு வானத்தை எட்டுமாறு கூக்குரல் எழுப்பிக் கூவும் என்கின்றார். இதனைப் பின்வரும் பாடல் எடுத்தியம்புகிறது.

"ஆரணந்தருமாண்டகையாகுலக்
காரணந்தரு கட்புனல் கண்டிடர்
பூரணந்தரு மார்பு புடைத்தெலா
வாரணந்தரும் வானுறக் கூக்குரல்"
இரு கவிஞர்களின் தற்குறிப்பேற்ற வணிப்பிரயோகம் கண்டு வியக்கத்தக்கதே.

தசரதனின் அரிய உயிர் மெலியும் படி கைகேயி புரிந்த பாவச் செயலால் சூரியன் கிழக்கு மலையில் சினம்முதிர்ந்து மிகவும் செந்நிறம் கொண்டவன் போலக் காணப்பட்டான் என்பதனை,

"வெய்யவன் கோபமுற்றி மிகச்
சிவந்தன னொத்தனை குணக்குன்றிலே" என்கின்றார் கம்பர். வீரமாமுனிவரோ போர் முரசினின்று எழும் ஓசைக்கு ஒப்பாகக் கடல் ஒலிமுழங்க அப்பகைவன் மேல் எழுந்து போர் புரிய எய்யும் கதிராகிய அம்புகள் பாய்ந்து விழுமாறு உதித்த கதிரவன் முகம் சிவந்து தோன்றித் தானும் எழுந்த துயரத்தை ஆற்றமாட்டாதது போல் தோன்றியது என "முழவு எழும் தொனி ஒப்ப முந்நீர் ஒலி" எனும் பாடலில் "எழுந்த வெய்யோன் சிவந்து எய்தி வான் அழ எழும் துயர் ஆற்று இல தோன்றிற்றே" என்கின்றார். இதில் ஏரோது மன்னனின் பகையைக் கண்டு சினந்த தன்மை எடுத்தியம்பப்படுகிறது. இயற்கையில் நடைபெறும் நிகழ்வில் புலவர்கள் தம் கருத்தினையேற்றிக் கூறும்பான்மை சிறப்புக் குரியது.

"அணியிலாக் கவிதை பணியிலா வனிதை" எனும் கூற்றுக்கமைவாக அணிகளைக் கையாண்டு தத்தம் காவியத்தில் பெருமை பெற்றனர. இரு கவிகளும் கவிச்சக்கரவத்தி கம்பனின் சாமர்த்தியும் கிறிஸ்துவக் கவிஞர்களான வீரமாமுனிவரையோ H.A கிருஷ்ணபிள்ளையையோ விட்டுவைக்கவில்லை. இதனால் "இத்தாலியக் கம்பன் என வீரமாமுனிவரும் "கிறிஸ்தவ கம்பன் என H.A கிருஷ்ணபிள்ளையும் போற்றப்படுகின்றனர். கிறிஸ்தவ மரத்தில் பழுத்த இரு கனிகளும் கம்பன் வழியில் காவியம் படைத்து அழியாப் புகழ் பெற்றனர்.

☆☆☆

# என் இன்பத் தாய்

அழகின் உருவம் அவள் அறிவின் சிகரம்
ஆனந்தத்தை அள்ளிக்கொடுப்பவள்
அலை கடலையும் அடங்காக் காற்றையும்
அறிவுக்குள் அடக்கி அமுதம் ஆக்கிடுவாள்.

என்றும் இளமை குன்றாதவள்
ஏற்றம் மிகு புகழ் பூத்தவள்
இயற்கை அனைத்தும் அவள் வசத்தில்
இன்ப ஊற்றெடுத்துப் பாய்ந்திடும் அவள் ஓசை.

மன்னர்கள் மார்பிலே சாய்ந்தவள்
மகிழ்வுடன் பாடும் பாடலில் கலந்தவள்
மாண்புறு சொற்கள் ஈந்தவள்
மக்கள் மனங்களில் நிறைந்தவள்.

கொஞ்சும் மழலை மொழியிலும்
பிஞ்சு மனங்களிலும்
வஞ்சமல்லா உள்ளங்களிலும்
பஞ்சமில்லாமல் உறைந்தவள்.

என் இனியவளே எமக்கு சரித்திரம் படைத்தவளே
எத்திக்கும் தித்திக்கப் பேசுபவளே
இன் அமுதம் போன்றவளே என் உயிரே
என் இன்பத் தாய் இனிய தமிழ் அவளே.

அ. ஆருணியா

9A

# யாழ்ப்பாணத்து சுவரோவியப் போக்கும் மீள்பார்வையும்

க. ஜெயதீபன்
ஆசிரியர்



பன் நெடுங்காலமாக ஓவியக்கலை உன்னத வளர்ச்சி கண்டு இன்று பல்வேறுபட்ட சுவைகளுக்கு உட்பட்டு நன்நிலையை அடைந் துள்ளது ஒவு, ஓவம்" என்ற வினையடியில் இருந்து "ஓவியம்" தோற்றம் பெற்றதாக கூறப்படுகிறது. ஓவியக்கலையின் வளர்ச்சிப்போக்கில் சுவர் ஓவியக்கலை முக்கிய பங்கு வகிக்கின்றது விஸ்ணு தர்மபுராணம் ஓவியம் வரையும் முன் சுவரின் மேற்பரப்பு கரி உமியை இறுக்கமான பசையுடன் கலந்து அரைத்து மேற்பரப்பில் பூசி மட்டப்படுத்திய பின் இதன் மேல் மிக மென்மையாக மெருகூட்டப்படும் வரை சுண்ணாம்புக் கலவை பூசப்பட வேண்டும் என்று எடுத்துக்கூறுகிறது. ஓவியக்கலைபற்றிக் கூறும் பழம் பெரும் நூல்களில் விஸ்ணு தர்ம புராணத்தில் உள்ள சித்திர சூத்திரம், அபிலாக்ஷிதார்த்த சிந்தாமணி சிவதத்துவரத்தினாகரம், சிற்பரத்தனம், நாரத சிற்பம், சரஸ்வதி சிற்பம், பிரஜாபதி சிற்பம் போன்றன குறிப்பிடத்தக்கவை.

**சுவரோவியக்கலை**

*1)* *உலர்சுதை* (Tempera)

*2)* *ஈரச்சுதை* (Fresco)

மரபில் வரலாறுக்கு முற்பட்ட காலம் முதலாக தீட்டப்பட்டு வருகின்றது. உலர் சுதை என்பது சாந்து உலர்ந்த பின்னர் கோடுகளை வரைந்து வர்ணம் தீட்டும் முறை. ஈரச் சுதை என்பது பூசப்பட்டசாந்து உலர்ந்து போவதற்கு முன்பு கோடுகளை வரைந்து வர்ணம் தீட்டும் முறையாகும். இம் முறையிலே வரையப்பட்ட ஓவியங்கள் இன்று பல்தரப்பட்ட இடங்களில் காணக்கூயதாகவுள்ளது ஈரச்சுதை முறையில் வரையும் போது பூசப்பட்ட சுதை வரை வர்ணம் உள்ளிளுக்கப்படுவதடன் நீண்ட காலம் வர்ணம் உதிராமல் நிலைத்து நிற்கின்றது புராதன காலத்தில் ஓவியங்களை இயற்கையில் இருந்து பெறப்பட்ட வர்ணங்களின் ஊடாக தீட்டி அழகுபடுத்தினர். இவ் வர்ணங்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்பதோடு இன்று வரை ஓவியங்களின் கலை வனப்பைக்கண்டு இரசிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்து சுவர் ஓவியக்கலையானது யாழ்ப்பாணத்து இராச்சியத்தினுடைய தொன்மை வாய்ந்த கலைப்பாரம்பரியத்தைக்கொண்டது ஆனால் இன்று அவ் ஓவிங்களின் சுவடோ இருந்த இடங்களோ காணமுடியாமல் போய்விட்டமை யாழ்ப்பாண கலை ஆர்வலர் மத்தியில் வியப்பையும் கவலையையும் ஏற்படுத்துகிறது. யாழ்ப்பாணத்தின் சுவர் ஓவியக்கலை ஆலயங்களை மையப்படுத்தி வளர்க்கப்பட்டுள்ளது என்ற கருத்து பன் நெடுங்காலமாக கூறப்பட்டது. இக் கருத்தை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளமுடியாவிட்டாலும் ஆலயங்களிலே அதிகமான சுவரோவியங்கள் காணப்படுகின்றமை இக் கருத்தை வலுப்படுத்தும் முகமாகவே அமைகின்றது. ஆகவே இக்கட்டுரையில் யாழ்ப்பாணத்தின் சுவரோவியப் போக்குத்தொடர்பாக வரன் முறையை இரண்டுவிதமாக எடுத்து நோக்குவோம்.

1) சமயம் சார்ந்தவை
2) உலகியல் சார்ந்தவை

சமயம் சார்ந்த யாழ்ப்பாணத்து சுவரோவியங்களை 75 தொடக்கம் 150 வருடங்கள் வரையுள்ள கால இடைவெளிக்குள் தீட்டப்பட்டவையாகும். 15ம் நூற்றாண்டோடு ஐரோப்பியர் வருகை யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட தொன்மை வாயந்த பழம் பெரும் ஆலயங்கள் இடித்து அழிக்கப்பட்டமை கட்டட சிற்ப ஓவியபண்புகளை அவற்றின் கலை நுணுக்கங்களையும் அறிய முடியாமல் செய்து விட்டன. அவற்றின் சுவடுகள் இன்று அவர்களால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரன்களில் (கோட்டை) காணமுடிகிறது. அண்மைக்காலத்தில் கலாகேசரி ஆ.தம்பித்துரை யினால் எழுதப்பட்ட யாழ்ப்பாணத்து பிற்காலச் சுவரோவியங்கள் என்ற நூல் மட்டும் யாழ்ப்பாணத்தின் சுவரோவியப்போக்கை அறியக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் சமயம் சார்பான சுவரோவியங்கள் என்று நோக்கும் போது புராண இதிகாச வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக்கூறும் நிகழ்வுகள் ஓவியங்களாக காணப்படுகின்றது. வெண்சாந்து பூசிய சுவரிலே ஒட்டு வர்ணங்களையோ, தூள் வர்ணங்களையோ வச்சிரம் போன்ற ஒரு வகைப்பசையுடன் சேர்த்து தீட்டியிருக்கிறார்கள். எனவே அவை இயற்கையின் தட்ப வெட்ப மாற்றங்களிற்கு உள்ளாகி ஒளி மங்கி, நிறம் குன்றி சிதைந்து போகும் நிலையிலும் எம்மவர்களின் ஓவியங்களை மறைத்து வர்ணம் தீட்டும் மனப்பாங்கினாலும் இன்று இவ் ஓவியங் களின் அழகையும் கலை நுணுக்கத்தையும் காணமுடியாமல் போய்விட்டன. இந்து ஆலயங் களில் காணப்படும் தற்காலத்து அதிகமான சுவரோவியங்கள் 1990இன் பின்னர் வரையப்பட்டவையாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கலாகேசரி ஆ.தம்பித்துரையின் யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவரோவியங்கள் என்ற நூலிலே மாவிட்டபுர கந்தசுவாமி கோயில் வசந்த மண்டபச் சுவரில் வரையப்பட்ட ஓவியங் களைப்பற்றிக்கூறும் போது "திருப்பாற்கடலிலே ஆதி சேடன் மேல் சயனிக்கும் விஸ்ணு" வாயிற்படியில் இரு (மருங்கிலும் ) 14 பூத கணங்கள் இறகுகளுடன் மத்தளம் வாசித்தல் நடனம் ஆடுதல்" மேல் தீராந்தி ஆகிய உத்தரத்தில் அன்னப்பட்சிகள் நீல வண்ணத்திருமாலின் கீழே "மாருதப்புரவீகவல்லி அரசிளம் குழந்தையை இடுப்பில் வைத்த நி[illegible] காணப்பட்ட இவ் ஓவியங்கள் இன்று கலை நயம் அற்றவர்களின் கவனிப்பு இன்மைய[illegible]து போன அவலம் வருந்தத்தக்கது இவ் ஓவியங்கள் தொடர்பான அண்மைக்கால ஆய்வுகளின் படி சோழர்களின் கலைப்பாணியை உள்வாங்கி வரையப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

தாவடியைச்சேர்ந்த திரு எம்.துரைசாமி என்பவரால் நல்லூர் சட்ட நாதர் ஆயைத்திலும் கீரிமலை சிறாப்பர் மடத்லும் கிட்டங்கியிலும் வரையப்பட்டசுவர் ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன கோபுர வாயிலில் மேற்தளத்தில் "இடப வாகனத்தில் அம்மை அப்பன்" தெற்குப்பக்க சுவரில் "மூசுஷிகவாகனத்திலேறிய விநாயகப்பெருமான்சேவலும் மயிலும் புடை சூடி முருகப்பெருமான் பழனியாண்டி உருவிலும், மண்டப வெளித்தூண்கள் ஐந்தின் ஆலயத்துடன் தொடர்புடைய பெரியார்களின் முழு உருவப்படங்களும் ஆறாவது சுவரில் இவ் ஓவியங்களை வரைந்த துரைச்சாமியின் தன்னுருவப்படமும் கிட்டங்கி சுவர்களில் வரையப்பட்ட இலக்குமி, சரஸ்வதி போன்ற ஓவியங்களும் காணப்பட்டன. இன்று இவ் ஓவியங்களில் ஒன்றையும் பார்க்கமுடியாத அளவிற்கு வெள்ளை பூசி மறைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்து சுவர்ஓவியங்களில் வனப்பை நேரில் கண்டு அறிய முடியாத அளவிற்கு அவை பாதுகாக்கப்படவில்லை. தரங்குறைந்த வர்ணப்பாவனை, இயற்கை சீற்றம், கவனிப்பார் இன்மை, பிரதி எடுக்கப்படாமை போன்ற காரணங்களால் வரையப்பட்ட சுவர் ஓவியங்கள் மெங்கு இழந்து விட்டன. யாழ்ப்பாணத்தில் பல் வகைப்பட்ட சுவர் ஓவியக்கலைஞர்கள் வாழ்ந்து வந்தாலும் அவர்களுடைய ஓவியங்கள் பாதுகாக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. மயில்வாகனம் கங்காதரனின் சுவர் ஓவியங்கள் கோப்பாய் கந்த சுவாமி ஆலயம் நீர்வேலி கந்த சுவாமி ஆலயத்தேர்முட்டி நல்லூர்கந்த சுவாமி ஆலயக் கோபுர வாயில் அதன் தேர் முட்டிக்கு அருகாமையிலுள்ள மடம் என்பவற்றில் உள்ள சுவர் ஓவியங்கள் இவரால் வரையப்பட்டவை.

யாழ்ப்பாணத்து மூத்த சுவர் ஓவியக்கலைஞர்களில் செ.சிவப்பிரகாசம், ஓய்வு பெற்ற சேவைக்கால ஆலோசகர் (யாழ்.வலயம்) செ.வரதராஜன், வட்டுக்கோட்டையை வதிவிடமாகக் கொண்ட யோகநாதன், மூர்த்தி, மணியம், தீபா, யசிந்தா போன்றவர்களுடன் இலை மறை காயாக எம்மவர்களில் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் சுவர் ஓவிய கலைஞர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

செ.சிவப்பிரகாசம் அவர்களால் வரையப்பட்ட சுவர் ஓவியங்கள் இன்று நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் 50க்கும் மேற்பட்ட சுவர் ஓவியங்களை வரைந்துள்ளார். சிறந்த வர்ணத்தெரிவு வர்ணப்பிரயோகம் கோடுகளின் போக்கு என்பன மிகத்தரமானவை ஆகும். காரைநகர் கருங்காலிமுருகன், தொல்புரம் வடக்கம்பரை முத்துமாரி அம்மன், அளவெட்டி கும்பிளாவளைப்பிள்ளையார், அளவெட்டி அளவோடைப்பிள்ளையார், அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்மன், அளவெட்டி கரைவச்சு வைரவர், திருநல்வேலி சிவன் அம்மன் ஆலயம், கடற்கரை மீனாட்சி அம்மன் போன்ற ஆலயங்களில் இன்று காணக்கூடியதாக இருப்பதும் அவற்றின் கலை வனப்பை கண்டுகளிப்பதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

செ.வரதராஜன் அவர்களால் வரையப்பட்ட சுவர் ஓவியங்கள் சாவகச்சேரி வீரபத்திரர் ஆலயம், நுணாவில் கண்ணகி அம்மன் ஆலயம், நுணாவில் கொல்லங்கரைப் பிள்ளையார், கல்வியங்காடு வீரபத்திரர் ஆலயம், கோப்பாய் சித்திர வேலாயுதர் ஆலயம், இருபாலை வைரவர் ஆலயம், புன்னாலைக்கட்டுவன் ஆலயக் கடைவைப்பிள்ளையார், சுதுமலை அம்மன் ஆலயம், சங்கானை முருகமூர்த்தி, நவாலி சிந்தாமணிப்பிள்ளையார், கந்தரோடை சிவன் பார்வதி, சிறுப்பிட்டி ஞானவைரவர், சிறுப்பிட்டி முத்துமாரி அம்மன், நீர்வேலி ஒல்லை வைரவர், நுணாவில் முருகன் கோவில் போன்ற இடங்களில் இவரது சுவர் ஓவியங்களை இன்று காணக்கூடியதாக இருப்பது பெருமைக்குரியது. கோடுகளை துரிதமாக வரைந்து வர்ணம் தீட்டுவதில் மிகவும் வல்லவராக காணப்படுகின்றார்.

பரம்பரை பரம்பரையாக சுவர் ஓவியக்கலையை யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வரும் கலைஞர்களில் யோகநாதன், மூர்த்தி, மணியம், தீபா, யசிந்தா போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுடைய சுவர் ஓவியங்கள் யாழ்ப்பணத்தில் அமைந்துள்ள சைவ ஆலயங்களில் காணக்கூடியதாக இருக்கின்றமை கலை ஆர்வங்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. இவ்வாறு யாழ்ப்பாணத்து சுவர் ஓவியக்கலைஞர்களால் வளர்க்கப்பட்ட சுவர்ரோவியக்கலை இன்று உன்னத வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால் அவற்றைப்போணும் மரபு எம்மிடம் இல்லாமை வருத்தத்திற்குரிய விடயமே.

உலகியல் சார்பான சுவர் ஓவியங்கள் என்று நோக்கும் போது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் காணப்படுகின்றன. திரு. எம்.துரைசாமி என்பவரால் வரையப்பட்ட கிட்டங்கிச்சுவர் ஓவியங்களும் Dr.a செல்வராசா என்பவரால் தனது இல்லத்தில் வரையப்பட்ட நவீன ஓவியம் ஒன்றும், காட்டுன் ஓவியங்கள் சிலவும் குறிப்பிடத்தக்கன. யாழ் பாங்செல் வீதியில் காணப்பட்ட கிட்டங்கியின் "தடிப்பந்தாட்டம் ஆடவரும் துரைமார்கள்" "சேவகன்" போன்ற சுவர் ஓவியங்கள் ஐரோப்பிய வருகையின் பின்பு அவர்களுடைய கலாச்சாரத்தை பிரதி பலிக்கும் முகமாக வரையப்பட்டவையாகும். இவ் ஓவியங்களில் ஒன்றேனும் காணமுடியாத அளவிற்கு அழிக்கப்பட்டமை கிட்டங்கி ஓவியங்களின் தன்மை, போக்கு என்பவற்றை அறிய முடியாமல் செய்து விட்டன.

1978ஆம் ஆண்டு காலப்பகுதியில் Dr.A செல்வராசா என்பவரால் தனது இல்லத்தில் வரையப்பட்ட சுவர் ஓவியங்களில் நவீன ஓவியம் ஒன்று குறிப்பிடத்தக்கது. ஓவியம் வரைவதற்கு பயன்படுத்திய சுவரின் மேற்பரப்பு வர்ண ஒத்திசைவு, உருவ ஒத்திசைவு, வர்ண பிரயோகம் போன்றன மிகவும் தரம் வாய்ந்தவை. இவர் ஓவியர் அல்ல. மருத்துவர் ஆவர் விருப்பத்தின் பேரிலேயே ஓவியங்களை வரைந்துள்ளார். இவருடைய ஓவியங்களிலே நவீன ஓவியம் மட்டுமே சிறப்பானது ஏனயவை காட்டுன் சுவர் ஓவியங்களாகும். வர்ணத்தெரிவு, வர்ணப்பிரயோகம் சிறந்த முறையில் பயன்படுத்தியமை இன்று வரை வர்ணங்கள் ஒளிகுன்றாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. இல்லத்திற்கு பல தடவை வர்ணம் பூசப்பட்டாலும் ஓவியங்களின் மேல் வர்ணம் பூசி அழிக்கப்படமல் இருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

டால்ஸ்டாய் (Tolstoy) என்பவரின் கருத்துப்படி Art is the language of feeling it is not only expression but all so transmission of feeling உணர்வின் வெளிப்பாடு கலை யாழ்ப்பாணத்து சுவர் ஓவியக் கலை மண்சுவர் மீது சுண்ணாம்புக்கலவையைப் பூசி அதன் மேல் ஓவியங்களை வரைதலோடு தொடர்புபட்டிருந்தது. இன்று நல்ல ஒரு வளர்ச்சிக்கட்டத்தை சுவர் ஓவியக்கலை பெற்றிருந்தாலும் சுவர் ஓவியங்களைப்பாதுகாப்பதில் யாழ் மக்கள் பின்னடைவைக் கண்டிருப்பது வருந்தத்தக்கது. பிரதி எடுப்பின்றிக் கால ஓட்டத்தில் வர்ணங்கள் ஒளிகுன்றுதல், உதிர்ந்து போதல் போன்ற காரணங்களால் யாழ்ப்பாணத்து சுவர் ஓவியக்கலையின் தொடர்ச்சியை அறிய முடியாமல் செய்துவிட்டன. இனி வரும் காலங்களிலும் தற்பொழுது காணப்படும் சுவர் ஓவியங்களை பாதுகாப்போமா என்பது ஐயத்திற்குரியதே.

☆☆☆

*நீரினில் சீனி கலந்து நெருப்பில் காய்ச்ச*
*தேன்போல் ஆகிவிடும் அன்றோ - பாரினில்*
*எம்மில் கல்வி கலந்து முயற்சித்தீயில் வாட்ட*
*அறிவு துலங்கி விடும்*

**க. பவந்தினி**

**தரம் - 11B**

# படித்தவற்றில் பிடித்தது....

இறவாத புகழுடையனவும் மக்கள் வாழ்வை உயர்த்துவனவுமான பெருநூல்களை உலகிற்கு ஆக்கித்தந்து, அதன் மூலம் என்றும் வாழும் திறன் பெற்றுவிட்ட புலவர் பெருமக்கள் மிகச் சிலரேயாவர். அவர்களுள் ஒருவர் இளங்கோ அடிகள் என்பது உலகனைத்தும் ஒப்புக்கொண்டதோருண்மை. அவர் தமிழ் நாட்டில் பிறந்தவர். அவரியற்றிய நூல் சிலப்பதிகாரம். இதுவே தமிழ் மொழியில் முதல் முதலாகத் தோன்றிய காவியம் ஆகும். இது சிலம்பால் விளைந்த கதையாதலின் இக்காவியத்திற்கு இளங்கோ அடிகள் "சிலப்பதிகாரம்" எனப் பெயர் இட்டுள்ளார். தமிழ் பிரதேசங்களில் சிலம்பொலி கேட்கிறது. தமிழ் மக்கள் சிலம்பு கூறும் அறங்களைப்பற்றி சிந்தனை செய்கின்றனர். இந்த உண்மையை அமரகவி பாரதியார் "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்றார். அவரது நெஞ்சை மட்டுமல்லப் படிப்போர் அனைவரதும் நெஞ்சையள்ளும் ஒப்பற்ற குடிமக்கள் காப்பியம் சிலப்பதிகாரம் எனப் பெயர் பெற்றது. ஐம்பெரும்காப்பியங்களில் முதன்மையானது சிலப்பதிகாரம். அது முத்தமிழ் மூவேந்தர், முந்நகரம், முத்தெய்வம், மும்மக்கள், மும்நீதி என்றெல்லாம் மூன்றுகளை கொண்ட சிறப்புக்குரியது. சிலம்பு + அதிகாரம் = சிலப்பதிகாரம் என்பர். சிலம்பினால் அதிகரித்த வரலாற்றைக் கூறும் நூல் என்று இதற்கு பொருள் உரைப்பர்.

உலகிலே தோன்றும் நூல்கள் அனைத்தையும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தோன்றிய போதே மனதை மயக்கி, பின்னர் தேடுவாரற்று அழிந்து விடுவன ஒருவகையின. நூலெழக்காரணமான சந்தர்ப்பமும் தேவையும் உள்ளவரைக்கும் உயிர் வாழுந்தகையன. இன்னோர் வகை. மூன்றாம் வகையின காலத்தை வெல்லும் தகுதியுடைய சிரஞ்சீவி நூல்கள். அவை எக்காலத்திற்கும் வந்து உதவிப்பயன் தருவன. இவ்வகை நூல்கள் மிகச்சிலவே. அவற்றுளொன்று சிலப்பதிகாரம் இந்நூல் சொல் நயம், பொருள் நயம் மிளிர்ந்து கற்போர் நெஞ்சைக் கவரும் சிறப்புக்கு உரியதாய் விளங்குவதால் நெஞ்சை அள்ளும் நூல் என நாமும்துணிந்து கூறலாம். "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரம்" என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை போற்றுவதும் நம் இதயத்து உணர்வைவே பிரதிபலிக்கின்றது. சிலப்பதிகாரம் "நாடகக் காப்பியம்" எனவும், "இயல், இசை, நாடகப் பொருள் தொடர் செய்யுள்" எனவும், "உரையிடையிட்ட பாட்டைச்செய்யுள்" எனவும் போற்றப்படுகிறது. இந்நூல் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்னும் மூனறு பெரும் பிரிவுகளாய் அமைந்துள்ளது. புகார்க் காண்டத்தில் பத்துக்கதைகளும், மதுரைக் காண்டத்தில் பதின்மூன்று காதைகளும், வஞ்சிக் காண்டத்தில் ஏழு காதைகளுமாக முப்பது காதைகள் இந்நூலில் அமைந்துள்ளன.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவியாகக் கண்ணகி விளங்குகின்றாள். அவளைக் கற்பின் செல்வியாகவும் அறிவின் கொழுந்தாகவும் காப்பியம் உணர்த்துகின்றது. கோவலன் பெருஞ்செல்வனாகவும், வணிகனாகவும் விளங்கினான். கலை ஆர்வம் மிக்கவனாகவும், கலைக்காக எதையும் இழக்கும் பண்புடையோனாகவும் காவியம் அவனைக் காட்டும். ஆடற் கலையரசி மாதவியோ ஆடும் மயிலாகவும் பாடும் குயிலாகவும் காணப்பட்டாள். இக்காப்பியத்தின் பாத்திரங்கள் அனைத்தும் சிலம்பு கூறும் செய்தியினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. இளங்கோ அடிகள் இக் காப்பியத்தை முத்தமிழ் நாடகக்காப்பியமாகவே உருவாக்கியுள்ளார் என்பதைப் படிப்போர் இலகுவில் புரிந்து கொள்வார். இது இளங்கோ அடிகளார் செய்த காப்பியப்புரட்சி என்றே கூறலாம். சிலம்பு கூறும் இச் செய்திகள் எக்காலத்திற்கும் பொதுவான உண்மையாகும் இவற்றை இன்றும் கூட நாம் வாழ்க்கையில் நிதர்சனமாகக் காணமுடிகிறது.

*"தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகார மதை*
*ஊனிலே உயிர் உள்ளளவும் ஓதி இன்பம் பெறுவோமாக!*

**ஏ. திவ்யா-10D**

# தமிழ் இனி என்னாகும்?

கால வெள்ளோட்டத்தின் எத்தனையோ கவின் பொருட்கள் கரைந்து போய் விடுகின்றன. உலகில் மிக உன்னதமான மொழிகளில் இன்னும் உயிர் பெற்றுத்திகழும் ஓர் மொழி தமிழ். இன்னும் உயிர்காத்து வாழுமோ? என்பது தான் கேள்விகுறி இருபதாம் நூற்றாண்டின் வீரத்தமிழன் பாரதி அன்று.

*"சொல்லவும் கூடுவதில்லை - இவை*
*சொல்லுந்திறமும் தமிழ் மொழிக்கில்லை*
*மெல்லத் தமிழ் இனிச் சாகும்"*

அவனது உயிர்த்துடிப்புள்ள ஒவ்வொரு வார்த்தைகளும் இன்னும் எம் தமிழ் மக்களின் உட்செவிகளுள் புகுந்து உணரவைத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் மொழியின் பாரம்பரியம் கலாச்சாரம் பண்பாடு எல்லாம் சிதைந்து கொண்டிருக்கின்றன.

சங்கங்கள் அமைத்து தாலாட்டி வளர்த்த சங்கத்தமிழை வெறும் அயல்நாட்டு நாகரிகத்திலும் கலாசாரத்திலும் சீரழிந்து கொண்டிருக்கிறோம் நாம் என்றால், அது குற்றச்சாட்டல்ல. யதார்த்த பூர்வமான உண்மை. எம் தமிழ்மொழியின் அருமையை வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு எடுத்துக்கூறவேண்டும். அதனை மறந்து வாழும் சமூகத்தில் தமிழ் மக்கள் இருக்கும் வரை தமிழ் வாழுமா? என்பது தான் விவாதத்திற்கு கருப்பொருளாகி விட்டது. அதனை எண்ணியே சோமசுந்தரப்புலவர்,

*"எம்மொழி மாதா படும் அல்லலைத் தீர்க்க*
*அறிவு வராதா?"*

என்று கேட்பதன் மூலம் தமிழின் இன்றைய நிலையை தெளிவாக கூறிப்போந்தார்.

*"பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்*
*பைந்தமிழின் அழுகுரலைக் கேட்டல் வேண்டும்*
*ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும்*
*என்தமிழே சலசலத்து ஓடல் வேண்டும்"*

என்று உணர்ச்சிப் பெருக்கோடு அன்று பாரதி தாசன் கூறிய வாசகங்களை நாம் வெறும் வாயினால் உச்சரிக்கிறோமே தவிர உள்ளத்தால் உச்சரிக்கின் தமிழ் வாழும் வழி தெளிவ பெறும்.

*"தீதும் நன்றும் பிறர்தரவாரா"* என்று பெரியோர்கள் சொன்னது காலத்தால் அழியாத உண்மை. எமது தாய் மொழியை நாமே பேச மறுப்பதும் அதனை நாமே இழிந்துரைப்பதும் தாய் மீது பழி சொல்லுவது போன்றதல்லவா?

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"* என்றான் அன்று பாரதி. இனிமை என்றால் தமிழ். தமிழ் என்றால் அமிழ்து. அதன் அழகையும் இனிமையையும் பாதுகாப்பது தமிழர் நம் கடமை.

"தமிழர் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" எனும் வாசகத்தைக் கடைப்பிடிக்காது தமிழர் நாம் "எனக்கு தமிழ் வராது" என்று பகட்டாக கூறுவதைப் பெருமை என்று கொண்டால் தமிழ் சாவதை யாராலும் தடுக்க முடியாது.

இப்படிப் பல பிரச்சனைகள் தமிழுக்கு சாவு மணி அடித்துக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில்

"பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்பதற்கிணங்க நாம் தமிழைக் காக்க வேண்டும். ஆகவே வீரத்தமிழர் நாம் தமிழைக்காக்க முன்வர வேண்டும். மெல்லத்தமிழ் இனிச்சாகும் என்ற பேதையர் பேச்சினை மாற்றி எட்டுத்திசையெங்கும் தமிழின் புகழ் எடுத்துரைத்து வளர்த்திடுவோம்.

வாழ்க தமிழ் மொழி!

**ப. கதிர்தர்சினி**
10 C

# பொன் மாலைப் பொழுது

நன்றாய் செக்கச்சிவந்த வானம்
தென்றல் வாகாய் பாடும் கானம்
பட்சிகள் கூட்டில் செல்ல
என் மனம் லயித்தது மெல்ல
இருள் சூழும் பொழுது - அது
மனதைப்பறிக்கும் மாலைப் பொழுது
இறைவன் தீட்டிய ஓவியம்அது
இயற்கை கொடுக்கும் காவியம்
மல்லிகை மணக்கும் மணத்திலே- என்
மனம் கவரும் கணத்திலே
நிலவு தோன்றுவது வானிலே - என்
மனது செல்லுது கனவிலே.

**சி. மருதிஸஷா**
தரம் 10 C

# வேம்பூ

புதிதாய் பூக்கிறது மணம் வீசும் பூ
இனிதாய் மலரட்டும் எம் வேம்பூ
இன்பத்தமிழ் அன்னை முடியில் நாம் சூட
அழகாய் தோன்றட்டும் மன்ற ஆவணமே!

நூற்றாண்டு வேம்பினில் மலரும் மலர்
காலமெலாம் பெற்ற வெற்றியின் குரல்
காற்றோடு போகாமல் கடலும் கொள்ளாமல்
ஞால மெல்லாம் பரவும் மன்றத்தின் ஏடே!

வேம்படிப் பள்ளியின் மருத்துவ மலராய்
அறியாமை நீங்கும் அருமருந்தாய்
நீ தரும் தமிழ்க் கல்வி நற்பெருஞ் செல்வம்
எந்நாளும் இசை பெற்று ஒளிர்கவே!

விஞ்ஞானம் கணிதம் வர்த்தகம் தொழில் நுட்பம்
அனைத்திலும் தனித்தனி துறை போனதுடன்
செந்தமிழ் மொழியும் இனிதாய் பயிலச் செய்யும்
நற் பணிமன்றம் எங்கள் தமிழ் மன்றம்

கோட்டம் வலயம் என வெற்றியீட்டி
மாவட்டம் மாகாணம் வென்று வந்து
தேசியம் சென்று முதலிடம் பெற்றிடவே
வழி தரும் தமிழ் மன்றம் உனக்கே சமர்ப்பணம்.

அரும்பும் மாணவர், முதிர்கனி ஆசிரியர்
வேராய் என்றென்றும் எம்முடன் நல்லதிபர்
வெற்றியுடன் இதழ் விரித்து அழகுடன் மிளிர்ந்து
பல்லாண்டு வாழ்க, வாழிய வேம்பூ வே!

**ஸ்ரீ. விகஷ்ணுப்பிரியா**

தரம் 11 E

# தமிழ் பண்பாடு - மயக்கமும் தெளிவும்

இன்று யுத்தம் ஓய்ந்து விட்டது துப்பாக்கிகளின் ஓசையும் எறிகணைகளின் அதிர்வும் போர் விமானங்களின் இரைச்சலும் இப்போது கேட்பதில்லை. எனது பெற்றோர் "நாட்டில் இப்போது அமைதி நிலவுகிறது" என்று கதைக்கக் கேட்டுள்ளேன். சில வேலைகளில் அவர்கள் அதனை ஒரு பொழுது போக்காகக் கதைக்கின்றார்களோ என நான் எண்ணுவதுண்டு. என்னைச்சுற்றியுள்ள இந்த சிறிய உலகப்பரப்பு இன்னும் அமைதியாக வில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது. வாகன இரைச்சலும் தூசும் சூழலை அழுக்காக்கும் ஏனைய விடயங்களும் இன்னமும் சண்டையிட்டு கொண்டே இருக்கின்றன. அயல் வீடுகளிலும் அக்கம் பக்கங்களிலும் வாய்த்தர்க்கங்களும் கை கால் அடிதடிகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. தெருவில் செல்லும் போது விபத்துக்குள்ளாகமல் வீடு திரும்புவதே எப்படி என்பதே ஒரு கேள்விக்குறியாக உள்ளது. பாடசாலைகளில் கத்தியின்றி இரத்தமின்றி நடக்கின்ற போட்டிகளும் சண்டைகளும் பரீட்சை அடிபாடுகளும் பொறாமையும் ஆக்ரோஷமும் நிரம்பி வழிகின்றன. காலை விடியும் முன்னர் தொடக்கம் இரவு சாமம் வரைக்கும் ஏதாவது ஒரு கோயிலில் ஏதாவது ஒன்று அலறியபடியே இருக்கும் இதுதான் அமைதியின் வரைவிலக்கணமா? என நான் எண்ணுவதுண்டு.

இவ்வாறான ஒரு அமைதியான சூழலில் பண்பாடு என்ற ஒரு சொல் முன்பெல்லாம் இருந்ததை விட அதிகமாக காதில் விழும் ஒரு சொல்லாக இருக்கின்றது. "எமது பண்பாடு", "தமிழ்ப்பண்பாடு", "மானுடப்பண்பாடு", "பண்பாட்டினடியாக" என்ற பல சொற்கள் எம் காதில் விழுகின்றன. அவை சில வேளைகளில் காதில் நுழைகின்றன. பல வேளைகளில் நுழையாமலே விடுவதும் உண்டு. தமிழ்ப் பண்பாடானது மிகவும் தொன்மை வாய்ந்தது என்றும் மிகவும் செழுமையுடையயதெனவும் கூறுகின்ற அதே வேளையில் தமிழ்ப்பண்பாடானது படிப்படியாக அழிந்தும் சிதைந்தும் வருகின்றது எனப் பலர் ஆதங்கப்படுகின்றமையையும் காணலாம். ஒரு நாளின் தினசரிகளைப் பார்த்தால் அதில் "தமிழ் பண்பாடு" தமிழ்ப் பண்பாட்டை கடைப்பிடியுங்கள், தமிழ்ப்பண்பாட்டைக் காப்பாற்றுங்கள் என்று பெரியவர், சிறியவர், அறிந்தவர், அறியாதவர், உள்ளவர், இல்லாதவர் எனப் பல தரப்பினர் வேண்டுகோள் விடுப்பதைக் காணலாம். இந்தப் பின்னணியில் எமது பண்பாடு அல்லது தமிழ்ப்பண்பாடு என்பது பற்றி உரத்துச் சிந்திக்க விழைகின்றேன்.

பண்பாடு என்பதை "ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் தனது நீண்ட கால சமூக வரலாற்று வளர்ச்சியின் ஊடாக தோற்றுவித்துக்கொண்ட பௌதீக வளங்கள், ஆத்மார்த்தனமான கருத்துக்கள், மதம் சார்ந்த மற்றும் ஏனைய நடைமுறைகள் சடங்குகள், சமூக பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதி" என விளங்கிக் கொள்ளலாம். பண்பாடு என்பதின் படிப்படியான ஒரு தோற்றமும், வளர்ச்சியும், செழுமையடையும் இயல்பும், மனித சமூகத்தின் தேவைகளை மையப்படுத்திய தன்மையும், ஒழுக்க நெறிகளை வலியுறுத்தும் பண்பும் இருப்பதினைக் காணலாம். எவ்வாறு தமிழ் மொழி பேசுவதால் நாம் "தமிழர்" என்ற அடையாளத்தைப் பெறுகிறோமோ அவ்வாறே தமிழர்களில் காணப்படும் பண்பாட்டுக்கூறுகளும் "தமிழ்ப்பண்பாடு" என்னும் ஒரு பொது அடையாளத்தைப் பெறுகின்றது.

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கும் போது இந்தத் தமிழ்ப்பண்பாடு என்பது முதலில் தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த மக்கட் கூட்டத்தினரின் பண்பாடாக இருந்து வந்துள்ளது. இந்தத் திராவிடப் பண்பாடே அதற்குப் பின்பு தனித்துவமான அடையாளங்களைப் பெற்றுக் கொண்ட தமிழ்ப்பண்பாடு, கன்னடப்பண்பாடு, தெலுங்குப்பண்பாடு, மலையாளப்பண்பாடு போன்ற பல பண்பாடுகளின் தோற்றுவாயாக இருந்திருக்கும். நாங்கள் விரும்பினால் என்ன? விரும்பாவிட்டால் என்ன? நாங்கள் திராவிட வழித்தோன்றல்களே. அது போலவே தமிழ்ப் பண்பாட்டை நாம் திராவிடப் பண்பாட்டின் தொடர்ச்சி எனவும் கூறலாம். சற்று ஆழமாகப் பார்த்தால் திராவிடப்பண்பாடு காலத்திற்குக் காலம் தாக்கத்திற்கும் மாற்றத்திற்கும் உட்பட்டு வந்துள்ளது தெரிகிறது.

படையெடுப்புக்கள், அதிகார மாற்றங்கள், கருத்தாதிக்கங்கள், கட்டாய வற்புறுத்தல்கள் போன்ற பல காரணிகள் திராவிடர்களின் பண்பாட்டை உடைத்து அதனை உருமாற்றம் பெற வைத்திருக்கின்றது. உதாரணமாக திராவிடர் மீது வட இந்தியரின் ஆதிக்கம் வலுப்பெற்ற காலங்களில் அவர்களது சமய வழிபாட்டு முறைகளும் பண்பாட்டுக்கூறுகளும் திராவிடப் பண்பாட்டினுள் கலந்து அதில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இது போன்றே பல்லவர்கள் முகலாயர்கள் போன்ற பல வகை மக்கள் கூட்டத்தினரின் பண்பாடுகளின் செல்வாக்கு திராவிடப்பண்பாட்டிலும் படிப்படியான ஆனால் குறிப்பிடக்கூடியளவு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

சற்று ஆழமாக நோக்கும் பொழுது உலகிலுள்ள அத்தனை பண்பாடுகளுக்குமெனச் சில பொதுத்தன்மைகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்தப் பொதுத்தன்மை ஒருவரோடு ஒருவர் உறவாடி ஏற்பட்டதல்ல. மனிதர்கள் சிறு குழுக்களாகத் தமது நாகரீகத்தையும் வளர்ச்சியையும் உலகின் வேறு வேறு பகுதிகளில் தொடங்கிய காலம் தொடக்கம் அவர்களுக்கிடையே ஒரு அடிப்படையான பொதுமை உருவாகியிருக்கின்றது. அந்தப் பொதுமை அவர்களது பண்பாடுகளிலும் கலந்து வந்திருக்கிறது. இந்தப் பொதுமையை நாம் புரிந்து கொள்வதன் மூலம் எமது சிந்தனையை மேலும் விரிவு படுத்திக் கொள்ளலாம். இந்த அவதானிப்பிலிருந்து எந்தவொரு பண்பாடும் "கல் தோன்றி மண்தோன்றும் காலத்தில்" உதித்திருக்க முடியாது என்பதுவும், பண்பாடானது காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற தேவைகள் மற்றும் புறச்சூழல், காரணிகள் என்பவற்றினால் மாற்றத்திற்குட்படுத்தக் கூடியவை என்பது புலனாகின்றது.

எனவே தமிழ் பண்பாடானது கலப்படம் எதுவுமற்ற, தூய்மையான, ஆதி மூலமான பண்பாடு அல்ல என்பதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆயினும், தமிழர் பண்பாடும் ஏனைய பண்பாடுகளைப் போலவே நல்லதொரு வாழ்வியலுக்குத் தேவையான பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், ஒழுக்கக் கோட்பாடுகள் போன்றவற்றை வலியுறுத்துகின்ற, பொதுவாக இருக்கின்ற மானுடப் பண்பாடு என்பதுடன் ஒத்துப் போகின்ற விடயங்களை உள்ளடக்கியிருப்பதைக் காணலாம். இந்தப் புறிதல் மிகவும் முக்கியமானது. மானுடர்களை மேலானவர்கள், கீழானவர்கள் எனப் பிரிப்பது எவ்வளவு நிச்சயமற்றதோ அது போலவே பண்பாட்டிலும் மேலானது, கீழானது, புனிதமானது போன்ற பிரிவினைகள் நியாயமற்றவை.

எந்தப் பண்பாடும் இயக்கத்திற்கு உட்படக்கூடியது. தமிழர் பண்பாடும் அவ்வாறான ஒன்றே. அது பல்வேறு பண்பாடுகளில் இருந்த நல்ல பல விடயங்களைத் தன்னகத்தே உள்வாங்கி வளர்ச்சியுற்றது. அதனால் செழுமையுற்றது.

தமிழ்ப்பண்பாட்டைப் பற்றிய பல எழுத்துக்கள், பதிவுகள், விளக்கவுரைகள், இருந்த போதினிலும் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் என்னும் நூலே தமிழர் பண்பாட்டைத் திறம்பட எடுத்துரைக்கும் வேதமாகக் கொள்ளப்படுகின்றது. "தமிழ் வேதம்", "தமிழ் மறை" போன்ற பெயர்களும் ஏற்பட்டன. தமிழர் வாழ்வியல் எப்படியிருப்பது என்பதையும், அது எப்படி இருக்க வேண்டும் என்பதையும் திருக்குறள் விவரிக்கின்றது. திருக்குறள் மூலம் திருவள்ளுவர் தனது சமூகக்கடப்பாட்டை செவ்வனே நிறைவேற்றியிருக்கின்றார். அவர் தான் வாழ்ந்த காலத்து வாழ்க்கை முறையை மட்டும் பேசவில்லை. தனக்கு பின்னால் வருகின்றவர்களின் வாழ்க்கை முறையையும் அவர்களின் பண்பாடு எப்படியிருக்கவேண்டும் என்பதையும் கூறியுள்ளார். அவர் உண்மையிலேயே ஒரு மகா பிறவி தான்.

இன்று தமிழர்கள் உலகின் பல நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களிடத்தில் காணப்படும் தமிழ்ப் பண்பாடு என்ற பொது அடையாளம் எல்லாவிடத்திலும் ஒரே மாதிரி இருப்பதில்லை. இந்த பொதுமைக்குள்ளும் சிறிய சிறிய பல வேறுபாடுகள் ஊர்கள் தோறும், நாடுகள் தோறும் காணப்படுகின்றன. தமிழர்கள் பல்வேறு நாடுகளில் வசிக்கின்ற பொழுது அந்த நாட்டிற்குரிய தேவையான சில விடயங்களும் தமிழ்ப்பண்பாட்டுடன் இணைந்து கொள்வதையும் நாம் காணலாம். இவ்வாறு வெவ்வேறு நாடுகளில் இணைந்து கொள்கின்ற பண்பாட்டின் சில புதிய மூலகங்கள், தமிழர்கள் அதிகம் வாழும் தமிழ் நாடு மற்றும் இலங்கையில் காணப்படும் பண்பாட்டிலும் மாற்றங்களையும் அதிர்வுகளையும் ஏற்படுத்து கின்றன. சுருக்கமாகச் சொன்னால் பண்பாடு என்பது நிரந்தரமான ஒன்று அல்ல. அது எப்போதுமே மாற்றத்திற்கு உட்படுகிறது. நல்லதொரு வாழ்வை வாழ உதவும் எந்தவொரு கூறுகளும் எமது பண்பாட்டை வளம் பெற செய்யும் என்பது திண்ணம். எனவே முன்பு எப்போதோ இருந்த தமிழ்ப் பண்பாடே சிறந்தது என்றோ தற்போதைய தமிழ்ப் பண்பாடு சீரழிந்த ஒன்று என்றோ நாங்கள் மயக்கத்திற்கு ஆளாகத் தேவையில்லை. தமிழ்ப் பண்பாடு அன்று மாற்றமடைந்தது. இன்று மாற்றமடைகின்றது. இனியும் மாற்றமடையும். மாற்றம் ஒன்றே மாறா விதி.

தற்காலப் பின்னணியில் பார்க்கும் போது சமூகக் கட்டுப்பாட்டை மீறிச் சடுதியாக உள் நுழைந்த பல விடயங்கள், ஒரு சமூகம் தமது பண்பாடாகக் கருதி நம்பி வந்த பல விடயங்களில் ஒரு தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தி அச் சமூகத்தின் பண்பாட்டைக் கேள்விக்கும் கேலிக்கும் ஆளாக்கி வருவதைக் காண முடிகிறது. படிப்படியாக சிறிது சிறிதாக ஏற்படுகின்ற, ஏற்பட வேண்டிய மாற்றங்கள் அதிகரித்த அளவுகளில் அள்ளை கொள்ளையாக ஏற்படுவதனால் அது மாற்றங்களின் காத்திரத்தன்மையையும் ஆரோக்கியத்தையும் பாதித்து விடலாம் என்கின்ற ஒரு பொதுவான பயம் எல்லோரிடமும் தெரிகிறது.

இவ்வாறான ஒரு மயக்கமான சூழலில் இளைஞர்களின் பாடு என்ன? முதியவர்களின் பண்பாடு சம்பந்தமான வரையறைகளைப் பின்பற்றுவதா? அல்லது புதிதாக ஏற்பட்ட மாற்றம்

என்கின்ற அலைகளிலும் அடிபட்டு அள்ளுப்பட்டுப் போவதா? இந்தக் கேள்விகளுக்கு விடை காணுவதற்கு நாம் மீண்டும் பண்பாடு என்பது பற்றிய சரியான புரிதலைப் பெற வேண்டும். காலங்காலமாக நிலவி வந்திருக்கின்ற எமது பண்பாட்டின் செழுமையான விடயங்களைப் பற்றிய அறிவை காரண காரியத் தொடர்புகளோடு விளக்குதல் வேண்டும். மற்றய பண்பாடுகளோடு ஒப்பிடும் பொழுது எமது பண்பாட்டில் காணப்படும் பொதுவான இயல்புகளையும், தனித்துவமான அம்சங்களையும் அறிந்துகொள்ள வேண்டும். தமிழ்ப் பண்பாட்டினுடைய தனித்துவமான அடையாளத்தையும் தொடர்ச்சியையும் பேணுவதில் எமக்குள்ள கடப்பாடு பற்றிய சுயவிழிப்பு ஏற்பட வேண்டும். எங்களைச் சூழ ஒலிக்கும் தமிழ்ப் பண்பாடு பற்றிய கோஷங்களையும், அது சீரழிந்து போகின்றதோ என்ற அங்கலாய்ப்புக்களையும், அதற்குப் பின்னால் இருக்கின்ற பயங்களையும், பாதுகாப்பற்ற உணர்வுகளையும் நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். நாம் அதிசயமாகத் தன்பாட்டில் தோன்றிய ஒரு புள்ளியல்ல என்பதையும், பல்லாண்டு காலத் தொடர்ச்சியினது ஒரு புள்ளி மட்டுமே என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு தொடர்ச்சியின் ஒரு புள்ளி என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. மாற்றங்கள் நிரந்தரமானவை என்பது தெரிந்தாலும், மாற்றங்கள் வலிந்து உட்புகாமல், இயல்பாக நடைபெற வேண்டியவை என்பதை நாம் ஒவ்வொருவரும் மனதில் கொள்ள வேண்டும்.

வெளியே யுத்தம் முடிந்து விட்டது. ஆயினும்................

"காற்றே, வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற
இனிய வாசனையுடன் வா
இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.
காற்றே, வா.
எமது உயிர் நெருப்பை நீடித்து நின்று நல்லொளி தருமாறு
நன்றாக வீசு.
சக்தி குறைந்து போய், அதனை அவித்து விடாதே.
பேய் போல் வீசி, அதனை மடித்து விடாதே.
மெதுவாக நல்ல லயத்துடன், நெருங்காமல் நின்று வீசிக்
கொண்டிரு.
உனக்குப் பாட்டுக்கள் பாடுகிறோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகிறோம்"

- மகாகவி சுப்ரமணிய பாரதியார் -

**சி. பாவனா**

தரம் - 10B

# தமிழ் மொழியும் விஞ்ஞானமும்

விஞ்ஞானத்தின் வியத்தகு சாதனைகளின் பலாபலன்களை உலகு அனுபவிக்கின்றது. விஞ்ஞான மறுமலர்ச்சியின் அடிப்படையான பண்புகளில் மொழியும் ஒன்றாகும். இலத்தீன் ஆங்கிலம் என்பன விஞ்ஞான சமய வளர்ச்சியில் உலகாலாவிய ரீதியில் பயன்படுத்தப் படுகின்றது உலகலாவிய செம்மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியும் விஞ்ஞானத்துடன் இணையக்கூடியது மொழியை செழுமைபடுத்த விஞ்ஞானமும் விஞ்ஞான வளர்ச்சிக்கு மொழியும் பங்களிப்பு செய்துள்ளமை சிறப்பாகும்.

முடியடை மூவேந்தர் மடியிடைத் தவழ்ந்த மொழியாம் தமிழ் மொழியின் காப்பியங்கள் இதிகாசங்கள் அமைக்கப்பட்டன. இறையருள் பெற்ற நாயன்மாரின் நாவில் நர்த்தனமாடி பரவசம் ஊட்டும் தேவார திருவாசகங்களை தந்த மொழியும் தமிழே. இந்த மொழியை நவீன கல்வியின் அடித்தளமாக்கி விஞ்ஞானத்துறைக்கு இட்டுச் செல்வது தமிழ்க் கல்விச் சமூகத்தின் பாரிய பொறுப்பாகும்.

உலகை ஒருங்கிணைக்கும் இணையத்தள வலையமைப்புக்களில் பாவிக்கக்கூடிய தகுதி தமிழ் மொழிக்கு உண்டு. கணினி தட்டச்சு விசைப்பலகையிலும் தமிழ் பயன்படுகின்றது கைத்தொழில் மருத்துவத் தொழில் நுட்பத்துறையில் தமிழ் கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டுள்ளன. முழு நேரத் தமிழ்த் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் உள்ளன. ஆய்வு கூடக் குறிப்புக்கள், கள ஆய்வுப்பதிவுகள் தமிழ் மொழியில் சிறப்பாக பதிவு செய்ய முடியும். எனவே, விஞ்ஞானக் கண்டுபிடிப்பிற்கும் ஆராய்ச்சிக்கும் தமிழ் மொழி பயன்படுத்தக்கூடியது என்பது புலனாகிறது.

கால தேச வர்த்தக மானங்களிற்கு அமைய, தமிழ் மொழி வடிவமைக்கக்கூடியது. எழுத்துச் சீர்திருத்தங்கள் தமிழ் லிபியில் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளமை நாம் அறிந்ததே. தமிழ் மொழி பேசுவோர் உலக நாடுகளில் பலவற்றில் பரந்து வாழ்கின்றனர். மாற்றத்தை ஏற்கும் பண்பும் உலகலாவிய தொடர்பும் தமிழ் மொழிக்கு விஞ்ஞானத்தின் தொடர்பை இயல்பாகவே ஏற்படுத்துகின்றது.

சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி நிறுவனங்களில் கணிசமான தமிழர்கள் கடமையாற்றுகின்றனர். “நாசா” போன்ற விண்வெளி ஆராய்ச்சி நிலையத் தலைவர் இராமசாமி தமிழர். அப்துல் கலாம் தமிழ் மொழி பேசுபவர். தமிழ் பேசும் இனத்தின் புத்தாகத்திறன் சிந்தனை வளர்ச்சி விருத்தி உலகலாவிய ரீதியில் கண்டுபிடிப்புக்களில் செல்வாக்கு செலுத்தியுள்ளன.

இயல்பாகவே விஞ்ஞான பூர்வமான சிந்தனைத்திறன் தமிழர்களுக்கு உண்டு. இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் சுய பாசைளில் கல்வி வழங்கப்படும் கொள்கை உண்டு இதனால் ஒவ்வொரு விஞ்ஞான எண்ணக்கருவும் ஆழமாக மணவர்களால் ஆராயப்படுகின்றன.

இதனால் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் புதியதைக் கண்டுபிடிக்கவும் வாய்ப்பாகிறது. இணைப்பு மொழியான ஆங்கிலத்திறமை சர்வதேசத்தொடர்பை

ஏற்படுத்துகிறது. இந்த விடயம் தமிழ் மொழி மூல மாணவர்க்கு பெரிய சாதனைகளிற்கான வாய்ப்பாக அமைகின்றது. அறிவை அடிப்படையாகக் கொண்ட கல்வி எம் மொழியிலும் அமையலாம். செயற்பாட்டு முறைக்கற்றலுக்கு தாய் மொழிக்கல்வி பெரிதும் உதவுகிறது. இந்த மொழியில் கற்றவர்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களில் ஈடுபட முடிகிறது.

இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள தமிழ் இனக் குழுமங்கள் சிலவற்றில் வைத்தியக்கட்டுமான வர்த்தக விவசாயத் துறைகளில் ஆச்சரியப்படத்தக்க கண்டுபிடிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவை பகிரங்கப்படுத்தப்படாமல் உறவு முறைகள் ஊடாக குழுமநிலை மட்டங்களுக்கு ஊடுகடத்தப்படுகிறன.

விஞ்ஞான வளர்ச்சியில் தமிழ் மொழியும் தமிழ் மொழி வளர்ச்சியில் விஞ்ஞானமும் தொடர்புபட்டு நிற்பது புலனாகின்றது. அரச ஆதரவும் சர்வதேச அரசியலும் சாதகமாக அமைந்தால் இக் கட்டுரைளின் கருப்பொருள் மிகத்துல்லியமாக அமையும் என்பது நிச்சயமான உண்மை ஆகும்.

நன்றி

**ஸ்ரீ. அருனியா**
**தரம்-10D**

“காலிலே முள் குத்துகின்றதே, என நினைப்பின்
பயணத்தை தொடர முடியாது
கல்வி கசக்கின்றதே, என நினைப்பின்
இலட்சியத்தை அடைய முடியாது”

**ஸ்ரீ. ஸ்ரீமேனுஜா**
*தரம் 12 வர்த்தகம்*

# தமிழ் மொழித்தின விழா நிகழ்வுகள் - 2011











# மலர்ந்திடும் மொட்டுக்கள்.... (சிறுகதை)

ஊர் நடுவே எழுந்தருளி பக்தர்களின் துயர்தீர்த்து நிறைவான அருள் பாலித்துக் கொண்டிருக்கும் கருனைக்கடலாம் கந்தனின் ஆலயமணியோசை "டாங் டாங்" என்று கனகம்பிரமாக ஒலிக்க ஆரம்பித்ததும் சிந்து திடுக்கிட்டு படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள். அந்த சுற்றாடல் முழுவதும் வியாபித்து நின்ற கனமானதொரு நிசப்தத்தை அறிந்த பக்தி சுவை சொட்டும் ஆலயமணியோசை ஊடுருவிப்பாய்ந்து உடலிலும் உள்ளத்திலும் இனம் புரியாத புத்துணர்ச்சியை அளித்தது. வழக்கம் போல முருக நாம உச்சாடனத்துடன் எழுந்த அவள் வேகமாக தன் வேலைகளைக் கவனிக்கலானாள். அந்த வீட்டிலுள்ளோர் அனைவருக்கும் முன்பாக துயிலெழுந்து ஸ்நானம் செய்து பூசை அறையில் செற்ப நேர இறை தியானத்தின் பின் சமையலறை வேலைகளை ஆரம்பித்து விடுவாள் அவளுக்கு பின்பு தான் அந்த வீட்டின் சமையற்கார அம்மா கூட,

"ஏதடா இந்தச்சின்னப்பெண் ஒரு நாள் போல ஒவ்வொரு நாளும் இந்த அதிகாலையில் எழுந்து விடுகிறாளே" என்ற முணுமுணுப்புடன் சமையலறையினுள் நுழைந்தாலும் "அவள் இவ்வாறு செய்வது தனக்கு எவ்வளவு உதவி" என்ற நன்றியுணர்வு மனதில் இல்லாமலே.

பதினாறு வயது நிரம்பிய பள்ளிச்சிறுமி சிந்து பெற்றோருக்கு ஏக புத்திரியாக அருந்தவப்புதல்வியாக செல்வச் செழிப்பிலே அருமை பெருமையாக வளர்க்கப்பட்டவள். நாட்டிலே ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் யுத்த நெருக்கடிகள் அவளது மகிழ்ச்சியான குடும்பத்தை சிதறடித்து விட்டமை பெரிதும் கோரமானது. சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக எமது தேத்தில் இடம் பெற்ற கொடிய யுத்தமானது ஒவ்வோரு மனிதமனங்களிலும் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அளவிட முடியாது அதிலும் கொஞ்சும் மொழி பேசும் பிஞ்சுக்குழந்தைகள் தம் மழலைத்தமிழ் கூறும் பருவத்திலே "போரே நீ போ" என்று கூச்சலிட்டுப் பயந்து நடுங்கும் அளவிற்கு போரானது அவர்கள் மனதிலே ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டமை உலகமே அறிந்த உண்மை.

கிள்ளைமொழி பேசிக் கள்ளமற்றுச்சிரிக்கின்ற பிள்ளை நிலாக்களின் உள்ளக் கண்ணாடிகள் உடைந்த இரத்த வடுக்கள் பீடுகின்றனவே எதனால்? கொடிய போர் தோற்றும் கொடூரங்ளாலன்றோ? இதற்கு சிந்து மட்டும் விதிவிலக்கா என்ன? அவளது ஆறாவது வயதிலே அவர்களது பிராந்தியத்திலே தொடங்கிற்று இந்த கொடிய போர்.

துப்பாக்கிச்சத்தங்களும் தொடர்ந்து அதிர்கின்ற செல்லின் சிதறல்களும் செவிப் பறையில் மோதின. ஆயுதங்கள் அத்தனையும் காட்சிக்கு களமிறங்க, மக்களோ போட்டது போட்டபடி உயிரைக்கையிலே பிடித்து ஒன்றன் பின்னராக உத்தரவாதம் மறுக்கப்பட்ட நிலையில் கல்லும் முள்ளும் வலிந்து வரவேற்க குப்பை கூழங்களோ குவிந்திருந்து குதூகலிக்க இவற்றோடே தவழ்ந்தார்கள் பதுங்கினார்கள் புலம் பெயர்ந்தார்கள்.

அதனிடையே காலனவன் பார்வையினால் சிலா செல்லால் சிதையுண்டு செங்குருதியில் தெப்பமாகினர். அவசர சிகிட்சை அணுவளவும் கிடைக்காத அந்த அகால வேளையில் சடங்கெங்கே! சம்பிரதாயமெங்கே! மங்கையின் ஒப்பாரி எங்கே! உற்றார்

உறவினர் கூச்சலிட உறவுகள் பதறித்துடிக்க உதவுவார் எவருமின்றி உயிர் துடிக்க சொந்த மண்ணில் சுகமிழந்து சொந்த பந்தம் பிரிந்து அகதி எனும் அழைப்பினிலே அவமானம் பல பெற்று வேண்டுமா இந்த வாழ்க்கை? கடவுள் உள்ளாரா? என்று நினைத்து பறந்து விட்டார் இவ்வுலகை விட்டு.

யாரை யார் பார்ப்பது? யாருக்கு யார் தேற்றுவது? ஆறாவது வயதிற்குள் தயவான தந்தையையும் அன்பான அன்னையையும் போர் எனும் கொடிய அரக்கனின் பசிக்கு இரையாக்கி அரவணைப்பை இழந்து ஆதரிப்பார் யாருமின்றி அநாதையாய் பரிதவித்த கொடுமை சிந்துவிற்கு நேர்ந்தது விதி செய்த சதி தானோ? இக்கொடுமை சிந்துவிற்கு மட்டுமல்ல எம் தேசத்தில் இன்னும் எத்தனை சிந்துக்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

அந்த யுத்த காலத்தில் கூட சிந்து அயலவர் சிலரின் கடும் முயற்சியின் பின் அவளது தந்தையின் சகோதரனான பெரியப்பா சிவபாதத்திடம் ஒப்படைக்கப்பட்டாள். ஆறு வயது நிரம்பிய பள்ளிக்கு சென்று கல்வி கற்கத்தொடங்கி ஒரு சில மாதங்கள் சென்ற அந்த பிஞ்சு மழலை பெரியப்பா வீட்டிலே முற்றிலும் வேறுபாடான சூழலை உணர்ந்தாள்.

பெரியப்பா சிவபாதம் பாடசாலை ஒன்றின் சிறந்த தலைமைத்துவம் மிக்க அதிபராகக் கடமையாற்றிய போதும் வீட்டிலே அவர் பெண்டாட்டி தாசன் தான் பெரியம்மா தர்மவதியோ சர்வதிகாரி பெயரிலிருந்த தர்மத்திற்கும் அவளுக்கு வெகு தூரம். "இரக்கம்" என்றால் கிலோ என்ன விலை? எனக் கேட்கும் ரகம். பெற்றோரின் அன்பான அரவணைப்பில் தவழ்ந்த சிந்துவை மகள் போல பாதுகாக்கும் கடமை இருந்தும் பெரியம்மா தவறிவிட்டாள். விளையாட்டும் வேடிக்கையுமாய் களிக்க வேண்டிய சிந்துவின் வயது கண்ணீரிலே கரைந்தது அநாதையான அச் சிறுமி மீது கொடிய பெரியம்மாவிற்கு கடுகளவும் இரக்கம் ஏற்படவில்லை. செய்த சிறு தவறுகளுக்கும் சிந்து கொடுமையான தண்டனைகளை அனுபவித்து வந்தாள்.

சிந்து பாடசாலைக்கு சென்று கல்வி கற்பது பெரியம்மாவிற்கு எள்ளளவும் விருப்பமில்லை ஏனென்றால் செலவாகிவிடும் என்ற பயம். பெரியம்மாவின் மகள் பைரவியினதும் ஊராரின் வற்புறுத்தல்களுக்கு இணங்கவும் சிந்[illegible] பாடசாலைக்கு அனுப்பினாள். பெரியம்மாவின் மகள் பைரவிக்கு சிந்துவில் அலாதி [illegible]ய்வு நேரங்களில் சிந்துவிற்கு புரியாத பள்ளிப்பாடங்களைகற்பிப்பது உலக நடைமுறைகளைச் சொல்லிக் கொடுப்பது தான் அக்கா பைரவியின் வேலை. பைரவி மட்டும் அந்த வீட்டில் இல்லாதிருந்தால் சிந்துவின் மன நிலை பாதிக்கப்பட்டிருக்கும் என்பதில் எவ்வித அச்சமும் இல்லை.

காலம் உருண்டோடியது சிந்து பதினாறு வயதுச்சிறுமி ஆனாள் கள்ளம் கபடம் தெரியாத வெள்ளை மனம். சிறிது வயதில் நிறைய பொறுப்பு அடக்கமான குணம் அழகியும் கூட பொறுமையின் உறைவிடம் என்றால் மிகையாகாது. கல்வித்தரத்திலும் சளைத்தவள் அல்ல வகுப்பிலே எப்போதும் முதல் மணவி சிந்து தான். ஆனால் அவள் இந்த வீட்டில் வசிப்பது பொருந்தாத காரியம்.பாவம் சிந்துவின் விதி அப்படி.

நேற்று முத்தத்தில் காயப்போட்டவிறகு இரவு பெய்த மழையால் எடுத்து வைக்க பொழுதில்லாமல் உனக்கு அப்படி என்ன தலைபோகிற உத்தியோகம்? பெரியம்மாவால் ஏகப்பட்ட கேள்வி கணக்கு அவள் இப்போது சமாதானம் கூறியே ஆகவேண்டும். நெற்றியில்

துளிர்ந்த வியர்வை காதோரங்களில் வழிந்து கழுத்திலும் பரவியது.இதயம் படபடக்க "அது... வந்து ..... வந்து தவறுதலாக மறந்துபோய் கவனிக்காமல் ..... அவள் திக்குத்தினறி முடிப்பதற்கு முன்பாக "என்னடி மறதி உனக்கு? இவ்வளவு நாளும் இல்லாதது இப்ப எங்க வந்தது? நானும் இப்ப கொஞ்ச நாளாப்பார்த்துக் கொண்டுதான் வாறன் ஒரு வேலையும் உருப்படியாச் செய்யிறேல்ல உனக்கு அடுத்தடுத்த தண்டச் செலவு செய்ய இது ஒன்றும் உன் அப்பன் வீட்டுச் சொத்தில்ல"

அடுத்தடுத்து அம்பெனப்பாய்ந்த வார்த்தைகள் சின்னமனதில் "சுருக்" எனத்தைத்தது. அவளது கண்களை கலங்கச்செய்த துன்ப உணர்வை அவளால் சமாளிக்க முடியவில்லை. மீண்டும் "இண்டைக்கு நீ பள்ளிக்கூடம் போறல்ல மரியாதையாய் எல்லா வேலையையும் செய்து முடி திருடி" என்று கொஞ்சம் கூட ஈவிரக்கமின்றி தண்டனை வழங்கியாகி விட்டது திகைப்பும் வேதனையுமாக வெதும்பியபடி புயலில் அகப்பட்ட பறவை போல சுவரை ஆதாரமாக பற்றி நின்ற அந்த பதினாறு வயதில் இவ்வளவு கொடுமையா? இறைவா? என்ன சோதனை?

சிந்துவின் உள்மனம் ஓலமிட்டு அழுதது இது இன்று நேற்று நடைபெறும் சம்பவம் அல்ல கடந்த ஏழு வருடங்களாக சிந்துவிற்கு நடக்கும கொடுமை. சிந்து மனநிம்மதியாக மகிழ்ச்சியாக இருந்த சந்தர்ப்பங்களை விரல் விட்டு எண்ணி விடலாம் அவளது வாழ்வில் பெரும் பகுதி கண்ணீக் காவியமே. இவர்கள் தமது குறுகிய வட்டத்தின்று வெளியேறுவது என்பது அடுத்த யென்மத்திலும் அரங்கேறாத சங்கதி.

மதிய உணவை முடித்துவிட்டு பெரியம்மா குட்டித்தூக்கம் போடுவது வழக்கம் அவ்வாறே அன்று தூங்குமுன் சமையற்கார அம்மாவை அழைத்து "இந்த கழுதை எதையாவது தின்று பசியைப்போக்கிடும் அவளில் ஒரு கண் வெச்சிரு" என்று பெரியம்மா கூறியது சிந்துவின் காதுகளில் விழத்தான் செய்தது பெரியம்மாவின் அனுமதி இன்றி சிந்துவின் நிழல் கூட பொருட்களில் பட்டிருக்காது. அப்படிப்பட்ட அவளைப் போய் சீ... என்ன மனிதர்கள்?

மாலையிலே மாதர்சங்க கூடல் ஒன்றிற்கு பெரியம்மா ஆயத்தமானாள். திடீர் என்று "ஏய் சிந்து இங்க வாடி" என்ற கூப்பாட்டைகேட்ட திடுக்குற்றவளாய் வெளியே நின்ற சிந்து வீட்டினுள் நுழைந்தால் "ருத்ர தாண்டவத்தில்" நின்ற பெரியம்மாவை பார்த்த சிந்து பலிக்கடா போல மெல்ல சென்றாள் "உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்திட்டியே பாவி" என இரைந்தவாறு சிந்துவைப் பிடித்து உலுப்பிய உலுப்பலில் அவளுக்கு வீடே சுற்றியது போலிருந்தது. "மேசையதில் வைத்த 1000 ரூபாவை எடுத்திட்டியே".... கள்ளி என்று கூறி பிரம்பால் ஓங்கி அடித்தாள். "இல்லை நான் எடுக்கேல சத்தியமாய்" என்று அடக்கமாட்டாத் துயரத்தில் உரத்துக் கத்திவிட்டாள். உறுமிய பெரியம்மாவின் குரலின் இடையே பெரியப்பாவின் குரல் இடைமறித்தது "அது....அது... விடிய நான் தான் எடுத்தனான்" என பயந்து பயந்து இழுத்தார் ஒரு நிமிடம் ஊசி விழுந்தால் கேட்கும் அளவிற்கு நிசப்தம் "சரி அழுது வடியாமல் போய் வேலையைப்பார்" அவளைப்பொறுத்தவரை இது சாதாரண விடயம் ஆனால் அந்த பிஞ்சு மனம் என்ன பாடுபடும்.

மேலும் அமைதியை நாடி வீட்டின் பின்புற மாமர நிழலில் உட்கார்ந்தாள். சிந்து துயரம் அவமானம் விரக்தி என்று பல்வேறு உணர்வுகளால் குழம்பிதுவண்ட மனதோடு "முருகா உனக்கு என்மேல் அப்படி என்ன கோவம்? நான் என்ன தப்பு செய்தேன்? அநாதை ஆனது

குற்றமா? ஏன் எனக்கு இப்படி ஒரு வாழ்க்கை? உன்னிடம் நான் பொன்னையோ பொருளையோ கேட்கவில்லை மனநிம்மதி தான் கேட்கிறேன்? ஏன் என்னை சித்திரவதை செய்கிறாய்? வேண்டாம்... இனியும் என்னால் தாங்க முடியாது... என்னை வாழவைக்கத்தான் உனக்கு மனமில்லை நின்மதியாக எனது வாழ்வை முடிக்கக்கூட அருள் செய்ய மாட்டாயா? அம்மா... அப்பா... நான் உங்களிட்ட வரப்போறன் ஏன்... ஏன் என்னை தவிக்க விட்டுப் போனனீங்க? என்று விம்மி விம்மி வாய்விட்டு அரற்றியவள் தோள்களை யாரோ தொட்டதை உணர்ந்து திரும்பிப்பார்த்தால் சடுதியாக திகைப்பு, மகிழ்ச்சி, துன்பம் என்று பலவேறு உணர்ச்சி குழப்பம் அவளுள்... ஆம் அக்கா பைரவி ஆதரவாக அவளை அணைத்துக்கொண்டாள் பல நாட்களாக பாராது ஏங்கியிருந்த மதுராவின் துன்பத்தில் அடக்கப்பட்ட துன்பம் அக்காவை பார்த்த கணமே வெள்ளம் எனப் பாய்ந்தது இவ்வளவு நாளும் துன்பப்பட வைத்து விட்டேனே என்ற குற்ற உணர்வு இனியும் தாமதிக்கக்கூடாது என நினைத்து அவள் அவசரமாகச் செயற்பட்டாள்.

பைரவி தனது சொந்தக்காலிலே நிற்கக்கூடியவள். அவளது தீர்மானம் பெற்றோரால் மறித்தும் பிரயோசனம் இல்லை. தங்கையை அந்த வீட்டில் விடுவித்து பொலனறுவைக்கு அழைத்துச் சென்றுவிட்டால் அங்கே சிந்து எதிர்பார்த்த மன நிம்மதி, கல்வி வசதி, அக்காவின் தூய அன்பும் மிதமாகவே கிடைத்தது. அன்பான அக்காவின் அரவனைப்பிலே கடந்த கால சோகச்சுமைகளின் விலங்குகளை உடைத்து சிந்து ஒரு சிறகடிக்கும் வெள்ளைப்புறா, அக்காவின் அன்பால் சிந்து மூழ்கியிருந்தாள்.

நிச்சயம் வரும் காலம் சிந்துவிற்காக கோலமிட்டு வரவேற்கிறது. நாளைய சமுதாயத்திலே சிந்துவிற்கென்று ஓர் உயர்ந்த அந்தஸ்து கிடைப்பது உறுதி. அது அக்காவின் வரமே என்பதில் எவ்வித ஜயமும் இல்லை. இன்றைய மொட்டு அவள். நாளைய உலகிலே அழகாக மலரப்போகும் அந்த மொட்டிற்கு உரமான அவள் அக்கா அவளுக்கு தெய்வம். இந்த மொட்டு மலர்வதற்காகத்தான் இதோ நாட்டிலே சமாதானத்திற்காக ஆரம்ப அத்தியாயங்கள்.

ஆம், மெல்லென தவழ்ந்து வரும் தென்றல் மகள் கூட சிந்து எனும் இளம் மொட்டிற்காய் தெம்மாங்கு பாடி சுபம் கூறி சுகம் சேர்த்து போகிறதோ, எங்கிருந்தோ எழுந்து காற்றோடு கலந்து காதுகளை நழுவுகின்ற ஆலய மணியின் கம்பீர நாதமும் இவளது இனிய மலர்விற்காக வாழ்த்திசைக்கின்றதோ?

**க. அபிநயா**

தரம் 11B

*"கல்வி எனும் ஏணி வாழ்நாளை உயர்த்தி விடும்."*

**சி. தாரங்கா**

*தரம் 12 வர்த்தகம்*

# உள்ளத்தனையது உயர்வு

தொடக்கமும் முடிவுமில்லாது அநாதியாய் விரிந்து பரந்திருக்கிறது பிரபஞ்சம் பசுமைபுனைந்து, மீதி இடத்தில் நீலக்கடலை போர்த்தியிருக்கின்ற பூமியானது உயிர்வாழ்தல் உள்ள ஒரேயொரு கோளாக இன்றுவரை அறியப்பட்டுள்ளது. இப்பூமியினது உயிரின மண்டலமானது தன்னுணர்வில்லா சிற்றுயிர்கள் முதல் தன்னை உணரத்துடிக்கின்ற மனிதன் வரையாய் எண்ணற்ற அங்கிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் பகுத்தறியும் ஆற்றல் படைத்த மனிதனே பூமியினை அடக்கி ஆழ்கின்ற சக்தி படைத்தவனாக தன்னை நிரூபித்துக் கொண்டிருக்கிறான். இத்தகைய மனித குலத்தின் உயர்ச்சியானது, மனிதனின் ஒருங்கிணைந்த உழைப்பினால் கிடைத்த வெற்றியாகும்.

இலையும் குலையும் தரித்து வாழ்ந்த மனிதன் இன்று அணுவைப்பிளந்து விட்டான். பூமியைச் சுற்றிவர பிரயாசப்பட்ட மனிதன் இன்று பூமியைத்தாண்டி, அண்டத்திலும் தன்னை நிலைநிறுத்திக் கொண்டான். “இன்னும் உயரவேண்டும்” என்ற எண்ணமும் தவிப்புமே மனிதனை இவ்வாறு உயர்ந்த நிலைக்கு கொண்டுசென்றது.

இப்புவியில் ஒவ்வொரு தனி மனிதனும் தனது உயர்வினைக்கருதியே செயற்படு கின்றான். கல்வியறிவு இல்லாத ஒருவன் தான் கற்றுணர்ந்த நிலையை அடைய விரும்புகின்றான். பரம ஏழையான ஒருவன் தன் நிலையினின்று மாறி செல்வந்தனாக வர விரும்புகின்றான். அறிஞன் மென்மேலும் உயர்ந்து பேரறிஞராக பொலிய பணிபுரிகின்றான். செல்வந்தனும் தன் செல்வங்களைப் பெருக்கி பெருஞ்செல்வந்தனாக வாழவேண்டிய வழிவகைகளை கையாளு கின்றான். இவ்வாறு அனைவருமே தம்நிலையினின்று மேம்பட்டு உயர்வொன்றை காணவே விருப்பங்கொண்டுள்ளனர். ஆதலால் உயர்வுக்கு எல்லையே கிடையாது என்பது தெட்டத் தெளிவாகின்றது.

ஆயினும் இவ்வாறு மனிதர்கள் யாவரும் தம் உயர்வுக்காக பாடுபடினும் அனைவரது வளர்ச்சியும் ஒரே மாதிரியாக அமைந்துவிடுவதில்லை. உயர்வானது ஒவ்வொரு தனி நபருக்கும் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. நீரில் மலர்கின்ற அழகிய நீர்ப்பூக்களின் உயர்வானது நீரின் உயர்வினைப் பொறுத்தே அமையும் அது போன்றதே தனது உயர்வும் மனிதனது உள்ளத்தின் எண்ணங்களைப் பொறுத்தே மனிதனது உயர்வும் அமையும். இதனை விளக்க முற்பட்ட செந்நாப்போதர் திருவள்ளுவர்,

*“வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்*
*உள்ளத்தனையது உயர்வு”*

என்கிறார். ஆம் எமது உணர்வுகளின் இரகசியம் எமது உள்ளத்தின் உயர்வான சிந்தனைகளாகவே இருக்கின்றன. உள்ளம் எத்துணை உயர்ந்ததோ அவ்வுள்ளம் உடையவனது உயர்வுகளும் அத்துணை உயர்ந்ததாகவே இருக்கும். அவ்வாறெனின் உள்ளத்தை உயர்த் துவதன் மூலமே உயர்வுகள் பெறலாம் என்பது எமக்குப் புலனாகின்றது.

உள்ளத்தை உயர்த்துவது எவ்வாறு? எமது மனத்தினை தூய்மையாக வைத்திருப்பதன் மூலம் உள்ளம் உயர்வடைகிறது. நல்லசிந்தனைகளே உள்ளத்தூய்மைக்கு வழிகோலு கின்றது. அன்பு, அறம், ஈகை என்பவற்றைக் கைக்கொள்ளும் உள்ளமானது உயர்வடைகின்றது.

“உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து”

என்கின்றது ஈரடிக் குறள். நம் உள்ளத்தின் கண் எழுகின்ற எண்ணங்கள் உயர்வானதாக இருக்க வேண்டும் அத்தகைய எண்ணங்கள் உயர்வின் வழிகாட்டியாக அமைகின்றன. உயரமான வரப்பு ஒன்று எவ்வாறு நீரைத் தேக்கி பயிர்களைச் செழிப்படையச் செய்கின்றதோ அது போலவே உயர்ந்த உள்ளமும் நல்ல சிந்தனைகளையும் இயல்புகளையும் தேக்கி வாழ்வில் உயர்வடைய உதவிபுரியும்.

எண்ணம், செயல் என்பனவே மனித வாழ்வின் இரு கண்களாகும். இதில் எண்ணம் உயர்வாக இருக்குமேயானால் உள்ளம் உயர்வானதாகிறது. உள்ளத்தின் உயர்வு நல்ல செயல்கள் உள்ளத்தின் உயர்வை பிரதிபலிக்கும் உள்ளம் உறவுகளைப் பெருக்கும். பகைமையை இல்லாதொழிக்கும், இருளான எண்ணங்களை அழிக்கும், அன்பையும் அருளையும் பெருக்கும், பொறமை கோபம் அநீதி செயல்கள் என்பவற்றை அழித்து விடும். அமைதியான ஆனந்தமான உயர்வினை அளிக்கும். இதனால் தான் உயர்ந்த எண்ணமுடையோர் உன்னதமான அர்த்தபுஷ்டியுள்ள வாழ்வைப் பெறுகின்றனர். அதுவல்லாதோர், தாழ்ந்த சிந்தனையுடையோராகி தாழ்வினை அனுபவிக்கின்றனர். இதற்கு காவியங்களிலும் இதிகாசங்களிலும் நாம் பல உதாரணங்களைக் கண்டுள்ளோம். இது தவிர வரலாறு எமக்குத்தந்த பாடங்கள் பலவும் உள்ளம் உயர்வானதாக இருக்க வேண்டியதன் கட்டாயத்தையே புகட்டியிருக்கிறது.

காலங்காலமாக சமுதாயத்தில் கூறப்பட்டு வந்துள்ள “நல்லது நினை, நல்லது நடக்கும் வினை விதைத்தவன் வினையறுப்பான், கேடுநினைப்பவன் கெடுவான்” போன்ற ஆன்றோர் மொழிகளும் எண்ணங்களும் உயர்வானதாக இல்லாது விடின் ஏற்படும் பாதகமான விளைவுகளை விளக்குகின்றது.

இதனையே, ஆன்மீகப் பெரியார்களும் தம் சிந்தனைகள் மூலமா உலகிற்கு எடுத்துக் கூறியுள்ளனர். அவர்களுள் சுவாமி விவேகானந்தர் “நீ என்ன ண்ணுகிறாயோ, அதுவாகவே ஆகின்றாய்” என்கிறார். எம் மனதின் கண் நல்ல சிந்தனைகள் பிறக்கும் போது அவை உயர்வுக்கு வழிகாட்டுவனவாகின்றன. மீள மீள உள்ளத்தின் ஆழத்தில் எழும் எண்ணமே ஒருவனை உயர்ந்த அல்லது தாழ்ந்த நிலையை அடைய வழிவகுக்கின்றது. இன்றைய மனோதத்துவவியலாளர்களும் உள்ளத்தின் எண்ணமே மனித உயர்வினை தீர்மானிக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிரபஞ்சத்தில் ஒரு சக்தி மூலம் உள்ளது. அது எம் ஆழ்ந்த சிந்தனைகளை செயற்படுத்தும் சக்தியை தருகின்றது என்பது உளவியலாளர்களின் வாதம். மனித எண்ணங்கள் உயர்ந்தவையாயின் நிச்சயமாக மனிதனது உயர்வும் உயர்ந்ததாக அமையும். நல்ல எண்ணங்கள் எம்மை உயர்வு மிக்க உத்தமர்களாக ஆக்குகின்றது. ஆதலால் நாம் நல்ல எண்ணக் கடிவாளத்தை இறுக்கப்பற்றியுள்ள குதிரையைச் செலுத்துவோமானால் உலகம் போற்றும் உயர்வினை அடையலாம். நாளைய வரலாற்றில் நாம் செல்லும் பாதையும் உலகிற்கு வழிகாட்டி நிற்கும்.

**ச. சாரங்கா**
தரம் 11 B

# தமிழ் மொழித்தின விழா நிகழ்வுகள் - 2011



புஸ்பாஞ்சலி



செம்பு நடனம்



நாடகம்




குழுஇசை





நாட்டிய நாடகம்

# தமிழ் தந்த கம்பன்

திருமகள் கொழுநனும் நற்குணவடிவனுமாகிய முழுமுதற்கடவுள் ஸ்ரீ வைகுண்டம் என்கின்ற திவ்யலோகத்தில் திருமாமணி மண்டபத்தில் சீரிய சிங்காசனத்தில் திருமகளுடன் வீற்றிருப்பவன் ஸ்ரீராமச்சந்திரன் ஆவார். இவருடைய வரலாற்றை கவி ததும்பப்பாடியவர் கம்பனே. இவர் சோழ நாட்டிலே திருவழுந்தூரில் உவச்சச்சாதியில் ஆதித்தனுக்கு மகனாக அவதரித்தார். கம்பன் இளமையில் தந்தை இறந்ததனால் போஷகரில்லாமல் திருவெண்ணைய் நல்லூரில் சடையப்ப வள்ளலிடம் போய்ச்சேர்ந்து கொண்டர். பின் அவரினால் ஆதரிக்கப்பட்டு கல்வியில் சிறந்தவராயினார். இதனையே,

*"பற்றவரும் பாலமுதளித்தும் பகைத்த வறுமைப்*
*பயந்தீர்த்துங் கற்ற முதனூற்றிருவழுந்தூர்க்கம்பன்றழைய*
*கருணை செய்தோர் சோழ மண்டலமே"*

என்ற செய்யுட்களால் அறியலாம். வடமொழியில் வால்மீகி முனிவர் செய்துள்ள இராமாயணம் அக்காலத்தில் அறிவுடையோர் பலராலும் மதித்துப் பாராட்டப்பட்டது. அதுகண்ட கம்பர் நம்மொழியாம் தமிழ்மொழியில் இராமாயணம் இயற்றுவதற்கு காரணமாயிற்று. இராமபிரான் விஷயமாகக் கூறிய சரிதத்தை ஆராய்ந்து பகற்பொழுதில் நாளுக்கு எழுநூறு பாடல் வீதம் பாடினார்.

ஒற்றியூரில் இவர் பாடிய போது இரவிலே மாணாக்கர் இவர்பாடுகின்ற இராமாயணத்தை பிந்தாமல் எழுதுவதற்கு அவ்வூர்க்காளியை தீப்பந்தம் பிடிக்க பாடினாரென்பதுவும் கம்பனின் சிறப்பாகும். இராமபிரானிடத்து கொண்ட அன்பின் மிகுதியால் கம்பர் இந்நூலைச் செய்தாரெனலாம். இந் நூலை அரசசபையில் அரங்கேற்ற விருப்பம் கொள்ளாமல் படிகொண்ட கீர்த்திராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடிகொண்ட நெஞ்சத்தவர் பலர் நெருங்கியுள்ள ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றுமாறு கருதி அங்குசென்று அங்குள்ள பெருநாவலர்கட்குத் தாம் இயற்றிய நூலை படித்துக்காட்டினார்.பின்பு இராமாயணம் திருவரங்கத்து பெரியோர் கூடிய சபையில் "மேட்டழகிய சிங்கர் சிரக்கம்பம் செய்யுமாறு அரங்கேற்றப்பட்டதென்பர்". கம்பர் காலமானது நம்மவர் இன்ன காலத்தில் தோன்றியது என்பதையறிந்தால் விசேடமான பயன் இன்று என்ற கருத்தினராயிருந்தாலும் சரித்திரங்களை ஒழுங்காக எழுதி வைப்பது என்ற பழக்கத்தை கொள்ளாமை, நூலின் சிறப்புக்கருதி பாராட்டுவதன்றி தொன்மை பற்றி பாராட்டுவதென்று கொள்ளாமையிலும் இவர் காலத்தைக்குறித்து திட்டமாய் சொல்ல இயலவில்லை.

எனினும் ஒருசாரார் இராமாயணத்தை அரங்கேற்றியதைத் தெரிவிக்கின்றதாவது.

*"எண்ணிய சகாத்த மெண்ணூற்றேழின்மேற் சடையன் வாழ்வு*
*புண்ணிய வெண்ணைய்நல்லூர் தன்னிலே கம்பநாடன்*
*கண்ணியவரங்கர் முன்னே கவியரங்கேற்றினானே"*

எனலாம். கம்பரின் நன்றியறிவு மிகவும் பெரியது. அதாவது தாம் பாடிய இராமாயணத்தில் தம்மை ஆதரித்த சடையப்பவள்ளலை ஓர் பத்துக்கவிகளிற் பாராட்டிக்கூறியுள்ளார்.

இவர் தன்னுடைய காலத்தில் தமிழுக்காக கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, திருக்கைவழக்கம், சரசுவதியந்தாதி முதலிய நூல்களை கவிததும்பப்பாடினார். "தமிழிலே உயர் கம்பன்" என்பதை கம்பராமாயணம் ஒன்றின் மூலம் உலகிற்கு தெரியப்படுத்துகிறார். ஆகவே இனிய தமிழ் மொழியை வளர்த்த பெருமை எம் கவிமான் கம்பனையே சாரும்.

*"தமிழ் எம் செவிக்குள் அமிழ்தினு மினிக்க!*
*கம்பன் பெயரென்றும் அம்புவி நிலைக்க!*
*ஈழமும் பரதமும் வாழியர் வாழ்க வாழ்கவே!*

**ப. தீபிகா**
தரம் 12 கலை

# உலகம் போற்றும் தமிழ் மொழி

ஆதிகால மனிதன் வரையறுக்கப்பட்ட தேவைகளையும் விருப்பங்களையும் கொண்டிருந்ததன் காரணமாக அவன் தனது அத்தியாவசியத்தேவைகளை மட்டும் நேர் உற்பத்தி மூலம் தானே நிவர்த்தி செய்து கொண்டான் ஆனால் மாற்றம் என்ற சொல் தான் இவ்வுலகில் மாறாத ஒன்று என்பதற்கிணங்க, காலங்கள் உருண்டோடவே மானிடர்களது தேவைகளும் விருப்பங்களும் அதிகரித்தன.இதனால் தனது தேவைகளை நிவர்த்தி செய்ய இன்னோருவரின் உதவியை நாட வேண்டிய நிலை மனிதனுக்கு எற்பட்டது. இதன் போது தன் உணர்வுகளையும் தகவல்களையும் பிறர் புரிந்து கொள்ளச் செய்ய அவன் தொடர்பாடலில் ஈடுபட்டான். அவ் தொடர்பாடலின் ஈடுபாடு அவன் பயன்படுத்திய ஊடகங்களுள் சிறந்த ஊடகமே மொழி ஆகும். மனிதனது கருத்துப் பரிமாற்றத்திற்கு மிகவும் உறுதுணையாக உள்ள மொழிகளுள் "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த மொழி "என்ற பெருமைக்குரிய மொழியே எமது தமிழ் மொழி ஆகும்.

தமிழ் இலக்கிய சரித்திரம் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தொடங்கியுள்ளது. இப்போது பல நாடுகளிலும் யிலப்பட்டு வரும் ஆங்கில மொழிகயில் கூட இலக்கியம் முதல் முதலில் தோன்றியது கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் தான் இதிலிருந்தே நம் தமிழ் மொழியின் தொன்மையை நாம் அறியலாம். தற்காலத்தில் தமிழ்மொழியானது இந்தியாவின் தெற்கு பிரதேசத்தில் பெரும்பான்மையானோரால் தாய் மொழியாக வழங்கப்பட்டு வரும் அதே வேளை இந்திய ஆட்சி மொழிகள் இருபத்தியிரண்டில் ஒன்றாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இலங்கையிலுள்ள அரசகரும மொழிகள் மூன்றிலும் ஒன்றாக தமிழ்மொழி காணப்படுகிறது. தென்னாபிரிக்காவிலும் அரசியல் அமைப்பு அங்கீகாரம் பெற்ற மொழியாகவும் தமிழ் மொழி உள்ள அதேவேளை மலேசியாவின் நான்கு ஆட்சி மொழிகளுள் ஒன்றாகவும் உள்ளது. மேலும் அந்தமான் தீவுகள், சிங்கப்பூர் ஆகிய பல இடங்களிலும் தமிழ் மொழி அங்கீகாரம் பெற்ற மொழியாக காணப்படுகிறது. இந்தியா மற்றும் வெளிநாடுகளிளுள்ள பல தமிழ் அமைப்புக்களினது நீண்ட கால முயற்சிகளின் பின் இந்திய அரசால் தமிழ் செம்மொழியாக அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்தியாவின் முதல் செம்மொழி தமிழ் மொழியாகும். தமிழ் மொழி செம்மொழியாக இந்திய நாடளுமன்ற கூட்டத்தில் 2004 ஜீன் 6 அப்துல்கலாம் அவர்களால் அறிவிக்கப்பட்டது அதன் பின்பு உலக செம் மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழி அங்கீரிக்கப்பட்டதை முன்னிட்டு கடந்த வருடம் இந்தியாவின் கோவை மாநகரில் ஆனி மாதம் 23 தொடக்கம் 27வரை மாபெரும் விழா கொண்டாடப்பட்டது.

செம்மொழியான தமிழ் மொழியின் ஆரம்பகால வரலாற்றைப் பார்த்தோமேயானால் முச்சங்கத்து அரியணையேறிய மன்னர்கள் அடி தொட்டுப்போற்றிய மொழியாக தமிழ் மொழியுள்ளது. அதாவது சேர சோழ பாண்டிய மன்னர்களின் பேராதரவைப் பெற்ற மொழியாக தமிழ் மொழி உள்ளது. அதிலும் பாண்டிய நாட்டில் தமிழ் அதிக சிறப்புற்று காணப்பட்டது. இதற்கு சான்றாக "பொருப்பில் பிறந்து தென்னன் புகழிலே வளர்ந்து இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை" என்ற வில்லிபுத்தூராரின் பாரதத்தின் இவ் சிறப்புப் பாயிரம் உள்ளது. இக் காலத்தில் அகத்தியர், தொல்காப்பியர், நக்கீரர் போன்றோர் தமிழின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர்.

தமிழ் மொழியின் இத்தகைய வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தோர் முற்கால தமிழறிஞர்களும் தமிழ்கவிஞர்களும் என்றால் அது மிகையாகாது. திருவள்ளுவர் இதற்கு உகந்த சான்றாவார். பல அரிய விடயங்களை இரண்டே அடிகளில் தந்து திருக்குறள் எனும் நூலின் மூலம் தமிழ் மொழியை உலகறியச்செய்தார். இன்றும் பல வேற்று மொழி அறிஞர்கள் திருக்குறளை தம் மொழிகளில் மொழி பெயர்க்க முயன்று வருவதிலிந்தே இந் நூலின் முக்கியத்துவம் நன்கு புலப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதிக்குரியவரான சுப்ரமணியபாரதியார் சுதந்திரம் பெண்களின் விடுதலைக்கு மட்டுமன்றி, "தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு மேல்" என்று தமிழ் மொழியின் விடுதலைக்கும் எழுச்சிக்கும் தன் கவிதைகள் மூலம் வழியமைத்தார். இவ்வாறு பல அறிஞர்களால் எழுச்சி பெற்று செம்மொழியாக திகழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மொழியை தமிழர்களாகிய நாம் வளர்க்க முயல வேண்டும். எனினும் தற்காலத்தில் தமிழர் பலர் தமிழ் மொழிக்குப் பதிலாக ஏனைய மொழிகளில் தம் பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கவும் முற்பட்டு வருகின்றனர். இதைத் தவித்து தாய் மொழியிலேயே தம் பிள்ளைகளை அவர்கள் கற்பிற்பதற்கு முற்பட வேண்டும். தமிழை வளர்த்து உலகம்புகழ் பெறச் செய்ய ஒவ்வொரு தமிழனும் முன்வர வேண்டும்.

*"மாசில்லாத உயர் தமிழை உயிரென்று போற்று மின்கள்!"*

**ம. வைஷ்ணவி**

**தரம்-12**

வர்த்தகம்

"வாழ்க்கை ஒரு போர்க்களம்

நம்பிக்கை அதன் ஆயுதம்"

**ச. துவாரகா**

*தரம் 12 வர்த்தகம்*

"தோல்வி கண்டவனே

வெற்றியையும் காண்பான்"

**கு. சுகன்யா**

*தரம் 12 வர்த்தகம்*

# ஆடற்கலையும் தமிழ்மொழியும்

கலை என்பது அழகின் செறிவு, கருத்தின் பதிவு, கவர்ச்சியின் நிறைவு, மகிழ்ச்சியின் உறைவிடம், பண்பாட்டின் சிகரம், வளர்ந்த நாகரீகத்தின் சின்னம், கடவுள் எங்கும் பரவி என்றும் விளங்குவது போல ஆடற்கலையும் எங்கும் பரவி என்றும் விளங்கத்தான் செய்கிறது. பண்டைய காலம் தொட்டே ஆடற்கலையும் தமிழ் மொழியும் ஒன்றுடன் ஒன்று பிண்ணிப்பிணைந்து காணப்பட்டன.

அந்த வகையில் தமிழில் உள்ள காலத்தால் முந்திய சங்கநூல்கள் எனக் கொள்ளப்படுகின்ற எட்டுத்தொகை, பத்துப்பாட்டுக்களும் உள்ளடங்குகின்றன. இவற்றின் காலம் ஏறக்குறைய கி.மு.2ம் நூற்றாண்டு தொடக்கம் 3ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியெனலாம். இவற்றுடன் பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தையும் சேர்த்துக்கொள்ளலாம். இக்காலத்தில் மக்களும் மன்னரும் இவ்வுலக இன்பங்களிலே நன்கு ஈடுபட்டனர். இக்காலத்திலும் இதற்கு முன்பும் பலவகையான நடனங்கள் நிலவி வந்துள்ளன. அக்கால மக்களின் வாழ்வில் இசையும் நடனமும் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தமைக்கு இன் நூல்கள் தக்க சான்றுகளாகும். இருபாலரும் இவற்றில் ஈடுபட்டனர். காவிரிப்பூம் பட்டனத்திலே வாழ்ந்த மக்கள் ஆடலைப்பார்ப்பதற்கும் இசையின்பத்தில் மூழ்குவதற்கும் அந்த நகரத்தின் பொது விடத்திற்கு அடிக்கடி சென்றனர் எனப்பட்டினப்பாலை கூறுகின்றது. இக்கால நடனங்கள் சமய உலகியல் சார்புள்ளனவாகவும் நிலவி வந்துள்ளன. இன்பம் அளிக்கும் அழகியற்கலைகளாகவும் பொழுதுபோக்கு, சடங்கு, இறைவழிபாடு முதலியவற்றுக்கான சாதனங்களாகவும் இசையும் நடனமும் விளங்கின. இக்காலத்தில் நடனமானது ஆடல், குனிப்பு, கூத்து எனவும் ஆடுவர் கூத்தர், கோடியர், விறலியர் என அழைக்கப்பட்டனர். பத்துப்பாட்டில் ஒன்றான மலைபடுகடாம்/ கூத்தாராற்றுப்படை கூத்தரை ஆற்றுப்படுத்தும் நூலாக மிளிர்கின்றது. அதுபோல பொருநராற்றுப்படையும் ஆடலையும், பாடலையும் தொழிலாகக் கொண்டோரின் திறனை எடுத்துக் கூறுகிறன.

ஆடற் கலைஞரின் அழகிய தோற்றம், உறுப்புக்கள் அணிகள் முதலியன பற்றிய குறிப்புக்கள் சங்க நூல்களில் உள்ளன. விழாவின் போது ஆடல்மகளிர் அணிந்த மணிகளோடு கூடிய மேகலை பற்றி அகநாநூறு குறிப்பிடுகிறது. துடி இசைக்கத் திருப்பரங்குன்றிலாடிய ஆடல் மகளிர் பற்றிய பரிபாடல் நூலில்

"துடியின் அடிபெயர்த்துத் தோளசைத்துத் தூங்கி
அடுநறா மகிழ் தட்ப ஆடுவான்"

என ஆடலை சமயத்துடன் தொடர்புபடுத்தியுள்ளது. ஊக்குவிசையுள்ள உலக வாழ்வு விழாக்காலங்களிலே கோடியரின் / ஆடுவோரின் செயற்பாட்டுடன

"கோடியர் நீர்மை விழவிற் போல
முறை முறை
ஆடுவார் கழியுமிம்வுலகத்துக்கு கூடிய"

என புறநானூற்றிலே ஒப்பிடப்படுகிறது. வைகையாற்றின் கட்டுப்பாடற்ற எதிர்பாரத போக்கு ஆடல் அறியாத பெண்ணிற்கும் ஊடல் இல்லாத இன்பத்திற்கு "ஆடல் அறியா அறிவையர் போலவும், ஊடல் அறியா உவகையர் போலவும் எனப்பரிபாடலிலே ஒப்பிடப்படுகிறது. இதிலிருந்து ஆடல் மகளிர் அழகிய நடையும் நடனத்தையும் ஆடற்கலையின் உணர்வினாலும் அனுபவத்தினாலும் ஏற்படும் முழுமையான இசைவின் வெளிப்பாடாக விளங்கின என்பதை அறியலாம். கலைஞர்களை மன்னர் நன்கு ஆதரித்தனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடைகளின் நேர்த்தியான தேர்கள், குதிரைகள், அலங்கரிக்கப்பட்ட யானைகள், செழிப்பான நிலங்கள், விலையுயர்ந்த வேறு சில பொருட்கள் முதலியன அடங்கும். கரிகாலன் போன்ற மன்னர் கலைஞர்களை நன்கு வரவேற்று உபசரித்து, கொடைவழங்கி வழியனுப்பி வந்ததை புறநானூறு குறிப்பிடுகிறது.

சங்க காலத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியான சங்கமருவிய காலப்பகுதியில் எழுந்த இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் சாஸ்திரிக நடனங்கள் பற்றிய கருத்துக்கள் அமைந்துள்ளன. சிலப்பதிகாரத்திலே வரும் கதாநாயகிகளில் ஒருவரான மாதவி அக்காலத்திய சாஸ்திரிய நடனங்களிலும் பிறவற்றிலும் சிறந்து விளங்குதலைக் குறிப்பிடலாம். அவருடைய மகளான மணிமேகலை மற்றைய நூலின் கதாநாயகி ஆகும். எனவே இவ்விரு நூல்களிலும் நடனம், இசை ஆகிய பற்றிய குறிப்புக்கள் விரிவாக வருதல் வியப்பில்லை. சிலப்பதிகாரம் அக்கால நடனத்தின் பல விபரங்களை கொண்டுள்ள நடனக்களஞ்சியமாகவே விளங்குகின்றது.

வரன் முறையில்லாத நடனப்பயிற்சி, நடனசாஸ்திர அறிவு, வாய்ப்பாட்டிசை, வாத்திய இசையறிவு நன்கு பெற்ற தனிநடனப் பெண் கலைஞரின் விமரிசையான அரங்கேற்றம் பற்றிய அரியதகவல்களை மாதவி என்னும் கதாபாத்திரத்தின் முலம் சிலப்பதிகாரம் வெளிப்படுத்தியுள்ளது. மாதவி தேவலோக நடனக்கலை மகளிர்கெல்லாம் வழிவந்தவளாகையால் "பிறப்பின் குன்றாப் பெருந்தோள் மடந்தை" எனச்சிறப்பிக்கப்படுகிறாள். சிலப்பதிகாரத்திலும் அதற்கு முற்பட்ட காலத்தில் சங்கநூல்களிலும் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தினைப் போன்றே மணிமேகலையிலும் சமயகால நடனம் பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கே வந்துள்ளன. மணிமேகலையில் சிவனைப்பற்றி எடுத்துரைக்கும் போது அவனை "கலை உருவினோனும்" எனவும் குறிப்பிடுகிறார்.

பல்லவர் - பாண்டியவர்கள் காலத்தமிழகத்திலே வைதீக சமய பண்பாட்டுத்துறையிலே குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் ஏற்பட்டன. இறைவனே இசை, நடனம் ஆகியவற்றின் வடிவமாகவும் இக் கலைகளின் உயரிய இலக்காகவும் இவைகளின் பெரிய ஆசானாகவும் இவை மூலம் எளிதில் அடையக்கூடியனவாகவும் விளங்குகின்றன என்ற கருத்தை சமயவாதிகள் ஏற்றனர். "இறைவன் இசைவடிவானவன்", "நடன வடிவானவன்" எனும் கருத்துக்களைப் பொறுத்தமட்டில் முக்கியமாகச் சிவபெருமானின் நடராஜவடிவம் குறிப்பிடத்தக்கது. "ஏழிசையாய் இசைப்பயனாய்" எனச் சுந்தரர் சிவபெருமானைப் போற்றினார். "ஆரியம் தமிழோடிசையானவன்", "பாட்டுக்கும் ஆட்டத்திற்கும் பண்பா போற்றி", "ஆடிப்பாடி

அண்ணாமலை தொழ" எனத்திருநாவுக்கரசரும். "ஆடலான் பாடலான்", "ஆடல் பாடல் பேண்ணீர்" என திருஞானசம்பந்தரும், "பன்னாளும் பாடியாடி", "கூடிய இலயஞ்சதி பிழையாமைக்கொடியிடை உமை காண ஆடிய அழகா" எனச் சுந்தரரும். "ஆடுகின்றவை கூத்துடையான் கழற்கன்பிலை என்புருகிப் பாடுகின்றிலை" என மணிவாசகரும். "பாடோமே யெந்தை பெருமானைப்பாடி நின்றாடோமேயாயிரம் பாடிப்பாடிக் கண்ணீர் மல்கி" என நம்மாழ்வாரும் இறைவனின் நடராஜ வடிவம் பற்றி புகழ்ந்து குறிப்பிட்டனர்.

"அரன்துடி தோற்றம் அமைத்தவ திதியாம
அரன் அங்கி தன்னில் அறையிற் சங்காரம்
அரனுற்றணைப்பில் அமருந்திரோ தாயி
அரன்டியென்னும் அனுக்கிரகமே"

என்னும் செய்யுளில் சிவனின் திரப்பெருவடிவமான நடராஜ வடிவத்தின் சிறப்பு எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இவர்களைத் தெடர்ந்து வந்த சோழர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப்பட்டது. தமிழர் தம் கலை கலாச்சாரப்பண்புகளை பேணிக்காத்தலில் முக்கியத்துவம் பெற்றது. கலைகளின் பொற்காலம் என விளங்கிய சோழராட்சியில் மக்கள் தன்னிறைவாக வாழ்ந்ததினால் கலைகளும் பிறரின் தலையீடின்றி சுதந்திரமாக செழிப்புற்று விளங்கின. சோழ மன்னரதும் மக்களதும் ஆதரவு கலை இலக்கியங்களுக்கு என்றும் இருந்தமை இக் காலத்திற்குரிய சிறப்பம்சமாகும். இராஜராஜன் காலத்திலேயே பாடல் பெற்ற பல ஆலயங்கள் கட்டப்பட்டன. பலகோவில்களிலும் ஆடலும் பாடலும் சிறப்புப்பெற்றிருந்தன. கோவில்களில் தமிழ்க்கூத்து, ஆரியக்கூத்து , சாந்திக் கூத்து என்பன ஆடப்பட்டன.

திருவிடை மருதூரைச்சேர்ந்த கூத்தில் வல்லான ஒருவனுக்கு சாக்கைமாராயன் என்ற பட்டம் இருந்தது எனக் கல்வெட்டுக் கூறுகிறது. பலவித நடன சாலைகள் பற்றிப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தஞ்சைப் பெரிய கோவிலில் நடன சாலை பற்றி கருவூர்க்தேவர் இராச்சேச்வர பதிகத்திலும், திருவாவடுதுறைக் கோவில் ஒன்றிலே நானவ் னசாலை ஒன்று இருந்ததாகவும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. மேலும் சோழர் காலத்துக கோயில் கிரியைகளில் ஓர் அம்சமான நடனம் இடம்பெற்றது. அரசர்களும் நடனக் கலையைக் கற்றார்கள் ராஜராஜனின் தங்கை நடனமாடுவதைப் போன்றதொரு சிற்பம் ரவிகுல மாணிக்க ஈஸ்வரர் கோவிலில் உண்டு. தஞ்சைப் பெவுடையார் கோவிலில் இடம் பெற்ற நடன நாடகம் பற்றி சமகால திருவிசைப்பா ஆசிரியர்களில் ஒருவரான கருவூர்த்தேவர்

"இன்னரும் புருவத்து இளைய் மயிலனையார்
விலங்கல செய் நாடக சாலை
இன் நடம் பயிலும் இஞ்சிசூழ்
தஞ்சை இராச்சேச்சர த்திவர்ககே"

எனச்சிறப்பித்துக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இக்காலத்திலே பேணிவளர்க்கப்பட்ட இசை, நடனம் பற்றிச் சமகாலத்திய சீவகசிந்தாமணி, கம்பராமயணம்,

பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய பெருந் தமிழ் நூல்களிலே குறிப்புக்கள் காணப்படுகின்றன. குறிப்பாக

"கைவழி நயனம் செல்லக் கண்வழி மனமும் செல்ல
ஐய நுண்ணிடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்"

என கம்பராமயணமும்,

"கற்பக பூந்தளிரடி பேங்காமரு சாரிகை செய்ய
உற்பலமென் முகில்விரல் வட்டணையோடு கைபெயரப்
பொற்புறுமக்கையின் வழிப்பொரு கயற்கண் புடைபெயர
அற்புத பொற்கொடி நுடங்கி ஆடுவது போல் ஆடினார்"

எனப் பெரிய புராணமும் நடனம் பற்றிக்கூறின.

கி.பி 13ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட கந்தபுராணத்திலே இசை, நடனம் ஆகியன பற்றிய சில தகவல்கள் குறிப்பாக காஞ்சி நகர வருணனையிலே வருகின்றன. ஒரு செய்யுளிலே நடனமும் இசையும் சிவபெருமானுக்குரியனவே என்ற கருத்துப்பட,

"நாட்டியச் செயல் யாவையும் சிவனது நடனம்
பாட்டிசைத்திறன் யாவையுமன்னாதே"

என வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் சோழர் காலத்தில் பல நாட்டிய நாடகங்களும் ஆடப்பட்டன. எடுத்துக்காட்டாக மூவர் உலா, ஒட்டகக்கூத்தர் இயற்றிய தக்கயாகப்பரணி முதலியவற்றை குறிப்பிடலாம். இவ்வாறு சோழர் காலத்தில் நாட்டியம் உன்னத நிலையிலிருந்தது என்பதனை அக்கால இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. சோழரைத் தொடர்ந்து பாண்டிய விஜயநகர காலங்களிலும் நாட்டியக்கலை வளர்தெடுக்கப்பட்டது.

இவ்வாறு தமிழ்மொழியும் நடனக்கலையும் இணைபிரியாது சிறந்து விளங்கின. தமிழ் மொழி மூலம் நடனக்கலை உலகம் முழுவதும் பரவியது. இதற்கு தொன்று தொட்டு இலக்கியங்கள் வழிவகுத்தன என்பது வெள்ளிடைமலை. தமிழ் மொழியுடன் இணைந்த ஆடற்கலையானது தமிழர் தம் உணர்வுகளை பேணிக்காக்கவும் கலைகலாச்சாரங்களை பேணிவாழவும் வழிவகுத்தது. இவ்வகையில் இவ் இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழும் நாமும் இக்கலையினைப் பேணிப்பாதுகாப்பது கடமையாகும்.

"கலை இன்பமே நிலையின்பம்"

**கு. வைஷ்ணவி**

தரம்-12

கலைப்பிரிவு

# காலத்தால் அழியாத திருக்குறள்

"வள்ளுவன் தந்த திருமறை தமிழ் மாதின் இனிய உயிர்நிலை" என்பது கவிமணி தேசிக விநாயகப்பிள்ளை தெரிந்தெடுத்துக்கையாளும் சொற்றொடர் "வள்ளுவன் தன்னை உலகினுற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" என்பது பாட்டுக்கொரு புலவன் பாரதி பறைசாற்றும் செய்தியாகும்.

பாரதியின் தாசனாகிய பாரதிதாசனும் வள்ளுவனுடைய குறளை உச்சி மீது வைத்து உவந்து போற்றுகிறார். இவையெல்லாம் 20ம் நூற்றாண்டில் எழுந்த வள்ளுவர் புகழ் பாடும் பாமாலைகளாகும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் எம்புகழை நாம் பாடுவதை விடுத்து உலக அறிஞர்களும் எம் முன்னைய தமிழ் அறிஞர்களும் வள்ளுவனை எவ்விதம் காண்கிறார்கள் என்பதை நாம் இங்கு காணுதல் நலம். அத்தோடு இன்றைய சூழ்நிலையில் மக்களுக்கு வள்ளுவரின் குறட்பாக்கள் குறிப்பாக அவர் தமது பொருட்பாலில் தருகின்ற பாடல்கள் எவ்வளவு தூரம் எமக்கு பயனளிக்கின்றன - வழிகாட்டுகின்றன என்பதைப்பார்ப்போம்.

மறைந்த தமிழ் அறிஞரும் தலை சிறந்த நீதிபதியுமான எஸ்.மகாராஜன் அவர்கள் "திருவள்ளுவர்" எனும் நூலிலிருந்து எம் சிந்தனைக்கு விருந்தாகப் பின்வரும் கருத்துக்களை வழங்குகின்றார்.

தலை சிறந்த ஜேர்மன் அறிஞர் கலாநிதி கிரால் என்பவருக்கு மனங்கவரும் நுட்பமான குறல் ஒன்றுக்கு ஆங்கிலத்தில் விளக்கமளிக்கப்பட்டது. இக் குறளின் கருத்து அவரை வெகுவாக கவர்ந்தது. அவர் குறளை மூலத்தில் படித்து மகிழ்வதற்காக தமிழ் மொழியைக்கற்றார். பின்னர் அவர் குறளை 1854 இல் ஜேர்மன் மொழியிலும் 1856இல் இலத்தின் மொழியிலும் மொழி பெயர்த்தார்.திருக்குறலின் கணிசமான பகுதியை மொழி பெயர்த்த பின்பு "எந்த மொழி பெயர்ப்பும் மனங்கவரும் முறையில் அதன் மாண்பினை வெளிக்கொணர்ந்து விட முடியாது. அது உண்மையின் வெள்ளி வேலைப்பாடு கொண்ட தங்க ஆப்பிள் கனி" என அறிவித்தார்.

தலைசிறந்த ஐரோப்பியத் தமிழறிஞர்களில் ஒருவரான பெஸ்கி பாரதியார் (வீரமாமுனிவர்) 1730இல் குறளின் முதலிரு பால்களையும் இலத்தின் மொழியில் மொழி பெயர்ந்தார். இவர் தமிழ் நாட்டிற்கு கிறிஸ்தவ சமயப் பரப்புரையாற்ற வந்தார். பிற சமயத்தவர் அனைவரும் நரகத்திற்குத்தான் செல்வார்கள் என்ற கொள்கையில் அவரிடம் அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

குறளை மொழி பெயர்த்த பின்னர் திருவள்ளுவரின் விழுமியக்கோட்பாடுகளில் மனதை பறிகொடுத்த வீரமாமுனிவர் இந்த முதுமொழிகளைப் பாடிய திருவள்ளுவர் பிறச்சமயத்தவர் என்ற முறையில் நரகத்திற்குச் சென்றிருக்க வேண்டும். என்றாலும் அவர் நரகத்திற்குச் சென்றிருக்க மாட்டார் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன் என்று கூறினார்.

தலை சிறந்த பிரெஞ்சு மேதை எம்.ஏரியல் 1845இல் குறளின் சில பகுதிகளைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். 1730 இல் பெயர் தெரியாத ஓர் ஆசிரியர் செய்த முந்தைய பிரெஞ்சு மொழிபெயர்ப்பு ஒன்றையும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது பிரான்ஸ் தேசிய நூலகத்தில் கூறியுள்ளார்.

தவத்திரு முனிவர் ஜே.வாசரஸ் என்பவரால் சமயம் பரப்புவதறகாக இங்கு வந்திருந்த பொழுது அவர் இயம்பும் கருத்து இதோ,

"குறளை யாரும் மேம்படுத்தவோ அதன் அமைப்பு முறையை இன்னும் முழுமையாக்கவோ இயலாது. அது ஒரு விழுமிய பன்னிற மணி மாலையாகத்திகழ்கிறது. இந்த மாலையின் ஒரு மணியின் வடிவத்தை அளவை அல்லது வண்ணத்தை சிறிது மாற்றினாலும் முழு மாலையின் அழகும் சீர்குலைந்து போகும். இத்தகைய மாபெரும் மேதையை இத்தகைய தன்னேரில்லாத நூலை வையகத்திற்கு வழங்கிய ஒரு நாடு நம்பிக்கையற்ற பயனற்ற ஓர் இனமாக இருக்க முடியாது என்று எண்ணுங்காள் மனம் குதூகலமடைகிறது. அடிப்படையில் அறம் விழுந்த தமிழ் மண்ணில் அல்லாமல் அவர் போதித்த அறம் வளர்ந்திருக்க முடியாது".

என்று அவர் குறிப்பிடப்பட்டிருப்பது ஒவ்வொரு தமிழினையும் தலைநிமிர்ந்து வைக்க செய்தியாகும்.

பணிவுடைமை, அருளுடைமை, பொறையுடைமை போன்ற பண்புகளைக் கிறிஸ்தவமல்லாத நாடுகள் போதிக்கவில்லை என்ற எண்ணம் ஐரோக்கிய கிறிஸ்த்தவர் களிடையே நிலவி வந்தது. குறளை 1886 இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த தவத்திரு ஜி.யூ.பொப் இந்த தவறான எண்ணத்தை தகர்த்தெறிந்தார்.

பணிவுடைமை, அருளுடமை, பொறையுடைமை ஆகிய மூன்றையும் அரிஸ்ராட்டில் விவரிக்கவில்லை என்று கிரான்ட் கூறுகிறார். இன்று இந்த மூன்று பண்புகளும் இந்தத் தமிழ் அறிநெறியாளரினாள் (திருவள்ளுவர்) எங்கணும் கட்டாயமாக ஆழப்பதிய வைக்கப்பட்டுள்ளன. குறளுக்கு மிக முக்கியமான, புகழ் சேர்க்கும் பண்பு அதன் இணையற்ற பா வடிவம். அந்தத் தலைசிறந்த தமிழ்ச் சொல்லோவியரின் கூற்றுக்களுக்கு இந்த வடிவம் செறிவினைக் கொடுத்திருக்கும்.

இவை மிக கவனமாக தெரிந்தெடுக்கப்பட்ட அறநெறிப்பாக்கள். இவை கூறும் பொருள்கள், இவற்றின் உணர்ச்சிகள், இவையாக்கப்பட்ட காலத்துச் சமுதாயத்தின் நிலைமை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இவற்றுக்கும் கிரேக்க நீதி மொழிக் கவிதைக்குமிடையிலான ஒற்றுமை குறிப்பிடத்தக்கது.

கிரேக்க முதுமொழிப்பாக்களிலும் போரியல் மற்றும் இலத்தின் புலம்பற் பாக்களிலும் இதே வகையைக்காணலாம். இந்தப்பாடல்கள் பலவற்றில் தமிழ் யாப்பமைதியின் கால மாத்திரைப் பண்பழகைக் காணமுடிகிறது. இது பிராப் பேட்டியர்சின் மகிழ்ச்சியான முயற்சிகளை வாசகருக்கு நினைவூட்டுகிறது என்று முனைவர் போப் கூறியுள்ளார்.

இலக்கியத் திறனாய்வாளர் தவத்திரு பேர்சிவல் அவர்கள் "மனித மொழி முழுவதிலுமே அறிவுப்பாடங்களைக்கூறுவதற்கு ஆசிரியர் கையாளும் கலை முனைப்புக்கும் குறளடிப் பாக்களளின் செறிவடக்கத்திற்கும் எதுவும் ஈடாகாது என்பது உறுதி" என்று கூறும் கூற்று எம் உள்ளத்தைத்தொடும் கூற்றாகும்.

தமிழில் எழுந்த தலையாய நூலாக திருக்குறள் கொள்ளப்படுகிறது. ஆனால், இத்திருக்குறளில் தமிழனைப் பற்றியோ, தமிழைப் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. சமயசார்பற்ற நூலாக இது விளங்குவதால் சமயங்கள் பற்றியும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் கடவுள் இறைவன் ஆண்டவன் என்ற பொதுச்சொற்கள் கையாளப்படுகின்றதே அன்றி எவ்விடத்திலும் இறைவனைக் குறிக்க எப்பெயரும் கையாளவில்லை. எனவே தான் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் மிக அதிகமாக மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் என்பது எமக்கு வியப்பினைத்தர மறுக்கின்றது. இது இலத்தின், ஜேர்மன், பிரான்ஸ், டச்சு, பின்னிஷ், போலிஷ், ரஷியன், சீனம், பிஜி, மலாய், பர்மியம் ஆகிய மொழிகளிலும் வடமொழி, உருது, மராத்தி, வங்காளி, இந்தி, தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அயல் நாட்டு மொழிகளில் ஏறத்தாழ 82மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்ப்புக்கள் உள்ளன.

திருவள்ளுவரின் தனிச்சிறப்பைப்பற்றி அவர் காலத்தில் வாழ்ந்தார் என்று சொல்லப்படும் புலவர் கபிலர் பின்வருமாறு பாடுகிறார்.

திணையளவு போராச் சிறுபுன்னீர் ஈந்த
பனையளவு காட்டும் படித்தால் மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட! – வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

மற்றேரு புலவர் பரணர் இவ்வாறு கூறுகிறார்

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான் – வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள் வெண்பாவடியால் வையத்தர்
உள்ளுவதெல்லம் அளர்ந்தார் ஓர்ந்து.

புலவர் கோதமானர் பாடியுள்ள பாடலில்

ஆற்றல் அழியுமென்று அந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல் சோர்வின்று.

என்று பாடி நிற்கு - மாங்குமடி மருதனார் குறளின் பெருமையைப் பின்வருமாறு பாராட்டியிருக்கிறார்.

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர்
உள்ளுதோறுள்ளதொறுள்ளம் உருக்குமே
வாய்மொழி வள்ளுவர் மாண்பு.

வட இந்திய அறிஞர்களும் நடுநிலையோடு நல்ல கருத்துக்களை வழங்கியவர் கே.எம்.முன்சி அவர்கள். அவர் திருக்குறளைப்பற்றிக் கூறியுள்ள பின்வரும் கருத்துக்கள் எமக்கு பெருமிதத்தையும் பேருவகையையும் தருகின்றன.

"சாரத்தில் திருக்குறள் வாழ்வியல் பற்றிய ஒரு தன்னிகரில்லாத அறநெறி நூல். நூலாசிரியர் திருவள்ளுவர் ஆழ்ந்த கூர்மதி முழுமையான தேர்ச்சித்திறன், நிறைவான நுண்திறம் ஆகியவற்றுடன் மனித இயல்பின் நுட்பங்களை ஊடுருவி ஆராய்ந்தறிகிறார்.

இக்கால உளவியல் கோட்பாடுகளைக் கூட அவர் மிக நுட்பமாக தன்மயமாக்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய அறிவாற்றலின் ஆழமும் அகலமும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. கடவுள் தன்மை தோய்ந்த அவருடைய நெறிமுறைகளும், அறிவியலும் நீதிமுறைமையும் மனித நேயமும் மட்டற்ற மதி நலமும் சீரிய செயலாற்றலும் வாய்ந்தவை. அவை சாதி சமயப்பாகுபாடுகளையும், காலத்தையும் கடந்தவைஅவை தற்காலத்திற்காக எழுதப்பட்டன போன்ற புதுமை மணம் கமழ்கின்றன.

வள்ளுவரின் முப்பாலாகிய அறத்துப்பாலையும், பொருட்பாலையும், காமத்துப் பாலையும் நாம் படித்து பயன்பெற வேண்டும் என்பதில் எம்மிடையே கருத்து வேற்றுமை இல்லை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் வள்ளுவர் தந்த முப்பாலினுள் பொருட்பாலில் நாம் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

அறத்துப்பாலில் "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்று எதிரியும் நாணுகின்ற முறையில் தீமை விளைவித்த எதிரிக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கூறுகின்ற வள்ளுவர் பொருட்பாலில் கயமை அதிகாரத்தில் "சொல்லப் பயன்படுபவர் சான்றோர் கரும்பு போல் சொல்லப்பயன்படும் கீழ்" என்று சொல்லித்திருந்த முடியாதவர்களைக் கரும்பைப்பிழிந்து சாறு எடுப்பது போல் நெருக்கடிக்கு ஆளாக்கித்தான் பயன் பெற முடியும் என்று கூறும் வள்ளுவர் கருத்து இன்று நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்தாகும்.

எம் சமுதாயத்தில் சொல்லித்திருத்த முடியாத கயவருடைய எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது. அவர்களைப் பிழிந்தெடுத்துத்தான் பயன்பெற முடியும் என்பது வள்ளுவர் கருத்தாகும். இதே வள்ளுவர் நெல் முளைக்க வேண்டும் எனில் புல்லும் சேர்ந்து முளைப்பது தவறல்லஎனும் கருத்துரைப்பவருக்கு இடித்துரைப்பது போல் நெல் முளைக்க வேண்டும் என்றால் களை பிடுங்கப்படுவது போல் எம் சமுதாயத்தில் உள்ள புல்லர் கூட்டம் - களவர் கூட்டம் களைந்தெறியப்பட வேண்டும் என்று ஆழ்ந்த சிந்தனையில் கூறும் கருத்து எம் அறிவுக்கண்ணை திறக்க உதவட்டும்.

இதே வள்ளுவர் தனது "குடியியல்" என்ற அதிகாரத்தில் தாம் பிறந்துள்ள குடியை உயர்ந்த ஒருவன் உண்மையாக உழைப்பானாயின் தெய்வம் மடிதட்டி அவனுக்கு உதவ முன்வரும் என்ற கருத்தை நாம் பிறந்துள்ள தமிழினத்தைக்காக்க உண்மையில் முயற்சி எடுப்போமாயின் தெய்வம் எமக்கு துணை நிற்பது உறுதி.இதை ஆங்கிலத்தில் "Gods gelps only those who help the selves" என்று கூறுவர்.

எனவே வள்ளுவர் தந்த திருக்குறள் உலகப் புகழ் ஈட்டியிருப்பது ஒரு புறமிருக்க மக்களை உய்விக்கின்ற தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கின்ற குறளாக விளங்குகின்றது என்பதை உணர்வோமாக.

**ப. மாதுமை**

**தரம் 12 கலை**

# வாழவழி இருக்கும் போது....

வாழ வழி இருக்கின்றது
வாழ வழியும் இருக்கின்றது
வாழ்க்கையைத் தேடுங்கள்
வானம் நம் கைகளில் வரும்.

மயிர்கொட்டிகளை அழித்து -பின்
பட்டாம்பூச்சியைத் தேடும்
மடைமையை நீக்குங்கள்

தோல்விகளை கொஞ்சம்
ஏற்றுக் கொள்ளுங்கள்
தோற்கடிக்கப்பட மாட்டீர்கள்

தேடலை கொஞ்சம் தூண்டுங்கள்
தேரில் பவனி வரலாம்
தேய் பிறையாய் ஆகாதீர்கள்

வாழ வழி யிருக்கும் போது-இவ்வுலகில்
வாழ்ந்து பாருங்கள்.
வெற்றி நம் கைகளில்.

**ச. ஸ்ரீறங்கநாதன்**
தரம் 13, உயிரியல்

"அறிவை அறிவால் அறியும் அறிவே அறிவு"

**தி. ஷாமந்தி**
தரம் 12 வர்த்தகம்

# நாடகக் கலையின் முக்கியத்துவம்

திருமதி L.A ஜேம்ஸ்மில்பேட்



மானிட வர்க்கத்தின் சிறப்பிற்கும் மேன்மைக்கும் உரிய விடயங்களில் கல்வியே முன்னிலையில் உள்ளது. அறிமுறைக் கல்வியை செயற்படுத்துவதில் முக்கிய இடம் வகிப்பன கலைகள். வாழ்வில் தேவையான பல அம்சங்களை நிறைவு பெறச் செய்து வாழ்வை இதமாகக் கொண்டுசெல்வதற்கு பலவித கலைகள் துணைபுரிகின்றன. மக்கள் யாவரும் தமக்கு அவசியமான பற்பல தொழிற்பாடுகளிலே ஈடுபடும் போது அஃது "நானிலம் யாவும் ஓர் நாடக சாலையே, ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர் தாம்" என்றவாறான சான்றோரின் கவிதைகள் எமக்கு நினைவு படுகின்றன. வாழ்வில் அக, புற ஆற்றல்கள் முரண்களை பார்வை வடிவில் பன்முகமாய் நிதர்சனமாக படம்பிடித்துக் காட்டுவது நாடகக்கலை.

மாணவர் மனதுகளைக் கவர்ந்து அறிவாற்றலையும் படிப்பினையையும் உள்ளத்தில் நன்றாகப் பதியவைக்கும். இயல், இசை, நடனம் எல்லாம் கவர்ந்த பயன்தரும் கலை நாடகக் கலை. அதனால் சகல கலைகளும் சங்கமிக்கும் கலை நாடகக்கலை எனப் போற்றப்படுகிறது. ஆதியில் இருந்தே மானிட சமூதாயத்தின் வாழ்வினை சீர்ப்படுத்துவதில் நாடகங்கள், கூத்துக்கள் பயனளிக்கும் முக்கிய இடத்தைப் பெற்று வந்துள்ளன என்பது அறிஞர் பலர் ஆய்ந்து கண்ட முடிவு. மக்களுக்கு மன ஆறுதல், சந்தோசம், உளதாக்கங்களில் இருந்து குணம் பெறுதல், நகைச்சுவை, பொழுது போக்கு, இவைகளுடன் சீரான வாழ்க்கை நடாத்துவதற்கான பல படிப்பினைகளையும் கொடுக்கும் நாடகக்கலை ஒரு சமூகக்கலை. கல்வி கற்றலின் நோக்கம் ஒருவன் தன் சமூகத்திலும் நாட்டிலும் பயனுள்ள நற்பிரஜையாக வாழ்வதாகும். நாடகக்கலைகற்கும் இளம் உள்ளங்கள் தாம் கற்கும் இக்கலையானது தன்னை நற்பிரஜையாகவும் மதிப்புள்ள சேவையாளனாகவும் உருவாக்கும் என்பதை நன்றாய் உய்த்துணர்ந்து விருப்புடனும் முயற்சியுடனும் கற்க வேண்டும்.

கல்வியின் நோக்கங்களும், இலக்குகளும், காலத்தோடும், இடத்தோடும், மாறுபட்டும், வேறுபட்டும் நல்வளர்ச்சி பெற்று வந்துள்ளன. முன்னொரு போதும் கொடுக்கப்படாத விதத்தில் பாடசாலைகளில் தற்போது கற்றல் பாடமாக நாடகக்கலைப்பாடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற முதுமொழிக்கு இணங்க மக்கள் சமுதாயம் தம்குடும்பங்கள், சமூகங்கள், நாடு அனைத்திலும் தேவைப்படும் நற்பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழவும் அதனால் அனைத்து மக்களும் இன, மத, பேதமின்றி ஒன்றிணைந்த இன்ப உலகை உருவாக்கவும் நல்ல நாடகங்கள் திரைப்படக் காட்சிகள் பேருதவி புரிகின்றன. இது அனைத்துலகமும் ஏற்ற உண்மை என்பதால் எல்லா நாடுகளும் நாடகக் கலைக்கு முக்கியம் அளிக்கின்றன.

இன்றைய சிறார்கள்தான் நாளைய உலகத்தலைவர்களாக விளங்க வேண்டியவர்கள். தாம் வாழும் சமூகத்தில் நற்பணியாளராகவும் தம் குடும்பத்தின் ஒளி விளக்குகளாகவும் பிரகாசிக்க வேண்டியவர்கள். அதனால், யாருக்கும் இயல்பாக உள்ள ஆராய்வூக்கத்தையும் புதியன காணும் திறனையும் துணையாகக் கொண்டு சிறுவயதிலிருந்தே பேணிக் காத்து, அவற்றின் துணை கொண்டு சிறுவர்க்கு நல்லறிவையும், ஆற்றலையும் புகட்டுவதோடு அவர்களிடம் அசாதாரண உறுதி, தாக்குப்பிடிக்கும் விடா முயற்சி, குலையாத ஒழுக்கம் இவற்றை கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலம் மாணவர்கள் நல் ஆளுமையுடையவராக நாட்டின் நற் பிறஜையாக வளர்ச்சி அடைவர். நாடகக் கலையின் பயனாக இன் நற்பேறுகள் யாவையும் ஒருங்கே அடைய முடியும். இக்கலையைக் கற்றலின் ஊடாகப் பெற்றுக் கொள்ளும் திறன் ஒருவருடைய குணசீலங்களைப் பலப்படுத்தி "எல்லோரும் இன்புற்று வாழ்வதன்றி வேறொன்றறியேன் பராபரமே" என்ற தாயுமானவரின் நல்மொழிக்கிணங்க வாழ்ந்து மனித குலத்தின் ஒரு மாணிக்கமாய் ஒளிகான்றிடும் கலைஞர்களை உருவாக்கும் நாடகக் கலையில் நலன்களை நாம் போற்றி நாடகக்கலையை கற்பதிலும் நடிப்பதிலும் ஊக்கத்துடன் செயற்படுபோம்.

☆☆☆

## மாணாக்கர்

*மாணாக்கர் நல்ல மாணக்கர்*
*அன்பெறும் உருவாய் பாடறிந் தொழுகி*
*பணிவுடன் அன்பினை நெஞ்சினில் எழுதி*
*மானமும் வீரமும் உயிரெனக் கருதி*
*மாண்புடனே வளர்ந் தோங்கிடுபவரே*
*ஞாலத்தில் புகழ் பெற வாழ்ந்திடவே*
*சுடர் மிகு அறிவுடன் விளங்குபவர் இவரே*
*மாணாக்கர் நல்ல மாணாக்கர்.*

செ. தர்ஸ்மலா
தரம்-13

# எண்ணும் எழுத்தும்

உலகிலுள்ள சகல பொருட்களையும் பார்த்த ரசிப்பதற்கு கண் சிறந்த உறுப்பாக தொழிற்படுகின்றது. கண்ணுக்கு எண்ணையும் எழுத்தையும் ஒப்பிடப்படுகிறது என்றால் எண்ணையும் எழுத்தையும் அரிச்சுவடியிலிருந்து ஒருவருக்கு ஐயமின்றி கற்பித்து விட்டால் அந்த நபர் எதிர்காலத்தில் நல்ல பிரஜையாக வாழ்வார் என்பதில் எட்டுணை ஐயமும் இல்லை.

இதனாலன்றோ "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று கூறப்படுகிறது. ஒரு நபர் வைத்தியராகவோ பொறியியலாளராகவோ அல்லது எந்தத்தொழிலில் ஈடுபட்டாலும் அவருக்கு எண்ணும் எழுத்தும் கண்போன்றது. எண்ணும் எழுத்தும் தெரியாத எத்தனையோ நபர்கள் வாழ்க்கையில் சிக்குண்டு தவித்து ஆள்படுகின்றனர்.

எழுதும் போது தவறுதலாக ஒரு எழுத்துப்பிழை ஏற்பட்டு அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி நல்ல பெறுபேறு பெறத்தடையாக அமைகின்றது என்றால் எழுத்தின் முக்கியத்தவத்தை கூறவும் வேண்டுமா?

மேலும் எண்னணயும் எழுத்தையும் சிறப்புச் செய்யத் தொலைக்காட்சி வானொலி. பத்திரிகை போன்றவற்றை நாளாந்தம் பயன்படுத்த வேண்டும் சம்பாசனைகள். விவாதங்கள் போன்றவற்றில் கலந்து கொள்ள வேண்டும். பல அறிவாளிகளுடன் பழகுதல் வேண்டும். அவர்களின் அடுக்கு வசனங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். கவிதைகளைப்படித்தல் கேட்டல் வாசித்தல் மூலம் எண்ணையும் எழுத்தையும் சிறப்புற வைக்கலாம்.

அடுத்து பிஞ்சு வயதிலே ஐயந்திரிபறக் கற்காது கவனயீனமாக விடப்பட்டு எண்ணைப்பற்றிய சரியான விளக்கமில்லாமையால் கணித பாடத்தில் சித்தியடையாத அந்த நபர் கல்வியைத்தொடராது விடுகிறார். இப்படிப்பட்ட பலர் கணக்கு வழக்குச் சரியாக பார்க்க முடியாமல் செல்வத்தை பறிகொடுத்து மனநோயாளிகளாகத் திரிகின்றனர். அதாவது நெற்றி வியர்வை சிந்தி உழைத்த பணம் இவ்வாறு பறிகொடுக்கப்படுகின்றது என்றால் எண் எவ்வளவு முக்கியமானது எனப் புரிகிறது.

எண்ணும் எழுத்தும் உறுப்பமைய அமைந்து விட்டால் அவை எல்லோர் கண்ணையும் கவரும்.இது மட்டுமல்ல இப்படியான நபரைப்பலர் பல வேலைகளுக்காகத் தேடிச்செல்வார்கள். இப்படிப்பட்ட நபர்கள் பலபரீட்சைகளில் சித்தி பெற எண்ணும் எழுத்தும் உதவும். இவர்களுடைய திறமையால் பல கற்பனைகள் கூட வளர்ச்சி அடையும்.இவர்களினால் பல நல்ல சமுதாயம் உருவாகும்.

இவர்களுடைய பேச்சுவன்மை எல்லோரையும் கவரவைக்கும் எழுத்தறிவற்ற மாணவர்களை மனிதாபிமானத்துடன் அவர்களை எழுத்தறிவுள்ளவர்களாக்கி அவர்களையும் மனிதர்களாக வாழ வைக்கும் போது அவர்களும் எண்ணும் எழுத்தும் கண்ணென்பதை உணர்ந்து இவற்றை வளர்தெடுக்க துணைபுரிவர்!

"இறுதியாக பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதற்கு இணங்க எவ்வளவு வறுமையில் வாடிய போதும் எண்ணையும் எழுத்தையும் கற்க வேண்டும். "எண்ணும் எழுத்தும் இரு வழிகள் குருவின் பார்வை அருள்மொழிகள்" இதனாலன்றோ எழுத்தறிவித்தவன் இறைவன் என்று பகரப்படுகின்றது.

**ந. மாதங்கி**
தரம் 13, உயிரியல்

# தாய் (க்கு) கிடைத்த பரிசு

உதிர்ந்து விடுவோம் என்று பயந்து - நா
உலர்ந்து போய்க்கிடக்கின்றது
நட்சத்திரக் கூட்டம்
அதுபோலும்

நலிந்து நடைப்பிணமாய்
நடப்பிழந்து கிடக்கும்
நந்தவனத்திற்கு - தான்
நிலங்கொத்த நீர் பாய்ச்சி
வளங்கொழிக்க வைத்தவள்
- வலுவிழந்தவள் போலும்

புரியாத புதிராய் அவளின் வார்த்தைகள்
கண்ணீராய் வழிகின்ற போது
வலி தாங்கிய அவளின் உள்ளத்திற்கு
சுமைதாங்கி யாரோ?
அந்த வாத்தியார் பையனா?

அண்ணாந்து அன்னை முகம் பார்த்து
அன்புக்காய் ஏங்கும் சின்னக்குழந்தையின்
தன் மகளின் அன்புக்காய் ஏங்கும்
ஓர் உன்னதப் பிறவி அவள் தான் தாய்

ஆழமாய் அவள் அடிமனதில் எழும்
சிந்தனை நான் பைத்தியமோ?
ஆம் பைத்தியமே தானென்று
தடம் புரளாது தன் உறவுப்படகில்
சென்றாள்.

ஆம் அவள் யாரோ?
அவள் தான் அன்னை
அன்புப் புதல்வியின் அநாகரிகச் சொல்லால்
அவஸ்தையுற்று செயலற்ற இயந்திரம் போல்
இயங்கும் கருவி அவளே,
அன்புத்தாய்

பாசக்கிளியின் மொழி போன்று
மகளின் வார்த்தை கேட்ட தாய் மனது
தந்தியறுத்த வீணை ஆக இப்பூமியில்
மீளமுடியாது சிதைகின்றாள்

எனக்காய் அன்று உனக்காய் இன்று
ஊசலாடிய என் ஜீவன்
கணப்பொழுதில் உன் வார்த்தையால்
உள்ளம் துவண்டது

பெண்ணாய் பிறந்தேன் இப்பூமியில்
உன்னைப் பெற்றெடுத்து உச்சிமோர்ந்தேன்
உன் வார்த்தை கேட்டு உள்ளத்து அறைகள்
நான்கல்ல நானூறாகச் சிதறியதே

அன்பை நாடிச் சென்றேன்
அவமானம் அடைந்தேன் இன்று - என்
அன்பு அணங்கால்
உள்ளமுடைந்தேன் உன்போல் வாத்தியாரே!
உள்ளுக்குள் உன்னத போராட்டம்
அன்புத்தாய் அழகாக அடிவைக்கிறாள்
தன் உறவுப்படகை நோக்கி.

("தாய்" சிறுகதை தழுவல்)

மு. சிவசக்தி
தரம் 13 கலை

## தமிழ் மொழித்தினம் – 2011 தேசியமட்டம்



**நிற்பவர்கள்:** செல்வி சாரங்கா சபாநாயகம் பாவோதல் (பிரிவு IV) 1ஆம் இடம், இசைக்குழு 1ஆம் இடம் செல்வி சாகித்தியா புவனேந்திரன், செல்வி தேவசேனா விஜயகுமார், செல்வி ஸகிஷ்ணா ரவிச்சந்திரன், செல்வி யதுஷா ரகுநாதன், செல்வி ஆருனியா ஆருள்நேசன், செல்வி சரணிகா கனகசுந்தரம், செல்வி சங்கீதா கிருஷ்ணன், தனிநடனம் (பிரிவு IV) 1ஆம் இடம் செல்வி ஸ்ரீதரா வரதராஜன்.

**இருப்பவர்கள்:** (ஆசிரியர்கள்) செல்வி இறம்மியா நடேந்திரா, திருமதி தேவலோசனி குமாரவேள், திருமதி விஸ்வதேவி புஸ்பநாதன், திருமதி ரவிச்சந்திரிக்கா கிருஷ்ணாநந்தசர்மா, திருமதி ராஜினி முத்துக்குமாரன் (பிரதி அதிபர்), திருமதி கமலேஸ்வரி பொன்னம்பலம் (அதிபர்), திருமதி சர்வலோகேஸ்வரி சிவானந்தம், திருமதி வசந்தி குஞ்சிதபாதம், திருமதி சாந்தநாயகி வீரசிங்கம். **முன்வரிசையில் இருப்பவர்கள்:** குழுஇசை 1ஆம்இடம் செல்வி ஆதித்யா அருணகிரிநாதன், (பிரிவு II, தனிஇசையும்), செல்வி மதுராங்கனி நந்தகோபால், செல்வி லதாங்கி இராமகிருஷணன்,

## தமிழ்த் தினம் - 2011 தேசியமட்டம்



செல்வி அ. ஆதித்யா
முதலாம் இடம்
பிரிவு II தனி இசை,
குழு இசை



செல்வி வ. ஸ்ரீதரா
முதலாம் இடம்
பிரிவு IV தனி நடனம்



செல்வி ச. சாரங்கா
முதலாம் இடம்
பிரிவு IV பாவோதல்

## திருக்குறள் மாநாடு - 2011 தேசியமட்டம்



செல்வி ஜெயவைஷாலி
முதலாம் இடம்
கீழ்ப் பிரிவு மனனம்



செல்வி சுபாங்கி
இரண்டாம் இடம்
கீழ்ப் பிரிவு கட்டுரை



செல்வி இ. அஞ்சனா
மூன்றாம் இடம்
கீழ்ப் பிரிவு கட்டுரை



செல்வி ப. கதிர்தர்ஷினி
இரண்டாம் இடம்
மத்திய பிரிவு கட்டுரை



செல்வி ப. மாதுமை
முதலாம் இடம்
மேற் பிரிவு வினாவிடை

# நாட்டார் இலக்கியங்களின் செல்வாக்கு

பாமர மக்களின் கற்பனை வளத்தையும் கவிதை சுவையையும் வெளிப்படுத்துவதே நாட்டார் இலக்கியம் ஆகும். இந் நாட்டார் இலக்கியங்கள் ஒரு நாட்டின் இசைக் களஞ்சியமாகவும் செல்வமாகவும் விளங்குகின்றன. சங்க காலம் தொட்டே நாட்டாரியல் தமிழர் வாழும் பட்டி தொட்டிகளில் எல்லாம் தோன்றியுள்ளன. இதனையே நாட்டார் இலக்கியம், வாய்மொழி இலக்கியம், ஏடறியா இலக்கியம் என அழைப்பர். அற இலக்கியங்கள், கதை இலக்கியங்கள் அறிஞர்களிடையே மதிப்பு பெற்றதை போன்று பயன்தரவல்ல சமுதாயஇலக்கியமாக இவை விளங்கியமையால் நாட்டுப் புற இலக்கியம் என பெயர் பெற்றது. அரம்பத்தில் இவை வாய் வழியாக பாடப்பட்டு வந்தமையால் ஏடுகளில் பதியப்படவில்லை. பிற்பட்ட காலங்களில் இவற்றின் தன்மைகளும் பெருமைகளும் பலரால் அறியப்பட்டு நாட்டாரிலக்கிய ஆய்வாளர்களினால் இவை ஏடுகளில் ஆவணப்படுத்தப்பட்டனர். இவற்றை ஆவணப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டவர்களாக பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பண்டிதமணி சி. கணபதிபிள்ளை போன்றோரை குறிப்பிட முடியும்.

சங்க கால செய்யுட்களினூடாக நாட்டார் இலக்கிய மரபினை அறிய முடியும். சங்க மருவிய காலத்தில் எழுந்த ஆற்றுவரி, கந்துகவரி, முரிவரி, குரவைவரி என பல்வேறுபட்ட நாட்டார் இலக்கிய வடிவங்கள் இடம் பெறுகின்றன. பல்லவர் காலத்தில் அப்பர் பெருமானின் பதிகங்களில் நாட்டுப்புற இலக்கிய செல்வாக்கை அறிய முடியும். அந்தவகையில் நாட்டுப்புற இலக்கிய வழக்கிலே காணப்படும் ஒலிவேறுபாட்டினையும், சொல்லாட்சியையும் அப்பர் தனது பதிகத்திலே கையாண்டுள்ளார். இதனை,

*"வைச்சமாநிதி யாவர் மாற்பேறரே*
*நீச்சல் நீறணி வாரை நினைப்பதே"*

என பாடியுள்ளார். இது போன்று சோழர் காலத்திலே தோற்றம் பெற்ற இராமாயணம் நாட்டுப்புற இலக்கிய செல்வாக்கை பறைசாத்தி நிற்கிறது. இராமனின் பெருமை, சீதையின் சிறப்பு, அனுமன் தூது முதலான நிகழ்வுகள் தாலாட்டுப்பாடலில் இடம் பெறுவதை காணலாம்.. இதில்,

*"ராரிக்கோ ராரி கொண்டு*
*எங்கண்ணே*
*ராமருக்கோ தூது கொண்டு"*

எனும் தாலாட்டுப் பாடலில் சீதையை தேடி தூது சென்ற அனுமனின் செய்தி கூறப்பட்டுள்ளது. நாயக்கர் காலத்தில் தோற்றம் பெற்ற தனிப்பாடல்கள், குறவஞ்சி, பள்ளு முதலான இலக்கியங்களும் நாட்டார் பாடல்களின் தன்மையை கொண்டுள்ளன.

இலங்கையிலும் பிரதேச ரீதியாக நாட்டுப்புற இலக்கியங்கள் உருவெடுத்துள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, மலையக பிரதேசங்களில் காணப்பட்ட தொழில் முறைகளின் அடிப்படையில் மீனவ பாடல், அரிவி வெட்டுப் பாடல், பொலிப்பாடல், ஏர்ப்பாடல் முதலான பாடல் வகையில் தோற்றம் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்தில் ஆரிய சக்கரவத்தி காலத்தில் கதிரை மலை பள்ளு என்னும் இலக்கியம் பொது மக்களை மையமாக கொண்டு படைக்கப்பட்டமையால் இவை நாட்டார் இலக்கிய செல்வாக்கை தன்னகத்தே கொண்டுள்ளது. சிலப்பதிகாரத்தை அடிப்படையாக கொண்டு ஈழத்தில் நாட்டாரிலக்கிய மரபிலே கண்ணகி வழக்குரை, கோவலனார்கதை, கண்ணகி அம்மன் ஊஞ்சல் ஆகியன தோற்றம் பெற்றன. இதனூடாக நாட்டார் இலக்கிய வளர்ச்சிப்போக்கை அறிய முடிகிறது.

இது போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் நாட்டார் பாடல்கள் பெருவழக்காக காணப்படுகின்றன அந்தவகையில்

*"கடலே இரையாதே காற்றே நீ வீசாதே*
*நிலவே எறியாதே என்ற நீல வண்டு போயச்சேருமட்டும்"*

எனும் பாடலை குறிப்பிட முடிடியும். மன்னார் மாவட்டத்திலும் நாட்டாரிலக்கிய செல்வாக்கை பின் வரும் பாடல் ஊடாக அறியமுடியும்.

*"கடலே இரையாதே கானலே நீ வீசாதே*
*நிலவே நீ எறியாதே - என்*

*நீல வண்டார் போகுமட்டும்"*

இவ்வாறு பிரதேச ரீதியாகவும் நாட்டுப்புற இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்வாறாக நாட்டார் இலக்கியங்கள் தன் செல்வாக்கை பல இடங்களில் நிலை நிறுத்தி இருப்பதுடன் தமிழ் மொழிக்கு அணிசேர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

**ஜெ. குபேரகா**
13 கலை

"நீ இதமாக யாருடனும் பேசவேண்டாம் - ஆனால்
வசை மொழி பேசாமலாவது இருக்கலாமே"

"நீ தோன்றும் வண்ணமே இருந்திடவும் செய்"

- லத்தீன் பழமொழி

**தொகுத்தவர்: வி. சுகன்யா**

**தரம் –12 கலை**


With the Best Compliments From:
Midea
Electro Mart
Authorized Dealer for Abans Ltd.
Midea
PC Show Room
www. mideamart.com
e-mail: midea21@gmail.com
Tel: 021-2224566 Fax: 021-2221646
NO.1-I, 1-H, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA.
NO.1J, STANLEY ROAD, JAFFNA, SRI LANKA.


சென்றல் நேசிங் ஹோம்
வழங்கும் சேவைகள்
1. 24 மணிநேர வெளிநோயாளர், உள்நோயாளர் பகுதி
2. ஆய்வுகூட வசதிகள். ஈ.சீ.ஜீ வசதி (E.C.G),
ஸ்கானிங் (ULTRA SOUND)
3. லப்ரஸ்கோப் சத்திரசிகிச்சை
4. நிபுணத்துவ ஆலோசனைகள் பொது வைத்தியத் துறை,
இருதய நோய், காது, மூக்கு, தொண்டை, குழந்தை வைத்தியம்,
மகப்பேற்று/பெண்நோயியல் கிளினிக், சத்திரசிகிச்சை.
5. என்டஸ் கோப் (ENDOS COPE)
6. அம்புலன்ஸ் சேவை.
AMBULANCE
தொலைபேசி இலக்கம்: 021 222 2263
விபரங்களுக்கு நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.
350, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.

# ஸ்ரீமகாவிஷ்ணு
## SHRI MAHA VISNU
### பல்பொருள் வாணிபம்

கால்நடைகள் தீவனம்,
மருந்துகள்,
வில்லுத்தகடுகள், மோட்டார்
சைக்கிள்கள், வாகன
பற்றறிகள் போன்றவற்றை
மலிவான விலையில் பெற்றுக்
கொள்ளலாம்.

70, 72, Stanley Road,
Jaffna.
T.P: 021 222 6624

# ABI'S
## Beauty Care

Bridel Makeup, Facial, Eye brow threding, Bleaching, Strightening, Perming

**Wedding Cake, Birthday Cake, Rich Cake**

ஆர்.ஜீ.பிரதர்ஸ்
T.P: 0212223203, 0214921022
E-mail rgbrotherlk@Homail.com

# சஞ்சீவி

கட்டிடப் பொருட்கள், வீட்டுக்குத் தேவையான உபகரணங்கள், வாணிபம் அத்துடன் மாபிள், பெயின்ரிங் கட்டிட வேலை ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கப்படும்.

பரமேஸ்வராச்சந்தி,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

# அருள்நிலா நகை மாடம்

# ARULNILA NAHAI MADAM

**தங்கப்பவுண்நகை வியாபாரம்**

T.P.: 0777106042

*Manufacturers of Gold Jewels*

22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**74, kasthuriar Road, Jaffna**

ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை

# R.G.BROTHER'S

Import & General Merchants & commission Agents For Local Products

**332,Hospital Road, Jaffna**

**ஆர்.ஜீ.பிரதர்ஸ்**

T.P: 0212223203, 0214921022

E-mail rgbrotherlk@Homail.com

# ஸ்ரீ மகா விஷ்ணு

# SHRI MAHA VISNU

**பல்பொருள் வாணிபம்**

கால்நடை தீவனம்,

மருந்துகள், வில்லுத்தகடுகள்,

மோட்டார் சைக்கிள்கள்,

வாகன பற்றரிகள் போன்றவற்றை

மலிவான விலையில்

பெற்றுக்கொள்ளலாம்.

நவீன வடிவமைப்புகளின் அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ளலாம். நகை என்றதும் நாட வேண்டிய ஸ்தாபனம்

# துர்க்கா நகைப் பூங்கா

**தங்கப்பவுண் நகை மாளிகை**

ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

**71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*with best compliments from....!*

# KAJAMUGAN HARDWARE

# கஜமுகன் ஹாட்வெயர்

கட்டிடப் பொருட்கள், கம்பி வகைகள், சீமேந்து, PVCபைப் வகைகள், பெயின்ற் வகைகள், Metson Mesh நெற் வகைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

147, 149, STANLEY ROAD,
JAFFNA.

TEL: 021-222 2833
FAX: 021-222 2368

147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

**பல்பொருள் வாணிபம்**

இல. 195,
பரமேஸ்வராச்சந்தி,
பலாலி வீதி,
திருநெல்வேலி.
T.P: 0215672019

**V.K. Rajaratnam**
**2.c Stanly Road,**
**Jaffna**

# RUPA VERSATILE TRADES

DISTRIBUTORS FOR
Colombo office
1764A , CENTA ROAD,
COLOMBO-12

# RVT

## ரூபா பன்முக வர்த்தகம்

உங்கள் வியாபாரத்துக்கான பல் வர்த்தகப் பொருட்களையும்
மொத்தமாக பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

இல.104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Tel : 0212228330
Fax : 0212227036

176 ஏ. சென்றல் வீதி,
கொழும்பு-12
Tel-0115830217
0115830219
Fax:-0112392412

## ஸ்ரீ முருகன்

நகை மாளிகை

## Sri Murugan

**Jewellary**

**தங்கப்பவுன் நகைவியாபாரம்**

கண்கவர் 22CT தங்க நகைகளை
பெற்றிட நம்பமான ஸ்தாபனம்.

68, kasthuriar Road,
Jaffna.

68, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.
T.P - 0212225965

## சானுகா

நகைமாடம்

## SAANUGA

**NAGAI MAADAM**

No.200G,
KASTHURIYAR ROAD, Jaffna.
Tel: 0212223700

200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# Style Park

**Perfect collection**

171,K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 8383

M.Mugunthan
0777738715

# JAFFNA ELECTRICAL

**DEALERS IN:**

**ELECTRICAL**

**&**

**ELECTRONIC**

*Authovized Dealer for Abans Ltd.*

DISTRIBUTORS FOR KML CABLES
AND KTK PVC PIPES

**94(6) Stanley Road,**
**Jaffna.**

Tel:021-2222358 Fax:021-2224302

# Saranka
# Jewellery
# சாரங்கா
## ஜுவலரி

**55,Sea Street,**
**Colombo-11.**
**Tel: 2434971**
**FAX: 0112434071**

Specialist in Wedding Sarees & Shalwar Kamees

# VANI TEX
# வாணி ரெக்ஸ்

11, நவீன சந்தை உட்புறம்,
சாவகச்சேரி.
தொ.பே: 070-213

81, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225578

**81,Grand Bazaar,**
**Jaffna.**
**Tel:021-2225578**

**11, New Market,**
**chavakachcheri**
**Tel: 070-213117**

# Vista Vision
# Digital Colour Lab







**விஸ்ட்டா விஷன்**
**டிஜிட்டல் கலர் லாப்**
**52, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
(இலுப்பையடிச் சந்தி அருகாமை)
**தொ. பே: 021 2225187**

**விஸ்ட்டா விஷன்**
**டிஜிட்டல் கலர் லாப்**
**347, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்**
(ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ் வீதி சந்தி அருகாமை)
**தொ. பே: 021 2228510**

# Eye Centre
## கண் சிகிச்சை நிலையம்

கொழும்பிலிருந்து விசேஷமாக வருகை தந்துள்ள யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற பிரபல கண்வைத்திய நிபுணரின் ஆலோசனையும், சிகிச்சையும் நடைபெறுகின்றன. வெகு விரைவில் நவீன முறையில் கண்சத்திர சிகிச்சையும் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு:
**230, நாவலர் வீதி,**
(இலுப்பையடிச்சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
**யாழ்ப்பாணம்**

**தொ. பே. இல: 077 923 1710 021 320 2199**

கந்தா கடம்பனை மறவாதவர்க்கு ஒருநாளும் தாழ்வில்லை. விரதமிருந்து வரம் கேட்போம் நிம்மதியைத் தந்திடுவாய் - முருகனே துன்பத்திலும் முருகநாமம் நெஞ்சிருத்தி வணங்குவோம் கார்த்திகேயா

நங்கையரோ இயற்கை அழகு அவர்களை மேலும் அழகுபடுத்துவது தங்க ஆபரணங்கள். அதை மேன்மேலும் மெருகூட்டி

அழகுபடுத்தி மெருகூட்டுபவர்கள் யார் தெரியுமா?



# சாருணி ஜுவல் கட்டிங்

## SHARUNI JEWEL CUTTING WORK

74, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். T.P: 222 9372

NIBM
BUILDING COMPETENCIES

அரச சான்றிதழுடனான

Special Discount

கணினி
முகாமைத்துவ
ஆங்கில
சிங்கள
கற்கை நெறிகள்

After A/L

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரம் பெற்ற

தேசிய வியாபார முகாமை நிறுவனம்



077 071 6974
021 222 0360

இல. 40 கல்லூரி வீதி
(யாழ். இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

# Yaso Motoars & HARDWARE



163, Stanley Road,
Jaffna.

# நன்றிகள்

“தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்”

என்பது வள்ளுவர் வாக்கு,

தமது வருகையால் எம் வெளியீட்டு விழாவினைச் சிறப்பித்து வைத்த, பிரதம அதிதி யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் S. சிவலிங்கராஜா, அவர்தம் பாரியார் அவர்களுக்கும், “வேம்பூ”வை நிலை நிறுத்த, வெளியீட்டுரையும் மதிப்புரையும் வழங்கிய யாழ். பல்கலைக்கழக, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் அவர்களுக்கும், பாடசாலைஅதிபர், பிரதிஅதிபர், உபஅதிபர்கள், ஆசிரியர்கள், கல்விப்பணிமனைசார் அதிகாரிகள், அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், அனைவருக்கும்,

“வேம்பூ” சிறப்பாக வெளிவந்து அருமருந்தாய் விளங்கி, தமிழ் மணம் பரப்ப தமிழ் நலன் கனிந்த சிறப்புக்கட்டுரை ஆக்கங்களை, பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தந்து உதவிய, தமிழ் பேராசான்களான பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர், கலாநிதி துரை மனோகரன் அவர்களுக்கும்,

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை, முனைவர் வே.மகேஸ்வரன் அவர்களுக்கும்,

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் ஈஸ்வரநாத பிள்ளை குமரன் அவர்களுக்கும்,

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, விரிவுரையாளர் திரு. ச. லலீசன் அவர்களுக்கும் ,

மற்றும் எமது ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், மாணவச் செல்வங்களிற்கும், முதற்பிரதியைப் பெற்றுக் கொண்ட திரு.லயன் E.S.Pநாகரட்ணம் அவர்களுக்கும்,

சிறப்புப்பிரதிகள் பெற்றவர்களுக்கும், மற்றும் விளம்பரம் வழங்கிய வர்த்தக உரிமையாளர்களுக்கும், புகைப்படம் பிடித்துதவிய “அரவிந் ஸ்ரூடியோ” கலைஞர் களுக்கும், இந்நூலை அச்சிட்டுதந்த குரு அச்சகத்தினருக்கும், விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கும், மற்றும் ஏனையவர்களுக்கும் வெளியீடு சிறப்புற எல்லா வகையிலும் ஒத்துழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

– **தமிழ் மன்றம்**

# கல்லூரிக் கீதம்

மன்னு புகழ் பரவி ஒளியுறவே
பன்னவனே நினைப் பணித்திடுவோம்
மன மொழி மெய்யதை வளர்த்திடவே
தினமுமே சித்தியை அருளிடுவாய்

உண்மையிலே உளத்திண்மையிலே
வண்மையிலே மதி நுண்மையிலே
தன் நலம் தவறா தனிப் பெரும் வேம்படி
நன்னல மகளிர் கழகம் வளர்க

தொண்டொன்றே நமது இலட்சியமாம்
கொண்டனமே நட்பு கல்வி ஜெயம்
கண்டனமே செய்வோம் பிழையதனை
கொண்டிலோமே அச்சம் எதுவரினும்.

28 NOV 2013
28 NOV 2013
28 NOV 2013
J/Vembadi Girls' High School
LIBRARY
Acc.No.
Class No.
Date:

# நிகழ்வுகள்

✦ மங்கல விளக்கேற்றல்

✦ கடவுள் வாழ்த்து

✦ தமிழ்த்தாய் வாழ்த்து

✦ வரவேற்புரையும் தலைமையுரையும்

- செல்வி சி. திருமகள் (மாணவி)

✦ ஆசியுரை

- திருமதி க. பொன்னம்பலம் (அதிபர்)

✦ பிரதம அதிதி உரை

- **பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

தமிழ்த் துறை, பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணம்.

✦ இதழ் வெளியீடு

✦ பிரதிகள் வழங்கல்

✦ முதற்பிரதி பெறுநர்

- கல்விக் காருண்யன், பொன்மனச் செம்மல்,

**திரு E.S.P. லயன் நாகரட்ணம்.**

(தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்)

கஜமுகன் ஹாட்வெயர்,

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

✦ வெளியீட்டுரையும் மதிப்புரையும்

- **பேராசிரியர் கி. விசாகரூபன்,**

தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்.

✦ இசை - குழு

✦ நன்றியுரை

- செல்வி யோ. நிருஜா (மாணவி)

✦ கல்லூரிக்கீதம்

# வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
# தமிழ் மன்றம் - 2011
# செயற்குழுவினர்

**காப்பாளர்:**

❖ திருமதி க. பொன்னம்பலம் (அதிபர்)

**பொறுப்பாசிரியர்கள்:**

❖ திருமதி சா. வீரசிங்கம்

❖ செல்வி இ. நடேந்திரா

**தலைவர்:**

❖ திருமகள் சிலுவைதாசன்

**உப தலைவர்:**

❖ குபேரகா ஜெயக்குமார்

**செயலாளர்:**

❖ சுமித்திரா ஸ்ரீரங்கநாதன்

**பொருளாளர்:**

❖ லக்ஷிகா இராசநாயகம்

**இதழாசிரியர்:**

❖ நிருஜா யோகேஸ்வரன்

**மன்ற அங்கத்தவர்கள்:**

❖ பிரவீணா செல்வரட்ணம்

❖ வினோதா பொன்னுத்துரை

❖ புராதனி நாகையா

❖ திவ்வியபாரதி மோகனசுந்தரம்

❖ தாட்சாயினி நடராசா

❖ சபிதா சிவனேஸ்வரன்

Vembadi Girls' High School
Library
ACC. No: m/130
CLASS No: 050
DATE: 02-08-2011